# தமிழரசு

1.12.1986 ரூ. 1

சுற்றுப்புறச் சூழல்
பாதுகாப்பு மாதம்





கோவையில் 23-11-86 அன்று நடைபெற்ற முதலமைச்சரின் வீரப்பதக்கம் வழங்கு விழாவின் போது, கோவை மாவட்ட மக்கள் சார்பில் நினைவுப் பரிசு ஒன்றை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. அபுல்ஹசன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் வீரப்பதக்கம் வழங்கு விழாவின் தொடர்பாக நடைபெற்ற காவலர்கள் அணிவகுப்பை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பார்வையிட்டார்.





எம்.ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009.
நாள் : 12-11-86


நிலம், நீர், காற்று இவற்றின் தூய்மை கெடாதவாறு காக்கப்படுவதில் தான் மனித குலத்தின் எதிர்கால நல்வாழ்வு அடங்கியிருக்கிறது. இந்த உண்மை தற்போது உலக அளவில் உணரப்பட்டு வருகிறது என்றாலும் சுற்றுப்புறச் சூழலைக் காப்பதில் இன்னும் அதிகமான முனைப்பு தேவைப்படுகிறது. மரங்களையும் காடுகளையும் அழிப்பதால் தட்ப வெப்ப நிலை மாறி-மழை குறைந்து வருகிறது. நில அரிப்பு அதிகரிக்கிறது. வறட்சி பெருகுகிறது. வளம் குன்றி வருகிறது. நிலம், நீர், காற்று இவற்றை நச்சுப்பொருட்கள் மாசுபடுத்துவதால் மனித குலத்தின் ஆரோக்கியத்துக்கு பெரும் அறைகூவல்கள் எழுந்துள்ளன.

இயற்கையின் வளங்களை சீரழிக்காத முறையில் மனித வாழ்வும், தொழில் வளர்ச்சியும் அமைக்கப்படவேண்டும். தொழில் வளர்ச்சியால் ஏற்படும் பயனைவிட ஆலைகளின் கழிவுப் பொருட்களால் இயற்கைச் சூழ்நிலைக்கு ஏற்படும் பாதகம் அதிகம் என்ற நிலையை நாம் உடனடியாக தடுத்தாக வேண்டும். இவ்வாறான நமது முயற்சிகள் இன்றைய தலைமுறைக்கு மட்டுமின்றி எதிர்கால சமுதாயத்துக்கும் பாதுகாப்பு அளிப்பதாகும்.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதும், சுற்றுப்புறச்சூழல் மாசுபடாது தடுப்பதும் அரசின் சட்டங்களால் மட்டும் இயலக்கூடிய ஒன்று அல்ல. மொத்த சமுதாயமும் விழிப்போடு இப்பணியில் ஈடுபட வேண்டும். அதற்கான புதிய எழுச்சியை மக்களிடம் உருவாக்குகின்ற பணியில் நாம் அனைவரும் நம்மை ஒப்படைத்துக் கொள்வோமாக!

எம். ஜி. ஆர்

(எம்.ஜி. இராமச்சந்திரன்)



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - கார்த்திகை 16
மலர் : 17 இதழ் : 11
1-12-1986

சுற்றுப்புறச்
சூழலைக்
காப்போம்



# சிக்கனமும் சீரான வாழ்வும்

மாண்புமிகு நிதி மற்றும் கூட்டுறவு அமைச்சர் டாக்டர் நாவலர்

## திரு. இரா. நெடுஞ்செழியன்

இன்று சிக்கனநாள். இன்றைய நாள் உலக முழுவதும் சிக்கன நாளாகக் கொண்டாடுவதற்குரிய நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாளாகும். வாழ்க்கையில் பல்வேறு வழிகளிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சிக்கனத்தின் அருமையையும், அதனால் கிடைக்கும் சேமிப்பின் பயனையும் தெளிவு படுத்தி, அவற்றை வற்புறுத்துவதற்குரிய நாள் ஆகும்.

''சிக்கன வாழ்வே சீரான வாழ்வு'' என்பதும், ''சிக்கனம் சேமிப்பு பயக்கும்'' என்பதும், ''சிக்கனம் செழிப்புதரும்'' என்பதும் ''சிக்கனத்தால் செம்மாந்து செல்லலாம்'' என்பதும் பழமொழிகள்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பொருள் அல்லது பணம் மிக முக்கியமானதொரு பங்கினை வகிக்கிறது. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்குமாறு செய்யும் பொருளையன்றி, ஒருவனுக்குச் சிறந்த பொருள் வேறொன்றுமில்லை என்னும் பொருள்பட, வள்ளுவப் பெருந்தகையார் ''பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும், பொருளல்லது இல்லை பொருள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

சிக்கனத்தின் முக்கிய நோக்கங்கள் வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமைச் செலவினை மட்டும் செய்வது, அதன் மூலம் வருவாயின் ஒரு பகுதியைச் சேமிப்பது, சேமிக்கும் பொருளை எதிர்கால நல்வாழ்வுக்குப் பயன்படுத்துவது, எதிர்காலத்தில் நலி ஏற்படும்போது, அந்த நலிவிலிருந்து மீட்டுக் கொள்வது, அச்சத்திற்கும் அயர்வுக்கும் அங்கலாய்ப்புக்கும் இடமில்லாத எதிர்காலத்தை உருவாக்குவது, என்றும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நிலையான திறனைப் பெறுவது போன்றவையாகும்.

வாழ்க்கையின் தேவையை ஒட்டி அளவோடு செலவழிப்பதற்குச் ''சிக்கனம்'' என்று பெயர். தேவைகளையெல்லாம் மீறி அளவுக்கு அதிகமாகச் செலவழிப்பதற்கு 'ஊதாரித்தனம்' என்று பெயர். தேவையை நிறைவேற்றிக் கொள்ளாமல் அளவுக்குக் குறைவாகச் செலவழிப்பதற்குக் 'கஞ்சத்தனம்' என்று பெயர். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஊதாரித்தனமும் கூடாது. கஞ்சத்தனமும் கூடாது. சிக்கன முறையே சீரிய முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

''மகிழ்ச்சிபெற சேமிப்பு'' சேமிப்பு பெறச் சிக்கனம்'' என்ற குறிக்கோள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் மிளிர வேண்டும். 1924ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31ஆம் நாளில் 'உலக சிக்கன நாள்' கொண்டாடப்பட வேண்டும் என்று, முதன் முதலாக மிலான் நகரில் அகில உலக சேமிப்பு வங்கிக்குழுவால் (International Savings Bank Congress) முடிவு செய்யப்பட்டது.

மக்களிடத்தில் சிறு சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவே 1882ஆம் ஆண்டு முதல் அஞ்சலகங்களில் சேமிப்பு வங்கிகள் துவக்கப்பட்டு, அவை சிறப்பாகவும், பரவலாகவும் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் வருவாய் குறைந்த வருவாய் ஆனாலும், நிறைந்த வருவாய் ஆனாலும், அவ்வருவாயில் ஒரு சிறு பகுதியினைச்சேமிப்பதே, சிறு சேமிப்பாகும். எனவே தான், நமது தமிழ்நாடு அரசு, ''சிறு சேமிப்பு'' எனும் தனித்துறையை, மக்களுக்கு ஏற்படுத்தி, அதன் மூலமாக மக்களிடததில சேமிக்க வேண்டும் எனும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. சிறுகச் சிறுகச் சேமிப்பது, சிறு சேமிப்பு என்றாலும், சேமிக்க வேண்டிய இடம் அஞ்சலகம்தான. எனவே இந்த அஞ்சலக சேமிப்பு தான் ''சிறு சேமிப்பு'' என அழைக்கப்படுகிறது. இச்சிறு சேமிப்பு இயக்கம், தற்போது உங்களைப பாதுகாக்கவும், உங்களது எதிர்கால வாழ்க்கையை மகிழ்வுறச் செய்யவும் உதவுகிறது. அதுமட்டுமல்லாமல் நாட்டின் வளர்ச்சிக்கும் இந்தச் சிறுசேமிப்பு நிதி பெரும் அளவில் பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் சிறு சேமிப்பினைக் கணக்கிடும் போது, 197?-73ஆம் ஆண்டில் ரூ. 20.07 கோடியாக இருந்த நிகர வசூல்.

சென்ற ஆண்டான 1985-86ல் ரூ. 192.32 கோடியாக வளர்ந்திருப்பது, மக்கள் பொருளாதாரத்தில் சேமிக்கும் அளவு உயர்ந்துள்ளதை, எடுத்துக்காட்டுகிறது. இச்சிறு சேமிப்பின் பங்கைக் கணக்கிடும்போது தனி நபர் ஒருவர் ஆண்டொன்றுக்கு ரூ. 39.74 ஆக அஞ்சலக சேமிப்பில் மட்டும் சேர்த்திருப்பது, நம்முடைய சிக்கனத்தையும், சேமிக்கும் பழக்கத்தையும் எந்த அளவில் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதைப்புரிய வைக்கிறது.

தெரிந்தவர்கள் சேமித்ததே ரூ. 192.32 கோடி என்றால் இன்னும் தெரியாதவர்களும் சேர்ந்து சேமிப்பார்களானால், இச்சிறு சேமிப்பின் வசூல் உச்ச நிலையை அடையும் என்பதில் வியப்பில்லை .எனவே நமது தமிழ் நாடு அரசு, 1986-87ஆம் ஆண்டில் சிறுசேமிப்பின் இலக்காக ரூ. 240 கோடியாக நிர்ணயம் செய்துள்ளது.

அஞ்சலகச்சிறுசேமிப்புத் திட்டம், பாமர மக்கள் முதல் பணக்கார மக்கள் வரை சேர்ந்து சேமிக்க ஏற்றதொரு திட்டமாகும். அவசியத்தேவைக்குச்சேமிப்பு வங்கிக்கணக்கு திட்டம் ( Savings Bank Account ) என்றும், பத்தும், இருபதுமாக மாதாமாதம் சேர்த்து, ஐந்து வருடங்களுக்குப் பின் ஒரு பெரும் தொகையை ஈட்ட, தொடர் வைப்புத் திட்டம் ( Recurring Deposit ) என்றும் ஈட்டிய பெருந்தொகையை மேலும் பல மடங்காக்கிப்பெறக்காலவைப்புத் திட்டம் ( Time Deposit ) என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தேசிய சேமிப்புப் பத்திரத்தில், 6வது மற்றும் 7வது வெளியீட்டில், முதலீடு செய்யும் தொகை, ஆறு ஆண்டுக்குள், இரு மடங்காவது மட்டுமல்லாமல், ரூ. 5 இலட்சம் வரையில் சொத்து வரி விலக்கு, ரூ. 40 ஆயிரம் வரையில் வருமான வரி விலக்கு, ரூ.7 ஆயிரம் வரையில் வாங்கும் வட்டிக்கும் வரிவிலக்கு மற்றும் மற்ற வங்கிகள் கொடுக்க முடியாத அளவுக்கு 12% கூட்டு வட்டி அளிப்பது, ஆகியவை அஞ்சலகச்சிறுசேமிப்பு மூலம் ஏற்படும் பயன்கள். மேலும் தேசிய சேமிப்புப் பத்திரத்திட்டத்தில் முதலீடு செய்ய வரையறை இல்லை என்பது பெரும் பணம் படைத்தவர்க்குப்பெரிய வாய்ப்பு ஆகும்.

இருந்த இடத்திலேயே சிறு சேமிப்பில் சேர, மக்களுக்குச்சேவை செய்வது, சிறுசேமிப்புத்துறை தான். இதற்காகவே தமிழ்நாட்டில் மட்டும் 10,788 முகவர்கள், மக்களுக்குச் சேவை செய்ய நியமித்திருப்பது மட்டுமில்லாமல், அம்முகவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் மக்களுக்கு ஏற்படும் நிறை, குறைகளைத் தீர்த்து வைக்கக்களப்பணி அலுவலர்கள், மற்றும் மாவட்டச்சேமிப்பு அலுவலர்கள் ஆகியோர்கள் மாவட்ட வாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்முகவர் திட்டம், மக்களிடத்தில் நேரடித்தொடர்பு கொள்ளவும், மக்களது வாழ்வுமேன்மையுறவும், சிக்கனத்தை வளர்த்துச்சேமிப்பு செய்யவும் உதவுகிறது. அது மட்டுமில்லாமல், வளரும் நமது நாட்டில் வேலையில்லாமையை ஓரளவு தீர்ப்பதோடு, அவர்களுக்குத்தன்னம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

சிக்கனம் என்ற சொல்லுக்குச்சரியான இலக்கணம் படைப்பவர்கள், படைக்க வேண்டியவர்கள் பெண்களே! பெண்கள் முயன்றால் குடும்பம் சிக்கனமாக இயங்கும். சிறு சேமிப்பும் சேரும். தன் சின்னஞ்சிறு குழந்தைக்குத்தாலாட்டுடன், சிக்கனத்தைப்பற்றிக் கூறப்போகிறவர்கள் பெண்களே. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது சான்றோர் வாக்கு. எனவே, அத்தாய் தனது குழந்தைக்கு, சிறு குழந்தையிலேயே சிக்கனத்தைப்பழக்கப்படுத்த வேண்டியது அத்தாயின் கடமை. ஒரு உண்டியலையும் காசையும் ஒருகுழந்தையிடம் கொடுத்துப்பார்த்தால் அக்குழந்தை உறுதியாக அக்காசை அவ்வுண்டியில்தான் போடும். அப்போதே அக்குழந்தை சேமிக்கத் தெரிந்து கொள்கிறது. இவ்வாறு ஐந்தில் சேமிக்க ஆரம்பித்து, உறுதியாக ஐம்பதுக்குப் பிறகும் தொடரும்.

சிக்கனம் என்பது, நேரத்தைச்சிக்கனம் பிடிப்பது, உணவில் சிக்கனம் பிடிப்பது, பணத்தில் சிக்கனம் பார்ப்பது, குழந்தைகளைப் பெறுவதில் சிக்கனம் கடைப்பிடிப்பது என்று கொள்ளவேண்டும். அப்பொழுதுதான், வளர்ச்சியடைந்து வருகின்ற நமது இந்திய நாடு உறுதியாகவளர்ச்சியடைந்து ஒரு நாடாக மாறும்; நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால், ஒவ்வொரு குடும்பமும் மகிழ்ச்சியோடும்; செல்வத்தோடும் காணப்பட வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு தலைவன் அவனது குழந்தைகளை நன்றாகப்படிக்க வைக்கவும், அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கவும், தான் வசதியுடன் குடியிருக்கவும், அவன் நலமுடன் வாழவும் உதவுவது, அவன் சிறு சேமிப்பில் சேமித்த சேமிப்புத்தான். மக்கள் சேமித்த பணம் மக்களுக்குப் பெரிதும் பயன் படுகிறது. அது மட்டுமல்ல தமிழக அரசுக்கும் பயன்படுகிறது. அந்த வகையில் சென்ற நிதியாண்டான 1985-86ல் மட்டும் ரூ. 125.44 கோடியைத்தமிழ்நாடு அரசு மத்திய அரசிடமிருந்து உதவி பெற்றுள்ளது.இவ்வாறு பெறப்படும் மூலதனம், மாநில வரவு - செலவுத் திட்டத்தில் என்னதான் அரசுக்கு நிகர வருமானமாக வணிகவரி, வாகன வரி, நிலவரி, பதிவுக் கட்டணவரி, வீட்டுவரி மற்றும் விவசாயம் போன்றவைகளில் வந்த போதிலும், துண்டு விழும் வரவு-செலவுத் திட்டத்தில் பெரும் உதவி அளிப்பதாக அமைகிறது. எனவே சிக்கன நாளான இன்று, ஒவ்வொருவரும்,தனது வாழ்வில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கக்கற்றுக்கொள்ள வேண்டும். சேமிக்க வேண்டும் என்ற சூளுரை எடுத்துக்கொள்ள வேண்டும். சம்பள நாள் வந்ததுமே, சேமிக்கும் நாள் என நினைவில் கொண்டு சேமிக்க வேண்டும். சேமிக்கின்ற மக்கள் சேமிக்காத வாழ்விலும் மகிழ்ச்சி ஏற்பட உறுதுணையாக இருக்கவேண்டும். மேலும் அதிக அளவில் சேமிக்க எல்லோர்க்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் இந்தச் சிக்கன நாள் ஏற்படுத்துவதாக!

[ உலக சிக்கன நாளையொட்டி 31.10.86 அன்று வானொலியில் ஆற்றிய உரை. ]

## உலகிலேயே...

உயிரியல் பாதுகாப்பு ரிசர்வ் பகுதிகளை ஏற்படுத்துவதற்கான நிர்வாக மற்றும் சட்டப் பூர்வமான வழிகாட்டி நெறிகளை உருவாக்கிய முதல் நாடு உலகிலேயே இந்தியா தான்.



# ஆதிதிராவிடர் நலம்பெற அரிய திட்டங்கள்

**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**

## திரு ஏ. அருணாசலம்

பன்னெடுங்காலமாக அல்லல்பட்டு வந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் விழிப் புணர்ச்சி பெற்று, சமூகப் பொருளாதார முன் னேற்றமடைந்து வருகின்றனர். இப்பணியில் நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் வழிகாட்டியாகவும், உறு துணையாகவும் இருந்து அறிய பல திட்டங் களை வளரும் தமிழகத்தில் உருவாக்கி, செயல் படுத்தி வருகிறார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக 1949-ஆம் ஆண்டில் ஒதுக்கப் பட்ட நிதி ஒரு கோடி ரூபாய்க்கும் சற்று குறைவே ஆகும். 1977-78-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டது சுமார் ரூ. 16 கோடியாகும். நடப்பு நிதியாண்டில் சற்றேறக் குறைய 48 கோடி ரூபாய் ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல், சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர் நலத் துறை அல்லாது பிற துறை களின் வாயிலாக ரூ. 120 கோடியே 76 இலட் சம் ஒதுக்கப்பட்டு, அம்மக்களுக்காகப் பயன் நல்கிடும் பல திட்டங்கள் செம்மையாக செயல் படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக் களின் வாழ்வு சிறப்பாக அமைய அவர்களுக்கு அடிப்படைத்தேவை கல்வியேயாகும். இத் துறையின் கீழ் 961 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும் 170 பழங்குடியினர் உண்டு உறை விடப் பள்ளிகளும், 765 ஆதிதிராவிடர் மற் றும் பழங்குடியினர் மாணவர்/மாணவியர் இல் லங்கள் செயல்பட்டு வருகின்றன.

விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்கட்கு அனைத்துச்சுகாதார வசதிகளும் கிடைக்கும் பொருட்டு வாடகைக் கட்டடங்களில் நடத் தப்படும் விடுதிகள் அனைத்தையும் அரசின் சொந்தக்கட்டடத்திற்குப் படிப்படியாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் வாண்டு இதற்காக ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் செலவிட இவ்வரசு உத்தேசித்துள் ளது.

இவ்வாண்டு 21 ஆதிதிராவிடர் நடு நிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக வும், 6 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், அரசு உயர்த்தியுள்ளதின் மூலம் இம்மாண வர்களுடன் மற்றைய மாணவர்களும் கணிச மான பலனை எய்திட வாய்ப்பளிக்கப்பட் டுள்ளது. மேலும் இதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 81 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை இங்குக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

இதே போல் 20 முதுநிலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களையும் 45 பட்டம் பெற்ற ஆசிரியர்களையும் புதியதாக நியமிக்க உத்த ரவு பிறப்பித்துள்ளது.

சட்டப் படிப்பு முடித்த பிறகு மாண வர்கள் தொழிலில் ஈடுபடக் கடன் மற்றும் மானியத் தொகை வழங்கி வருகின்றோம். பல்வேறு சட்டங்களின் கீழ் பயிற்சி அளிக்க ஆண்டுதோறும் 20 சட்டப்பட்டதாரிகளுக்கு 4 ஆண்டு சிறப்புப்பயிற்சி அளிக்கப்புரட்சித் தலை வர் அரசு இவ்வாண்டு முதல் தொடங்க ஆணை பிறப்பித்துள்ளது. பயிற்சி பெறு வோர் மாதம் ரூ. 500 உதவித் தொகையும், பயிற்சி அளிப்பவருக்கு, கௌரவத் தொகை ரூ. 5,000 வழங்கப்படும். இதற்கு இவ்வாண்டு ரூ. 1 இலட்சத்து 81 ஆயிரம் செலவிட, புரட்சித் தலைவர் அரசு உத்தேசித்துள்ளது.

அனைத்திந்தியப்பணிகளில் தமிழ்நாட்டி லிருந்து கணிசமான அளவு மாணவர்கள் தேர்ச்சி பெறுவதில்லை என்ற குறை பாட்டினைக்களைந்திட, சென்னையில் பட்ட தாரி மாணவர்களுக்கு சிறப்புப்பயிற்சி அளித்து அனைத்திந்தியப் பணிகளில் சேர வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் முன்னோடிப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரு கிறது. இது போன்ற முன்னோடிப் பயிற்சி நிலையங்கள் திருச்சியிலும், மதுரையிலும் இவ் வாண்டு முதல் செயல்படவுள்ளன என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

அடிப்படை வசதிகளில் ஒன்றான வீட்டு மனைப் பட்டா வழங்குதல் பாரதப் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் ஒருமித்த நோக்கமாகும். இத்திட்டத்தை,புரட்சித் தலைவர் அரசு தீவிரமாகச்செயல்படுத்தி வருகிறது. 1949 முதல் 1977 வரை 2 இலட்சத்து 62 ஆயிரம் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1977 முதல் 1986 மார்ச் வரை இதன் எண்ணிக்கை 4 இலட்சத்து 25 ஆயிரத்து 870ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாண்டில் இதற்கென ரூபாய் 1 கோடி செலவில் நில எடுப்பு செய்யப்படவுள்ளது. இதன் மூலம் 25ஆயிரம் குடும்பங்கள் வீட்டுமனை பெறுவர். இது மட்டுமல்லாமல் எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்பு மக்களுக்கும் மயானம் மற்றும் மயானப் பாதை அமைத்துக் கொடுப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இவர்களுக்கு வீட்டு மனை மட்டும் அளித்தால் போதாது. அவர்களுக்கு வீடும் கட்டித் தரப்பட வேண்டும் என்ற அரிய நோக்குடன் 'தாட்கோ' என்னும் நிறுவனத்தின் மூலம் ஒரு வீட்டிற்கு ரூ. 6 ஆயிரம் செலவில் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. மலைப் பிரதேசத்தில் ஒரு வீட்டிற்கு ரூ. 9 ஆயிரம் செலவில் வீடு கட்டப்பட்டு உதவிகள் அளிக்கப்படுகின்றன.

இது மட்டுமல்லாமல் இதுவரை தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் மூலமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் காப்புறுதித் திட்டத்தின் மூலமும் மொத்தம் 38 ஆயிரத்து 560 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு இத்திட்டங்கள் மூலம் 47 ஆயிரத்து 565 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கத் தேவையான நடவடிக்கையை இவ்வரசு மேற்கொண்டுள்ளது.**

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஆதிதிராவிடர் குடும்பங்களில் யாரேனும் ஒருவர் இறந்து விட்டால் அவர்களின் ஈமச்சடங்குக்காக இதுவரை ரூ. 50 அளிக்கப்பட்டு வந்ததை நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ரூ. 100 உயர்த்தித் தந்துள்ளார் என்பதை இத் தருணத்தில் குறிப்பிடக்கடமைப்பட்டுள்ளேன்.

ஏக பரம்பொருள் என்பதை நோக்க
எல்லாரும் உடன் பிறப்பே—ஒரு
பாகத்தார் தீண்டப்படாதவர் என்பதிலே
உள்ளதோ சிறப்பே?

என்பது பாரதிதாசனின் கவிதையாகும்.

சாதி சமய பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என இவ்வரசு தீவிரமாகச்செயல்பட்டு வருகிறது. தீண்டாமை ஒழிப்பில்கலப்புத்திருமணம்ஒரு மன மாற்றத்துக்கு அடிகோலும் என்பதை உணர்த்த மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கலப்புத் திருமணத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

## பூச்சிகளைத் திசை திருப்பப் புதிய தந்திரம்

பயிர்களை அழிக்கும் பூச்சிகளை ஏமாற்றித் திசை திருப்புவதற்கு, மின் சிக்னல்களைப் பயன்படுத்தும் நவீன முறை ஒன்றைஅமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

பூச்சிகளைப் பிடித்து, அவற்றின் உடம்பில் சிறிய மின் பொறிகளை வைத்துப் பறக்கவிட்டனர். பூச்சிகள் பறந்து செல்லும் இடங்களைப் பற்றிய விவரங்களை இந்தமின் சிக்னல்கள் மூலம் தெரிந்து கொண்டனர். பூச்சிகள் விரும்பும் வாசனைகள், விரும்பாத வாசனைகளின் விவரம் கிடைத்தது. அதைப் பயன்படுத்தி,பூச்சிகள் வெறுக்கும் வாசனைகளைப் பயிர்கள் மேல் தெளித்தனர்.பூச்சிகள் அந்தப் பக்கமே தலைகாட்டாமல், வேறு பக்கம் பறந்துவிட்டன. இந்த வாசனைப் பொருளால் மனிதர்களுக்குக் கேடு உண்டாவது இல்லை.

பழங்குடியினர் நலனுக்காக, துணைத் திட்டம் வகுக்கப்பட்டு 1976-77-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் ஒரு கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு இவ்வாண்டு ரூ.9 கோடியே 46 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் மூலம் பலமுனைத் திட்டங்கள் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காகச்செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பழங்குடி மக்கள் மீது அக்கறை கொண்டு அவ்வப்போது ஆய்வு செய்து இத் திட்டங்கள் செயல்படும் விதம் பற்றி நல்ல பல ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.

இவ்வாண்டு மதுரை மாவட்டத்தில் தோப்பூர் என்கின்ற கிராமத்தில் கூட்டுறவு நூற்பாலை தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதில் 225 ஆதிதிராவிடர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கென அரசு ரூ.1 கோடியே 5 இலட்சம் இவ்வாண்டு செலவிடுகிறது என்பதை இங்குக்குறிப்பிட விழைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்திய சத்துணவுத் திட்டம் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் வியக்கும் வண்ணம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பல இலட்சக்கணக்கான குழந்தைகள் பயன்பெற்று வருவதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் மட்டும் சுமார் 25 இலட்சம் பேர் பயனடைந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய மக்களும் சமூக,பொருளாதார மேம்பாட்டை அடைந்து ஒளிமயமான எதிர் காலத்திற்கு அவர்களை அழைத்துச் செல்ல, தாய்த் தமிழகம் அன்புக்கரம் நீட்டி அழைக்க காத்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விழைகிறேன்.

(சென்னை வானொலியில்
5-10-86 அன்று ஆற்றிய உரை)

# கொடி நாள்!

பாரதம் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள், போரில் வீர மரணம் எய்தியவர்களுக்கு மரியாதை செய்வதற்காகவும், இராணுவப் பணியிலிருக்கும் வீரர்களின் பக்கம் நாடு உள்ளது என்று வலியுறுத்தும் வகையிலும், கொடி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

'கொடி நாள்' காரணமாக வசூலாகும் நன்கொடைகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்களின் சேம நல நிதியில் சேர்க்கப்படும். இந்நிதியிலிருந்து முன்னாள் படை வீரர்களின் புனர்வாழ்விற்காகவும் அவர்களது குறைகளைத் தீர்ப்பதற்கான பல்வேறு திட்டங்களுககாகவும் நிதி உதவி கொடுக்கப்படுகிறது. 1984-85-ஆம் ஆண்டில் 6,849 முன்னாள் படை வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் 23.87 இலட்சம் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படை வீரர்களுக்குக் கடைகள் கட்டுதல், வங்கிக்கடன்களின் மீதான வட்டிக்கு உதவித் தொகை வழங்குதல் ஆகிய புனர்வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முன்னாள் படையினரும் அவர்களைச் சார்ந்தவர்களும் தங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்தத் தக்க ஊதியம் பெறும் வகையில் ரூ. 8 இலட்சம் செலவில் 263 முன்னாள் படை வீரர்கள் கடைகள் கட்டப்பட்டுள்ளன.

வங்கிக் கடன் மீதான வட்டிக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1,085 முன்னாள் படை வீரர்கள் ரூ. 72,73,000க்கான கடனுதவியைத் தொழில் செய்வதற்காக வங்கிகளிலிருந்து பெற்றுள்ளனர். அவர்கள் கொடுக்கும் வட்டியில் ஓரளவு ஈடுசெய்யும் வகையில் ரூ. 1,65,000 வட்டி உதவித் தொகையாகத் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

ரூ. 15 இலட்சம் செலவில் 12 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவுகள், முன்னாள் படையினருக்காகவும் அவர்களைச் சார்ந்தவர்களுக்காகவும் 18 தாலுக்கா/ மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள மருத்துவமனைகளில் கட்டப்பட்டுள்ளன.

பாரத விடுதலைக்குப் பின் பல்வேறு போர்களில் மாண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்களை நினைக்கவும் நன்றி செலுத்தும் வகையிலும் அவர்களின் கைம்பெண்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ. 600 வீதம் ஒரு அடையாள உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அவர்களின் மகள்களின் திருமணத்தை நடத்துவதற்கு ரூ. 1,500 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மேலும் இத்தகைய கைம்பெண்களுக்கு வீடு கட்ட ரூ. 5,000 உதவித்தொகையாக இவ்வாறு 99 கைம்பெண்களுக்கு ரூ.4,68,000 வழங்கப்பட்டுள்ளது. ஆதரவற்ற முன்னாள் படை வீரர்களின் கைம்பெண்களுக்கும் 60 வயது கடந்த முன்னாள் படை வீரர்களுக்கும் ஆயுட்காலம் வரை மாத ஒய்வூதியமாக ரூ. 50 வழங்கப்படுகிறது. இதுவரை அத்தகைய 123 முன்னாள் படை வீரர்கள் / முன்னாள் படை வீரர் கைம்பெண்களுக்கு ஒய்வூதியமாக ரூ. 8,47,000 வழங்கப்பட்டுள்ளது.

1-1-1964-க்கு முன்பு ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்களின் கைம்பெண்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள். அத்தகைய கைம்பெண்களுக்கு உதவும் வண்ணம் மாதந்தோறும் ரூ. 50 வழங்கப்படுகிறது. அவர்களின் குழந்தைகளின் பராமரிப்புக்காக ரூ. 10 இரண்டு குழந்தைகள் வரை வழங்கப்படுகிறது. இதுவரை அத்தகைய 1,331 கைம்பெண்களுக்கு ரூ. 14.47 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

படை வீரர்கள் முன்னாள் படை வீரர்களின் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குத் தையற்பயிற்சி அளிப்பதற்காக ரூ. 1,93,451 செலவிடப்பட்டுள்ளது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒரு புதிய திட்டத்தின் கீழ், தொழுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படை வீரர்/கைம்பெண்கள் 43 பேருக்கு மாதம் ரூ. 50 வீதம் அவர்களது ஆயுட்காலம் வரை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

காசநோய் தொழுநோய்/ புற்றுநோயால் பாதிக்கப்பட்டு நல ஆக்க நிலையங்களில் சிகிச்சை பெறும் முன்னாள் படை வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தினப்படி செலவுத் தொகை ரூ. 1.50-லிருந்து ரூ. 2.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்னாள் படை வீரர்களின் ஈமக்கிரியை உதவித்தொகை ரூ. 150 லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வேறெந்த வகையிலும் நிதியுதவி பெறாத - முழுவதும் பார்வையற்ற முன்னாள் படை வீரர்களுக்கு மாதந்தோறும் ரூ. 50 நிதியுதவி அளிக்கும் திட்டமொன்றும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறையினால் நடத்தப்படும் பல்வேறு தையற்பயிற்சிப் பிரிவுகள், இதுவரை 4,888 முன்னாள் படை வீரர்களைச் சார்ந்த பெண்களுக்கு, அவர்கள் சுயவேலை வாய்ப்பினைப் பெற உதவும் வகையில் பயிற்சி அளித்துள்ளன. இத்திட்டத்திற்காக ரூ. 1.93 இலட்சம் 1984-85-ல் செலவிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 358 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.


இத்துறையால் நடத்தப்படும் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையங்களில் 760 பேருக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 120 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ. 17,240 செலவிடப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்குத் தமிழ்நாட்டில் வேலையில்லாப் பிரச்சனையைச் சுலபமாகச் சமாளிக்கவும், தமிழ்நாட்டிலிருந்து போர்ப்படையில் சேருவோரின் எண்ணிக்கையை உயர்த்தவும் துறை, முகாமுக்கு 100 மாணவர்களைக் கொண்ட பயிற்சி முகாம்களை எல்லா மாவட்டங்களிலும் நடத்தியுள்ளது.

துறையில் செயல்படும் சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவு மூலமாக 1-4-84 முதல் 30-6-85 வரை 911 முன்னாள் படை வீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

ரூ. 37 இலட்சம் செலவில் வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் தஞ்சாவூரில் தற்போதுள்ள படைவீரர் மாளிகைகளைத் தவிர ரூ. 15 இலட்சம் செலவில் மதுரையில் கட்டப்பட்டுள்ள படை வீரர் மாளிகை 2-10-1985 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது. ரூ.7.60 இலட்சம் செலவில் சிவகாசியில் படை வீரர் மாளிகை கட்டப்பட்டுள்ளது.

முன்னாள் படை வீரர் இயக்கக வளாகம் என்று பெயரிடப்பட்ட பலமாடிக் கட்டடம் ஒன்று சென்னையில் ரூ. 40.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 10-7-85 அன்று தமிழக ஆளுநரால் திறக்கப்பட்டது.



மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை, தெற்கு பிராந்திய இராணுவத் தளபதி திரு ரஞ்சித் சிங் அவர்கள் 6.11.86 அன்று முதல்வர் அவர்களின் இல்லத்தில் சந்தித்தார்.

# படமும் செய்தியும்




'கில்டு ஆப் சர்வீஸ்' சமூக சேவை நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் (29-11-86) கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அந்நிறுவனத்திற்கு, புதிய கட்டடம் கட்ட ரூ. 2 இலட்சத்தை தமது சொந்தப் பணத்திலிருந்து நிதியாக வழங்கினார். விழாவில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்களும் கலந்து கொண்டார்.




சென்னையில் 13.11.86 அன்று நடைபெற்ற உலக சிக்கன நாள் விழா - ஐக்கிய நாடுகள் விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறுசேமிப்புப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கினார்.




ஆந்திர மாநிலத்தின் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு ஜி. நாராயண ராவ் அவர்கள் மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் அவர்களையும், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்களையும், 11.11.86 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

ஐரோப்பியக் குழு உறுப்பினர்கள் (European Community Commission) மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்களை 17.11.86 அன்று சந்தித்து, தமிழகத்தில் ஆடு வளர்ப்புத் திட்டம் பற்றி உரையாடினர்.



சென்னை தியாகராய நகரில் 19.11.86 அன்று நடந்த 33-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவில் மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் ஊனமுற்றவர்களுக்கு உபகரணங்களை வழங்கினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம், எம்.சி.சி. வங்கியின் தனி அலுவலர் திரு வெ. மோகன கிருட்டிணன் ஆகியோர் உடன் உள்ளனர்.



# புதுவைக்குப் புகழ் சேர்த்த புண்ணிய பாரதி



-தண்டமிழ்ப்பித்தன்

ஆம்! இது பொய்யல்ல! புதுவைக்குப்பாரதியாரால் பெரும் புகழ் சேர்ந்தது என்பதில் ஐயமில்லை. பலவிதத்தும் புதுவை மண்ணின் புதல்வன்போல் பாரதி தமது வாழ்க்கையின் ஒரு பகுதியைப் புதுவையிலேயே செலவிட்டார்.

கவிதை, அரசியல், ஆன்மீகம், புரட்சி இவ்வாறாகப் பல துறைகளிலும் அமரகவி பாரதியின் அரும்பணிகள் கலந்து விரவிக் களி நடனம் செய்தன.

புதுவை அவருக்கு என்றென்றும் கைம்மாறு செய்யக் கடமைப் பட்டதாகவே உள்ளது.

பாரதியாரின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஒரு புதிய புதிராகத் தான் இருக்கும்.

பாரதியாரே ஒரு பள்ளி ஆசிரியராக இருந்து பணியாற்றியவர். அந்த ஆசிரியருக்கே ஒரு ஆசிரியர் ஏற்பட்டார் என்றால் வியப்பு எழாமலா இருக்கும்!

பிரெஞ்சு மொழியைப் பயிலுவதற்கு விருப்புற்றார் பாரதியார்.

அதற்காக ஒரு துவக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியராக் இருந்த புருகுவேன் என்பவரை அமர்த்திக் கொண்டார்.

பின்னர் அந்துவான் அர்லோக் என்பவரிடம் பிரஞ்சு தேசீய கீதத்தைத் திறம்பெறக் கற்றார்; தெளிவுறக் கற்றார்.

அந்துவான் அர்லோக் அவர்கள் தேசீய கீதம் பாடுவதில் மிக்ச் சிறப்பு வாய்ந்தவர்.

அத்தேசிய கீதத்தையே வழிகாலாகக் கொண்டு நமது இந்திய நாட்டின் விடுதலை முழக்கத்திற்கு ஏற்றதாகத் தக்கதொரு தமிழ்ப் பாடலை ஆக்கினார் பாரதியார்.

அந்துவான் அர்லோக்கை 'பிரெஞ்சு வாத்தியாரே' என்றுதான் பாரதியார் அழைப்பது வழக்கம்.

சுதந்தரத்துவம், சமத்துவம், சகோதரத்துவம் என்கின்ற மூன்று உன்னதமான குறிக்கோள்களைக் கொண்ட் நாடு பிரான்சு என்பது யாவரும் அறிந்ததே.

அந்த முத்தான மூன்று வாக்கியங்களையும் அரசாங்கத்தின் எல்லா முகவரி ஏடுகளின் முகப்பில் முன்னணியில் பொறித்து அதன் அடியில்தான் தங்கள் செய்திகளை அரசுத் துறையினர் வரைவார்கள்.

அதே மூன்று கொள்கைகளும் நமது நாட்டின் விடுதலைக்கும் தாரக மந்திரங்களாக அமைய வேண்டும் என்று பாரதியார் எண்ணியதில் தவறே இல்லை.

ஆங்கில அடக்குமுறையினால் எத்தகைய துன்பங்கள் நேர்ந்தாலும் சுதந்தரம் அடைந்தே தீருவது என்றல்லவா நமது தேசத் தலைவர்கள் முயன்றிருந்தார்கள்!

புதுவை கிரிக்கட் சங்கத்தின் நிர்வாகத் தலைவர்கள் மூவருள் ஒருவராக விளங்கியவரும் அந்துவான் அர்லோக் அவர்களே யாவர்.

மற்றைய இருவரில் ஒருவர் பெயர் **அடைக்கலாதன் அர்லோக்** என்பதும் இன்னொருவர் பெயர் **ஜேம்சு சாமுவேல்** என்பதும் ஆகும்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் திறமையாளர்கள்.

வயலின் வாசிப்பதில் ஜேம்சு சாமுவேல் மிகவும் தேர்ச்சி உடையவர்.

இச்செய்தியை அறிந்த பாரதியார் தமது வீட்டில் தாம் பாடும் பொழுதெல்லாம் தம்முடன் சாமுவேல் அவர்களையே வயலின் வாசிக்கும் வண்ணம் ஈடுபடுத்திக் கொண்டார்.

தாழ்த்தப்பட்டோரிடம் பாரதியார் கொண்டிருந்த நட்புக்கும் பரிவுக்கும் பல நிகழ்ச்சிகள் உண்டு.

அப்படிப்பட்டவற்றில் தோட்டியும் தமக்குத் தோழனே (துப்புரவுத் தொழிலாளி) என்று காட்டிய தீவிரம் நினைவுறத்தக்கது.

புதுச்சேரியில் பெயர்வாய்ந்த பெரியோர்களுக்கு இணையாகப் பெயர் பெற்ற பொல்லாதவர்களும் நிறைந்திருந்தனர் என்பது வரலாற்று உண்மை.

நகரசபைத் தேர்தல் காலங்களில்தான் அப்பொல்லாதவர்களின் ஆர்பாட்டங்களை அதிகமாகப் பார்க்க முடியும்.

சில தருணங்களில் அவர்களில் சிலரும்கூட தேர்தலில் வேட்பாளராக நிற்பர்.

அவ்வாறு நிற்பவர்கள் ஊர் மக்களையெல்லாம் கதிகலங்க வைத்து விடுவார்கள்.

தேர்தல் வந்தது என்றால் பெரும்பாலும் ஊர் முழுவதுமே இனந்தெரியாத அமைதியில் மூழ்கி விடும்.

மாலைக் கதிரவன் மறைய வேண்டியதுதான் தாமதம். மக்கள் எல்லோரும் தத்தம் வீடுகளிலேயே முடங்கி விடுவார்கள்.

அத்துணை அளவு பயமும், அச்சமும், நடுக்கமும் நிலவும்.

கொலை, கொள்ளை என்றெல்லாம் சொல்வதற்குரிய பொருள்களை விளக்கம் அளித்துக் காட்டுவன தேர்தல் காலங்களே.

அத்தகைய அச்சத்திற்கு அணியாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்கிய ஒருவர்தாம் **தம்பலா** என்றழைக்கப் பெற்றவர். இவர் துப்புரவுத் தொழிலாளர் சமூகத்தின் தலைவரும் ஆவார்.

இவரின் பெயரைக்கேட்டாலே மக்கள் அச்சம் கொள்வர்.

இவரும் தேர்தலில் வேட்பாளராக நின்றுள்ளார்.

ஆனால் நமது கவிச்சிங்கம் பாரதியார் அவரின் வீட்டிற்கே போய்வரவும், நேரில் சந்தித்து உரையாடவும் விரும்பினார்.

அவர்தம் விருப்பத்தை திரு ரா. கனகலிங்கம் அவர்கள் நிறைவேற்றினார்.



மேலண்டை புல்வார் என்ற அகன்ற சாலையில் சுண்ணாம்புக் காளவாய் என்னும் இடத்தில் ஒரு பெரிய மாடி வீட்டில் குடியிருந்த தம்பலாவைக் காண பாரதியாரும் கனகலிங்கமும் புறப்பட்டனர்.

பெரும் கொடூரமானவர் என்றும், பயங்கரவாதி என்றும் எல்லோராலும் கருதவும், பேசவும் இலக்கானவர் அந்தத் துப்புரவுச் சமூகத் தலைவர்.

தம்பலா அவர்கள் சாராயக் கடை, கள்ளுக்கடை, சாக்கனாங் கடை முதலியவற்றைக் குத்தகைக்கு எடுத்தும் நடத்தி வருபவர்.

விவசாயத்திலும் ஈடுபாடு கொண்டவர்.

மகாகவியும் கனகலிங்கமும் தம்பலாவின் வீட்டை அடைந்த போது அவ்வீட்டின் கதவும் தாளிடப் பெற்றிருந்தது.

கதவைத் தட்டுவதற்கோ கனகலிங்கத்திற்குக் குலை நடுக்கம் என்றாலும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

நம் கவியரசர் அவ்வீட்டின் வாயிலின் இருபுறத்திலும் ஒட்டியிருந்த ஒட்டுத்திண்ணைகளில் ஒன்றின்மீது உட்கார்ந்துகொண்டு

''கனகலிங்கம்! கதவைத்தட்டு! சீக்கிரமாகப் பார்த்துப் பேசிவிட்டுப் போவோம்!'' என்று ஆணையிட்டார்.

சீடர் தயங்கினார். பாரதியார் அதைக் கண்டு கொள்ளாமல் மீண்டும் சற்று உரத்த குரலில் பணித்தார்.

வேறு வழியின்றிக் கனகலிங்கம் கதவைத் தட்டினார்.

கபாடம் திறந்தது. ஆனால் தம்பலா அவர்கள் வீட்டில் இல்லை.

தம்பலாவின் துணைவியார் தாம் தாள் திறந்தார்கள்.

''யார் வேண்டும்?'' என்ற வினாவை எழுப்பிய அம்மையாருக்கு,

''தம்பலா வேண்டும்!'' என்ற பதிலை, பட்டென்று பகர்ந்தார் பாரதியார்.

''அவர் கழனிக்குப் போயிருக்கிறார்! வரும் சமயந்தான் இது! சற்று உட்காருங்கள்,'' என்று கூறிவிட்டுத் தம்பலாவின் மனைவியார் தம் அலுவல்களைக் கவனிக்கச் சென்று விட்டார்.

அம்மையார் உள்ளே செல்வதற்கும் தம்பலா வெளியிலிருந்து வருவதற்கும் சரியாகிவிட்டது.

பாரதியாரைப் பார்த்த அச் சமூகத் தலைவர் வணக்கம் கூறினார்.

'என்னைத் தெரியுமா' என்றார் கவிஞர் பெருமான்.

'ஓ! தெரியுமே! நீங்க சுதேசிக் காரங்கதானே?' என்றார் தம்பலா.

பாரதியாருக்கு ஒருபுறம் வேதனை இருந்தாலும் 'அப்படியென்றால் நீங்கள் பரதேசிக் காரங்களா?' என்று எதிர்க் கேள்வியை எழுப்பினார்.

தம்பலா மௌனம் சாதித்தார்.

பாரதியார் எவ்வளவு சொல்லியும் எதிர்ப்புறத்தில் உள்ள ஒட்டுத் திண்ணையில் கவிஞருக்குச் சமமாக உட்கார மறுத்து விட்டார் தம்பலா.

அதற்கு மாறாகத் தரையில் மேல்துண்டைப் போட்டு உட்கார்ந்து, மேலே தலையைத் தூக்கிக் கவியரசரை நோக்கிய வண்ணம் வெகு அடக்கத்தோடு பணிவன்பாகப் பேசிக் கொண்டிருந்தார்.

பின்னர், கவிஞரும் கனகலிங்கமும் விடை பெற்றுத் திரும்பினர்.

திரும்பும்போது வழியில், ''பார்த்தாயா கனகலிங்கம்! தம்பலா எவ்வளவு மரியாதையாகவும், அடக்கம் உள்ளவனாகவும் நடந்து கொண்டான்?, யாரையும் நாம் நெருங்கிப் பார்த்தால்தான் உள்ளே இருக்கும் நல்ல குணங்கள் தெரியும்! அவர்களையும் நாம் திருத்த வேண்டும் என்றால் நாமும் அவர்களை மதித்து நேசிக்க வேண்டும்!

''இப்படிப்பட்டவர்களையெல்லாம் அவர்கள் போக்கிலேயே விட்டு விட்டால் சமுதாயம் கெட்டு விடாதா?'' என்று கூறினார்.

இந்நிகழ்ச்சி பாரதியாரின் பரந்த நோக்கைப் படம்பிடித்துக் காட்டிற்று என்றால் மிகையல்ல.

பாரதியாரை முதன் முதலில் கண்டு நட்புக்கொண்ட குவளைக் கண்ணன் அவர்கள், புதுவை கலவை சுப்புராயச் செட்டியார் பள்ளியில்தான் பயின்றார்.

திருக்குலத்துக் கனகலிங்கமும் அவருடன் சேர்ந்து படித்தவர்தான்.

பள்ளிக்கு வரும்பொழுது 'அங்கவஸ்திரம்' (மேல்துண்டு) போர்த்திக் கொண்டு, அரையில் ஒரு நான்கு முழம் வேட்டியைக் கட்டிக் கொண்டு, நெற்றியில் நாமம் சாற்றிக் கொண்டு வைணவச் சிறுவன் நான்தான் என்பதைப் பறைசாற்றும் வண்ணம் இருப்பாராம் குவளைக் கண்ணன்.

பிற்காலத்தில் அவர் நீதி மன்றத்தில் பெருமாள் தீர்த்தம் (துளசி தீர்த்தம்) குற்றவாளிகளை விசாரணை செய்யும் முன்பு சத்திய வாக்கு வாங்கும் பொழுது அவர்களுக்குக் கொடுக்கும் பணியை ஆற்றியுள்ளார்.

இவர்களுடன் படித்த பள்ளித் தோழர்களில் ஒருவரான ராயல் ரெட்டி என்பவரும் பாரதியாரின் தொடர்பு கொண்டு இந்தியா பத்திரிகையில் ஊழியராகவும் இருந்துள்ளாராம்.

இவ்வாறு புதுவை பற்றியும் அங்குள்ள மக்களைப் பற்றியும் ஆயும் பொழுது பாரதியாரைப் புதுவையே பெற்றெடுத்ததோ அல்லது புதுவைக்காகவே பிறந்து வந்த தவப்புதல்வரோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

பாரதியாருடன் நெருங்கிப் பழகாத பண்டையோர்களைத் தேடிப் பிடிப்பதுதான் புதுவையில் அரிதுபோலும் என்று சிந்திப்பதில் எள்முனையும் தவறில்லை.

# மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

**கங்காதர்தாஸ், இ.ஆ.ப.,**
தலைவர்
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு
வாரியம்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கப் பலமுனை நடவடிக்கை தேவைப்படுகிறது. பள்ளிப் பருவத்தில் இயற்கைச் சூழல் பற்றிய கல்வியிலிருந்து, அணுயுகத்தால் விளையும் தீமைகளைத் தடுப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இதில் அடங்கியுள்ளன. சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரிடையேயும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது, சுற்றுப்புறச் சூழல் மேலாண்மையின் முக்கிய அம்சமாகும்.

சுற்றுப்புறச் சூழலின் தன்மை பற்றிய மக்களின் உணர்வு சுற்றுப்புறச்சூழலுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைத் தடுக்க, எவ்வாறு உதவுகின்றது என்பதற்கு நான் ஒரு உதாரணம் கூறுகிறேன். 1969ஆம் ஆண்டு அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறை இருபத்தேழாயிரம் டன், நரம்புகளைப் பாதிக்கும், மிஞ்சிய, வாயு மற்றும் பிற இரசாயன ஆயுதங்களை, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் கொட்ட எண்ணியது. இந்த ஆயுதங்கள், பயன்படுத்தியதுபோக மிஞ்சியவையானாலும், அவைகள் மிகவும் பயங்கரமானவை. பாதுகாப்புத்துறையின் இந்த எண்ணம் பற்றிய அறிவிப்பிற்கு, காங்கிரஸ், நாளேடு மற்றும் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. இதன் விளைவாக, பென்டகன், முதல் கட்டமாக இந்த நடவடிக்கையை நிறுத்தியது. பின்னர், இரசாயன ஆயுதங்களைக் கடலில் எளிதாக வெளியேற்றுவதற்குப் பதிலாக, சில வாயுக்களைச் செயலற்றதாக்கி வெளியேற்றும் வகையில் திட்டத்தை மாற்றியமைத்தது. தேசிய விஞ்ஞானக் கழகத்தின் ஒரு குழு வெளியிட்ட அறிக்கையின் பேரில், ஆயுதங்களை அகற்ற, தீமை குறைந்த முறைகளைப்பற்றி ஆய்வு செய்யவும் பாதுகாப்புத்துறை ஒப்புக் கொண்டது.

சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காப்பது பற்றிய கருத்து இந்தியாவுக்குப் புதிதல்ல. வாழ்வின் ஆதார அமைப்பில், இயற்கையும் மனித இனமும் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்பதை இதிகாச காலங்களிலிருந்து அறிவோம். நமது மூதாதையரின் கருத்துப்படி இந்த அமைப்பு, நிலம், நீர், காற்று, தாவரம் மற்றும் விலங்கினம் என்ற ஐந்து பகுதிகளைக் கொண்டதாகும். இவைகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டும், ஒன்றையொன்று சார்ந்தும் உள்ளன. இந்தியாவின், பண்டையகால வாழ்க்கைத் தத்துவம் மற்றும் வாழ்க்கை ஆதார அமைப்பில், சுற்றுப்புறச் சூழல், ஓர் முக்கிய பங்கு வகித்தது. இந்தியாவில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்காகத் தற்போது கொடுக்கும் முக்கியத்துவம் பண்டைய இந்தியாவில் உணர்ந்திருந்த உண்மையை மீண்டும் வெளிக்கொண்டு வந்ததைத் தவிர புதியதல்ல.

தொழில்துறையில் செய்முறையின் போது, திட, திரவ, வாயுக் கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. தொழிற்சாலை எல்லையிலிருந்து வெளிவரும் கழிவுநீர், தொழிற்சாலை சம்பந்தப்பட்டது அல்ல என்ற ஒரு கருத்து மாசுக் கட்டுப்பாட்டுச்சட்டங்கள் இயற்றப்படும் வரை, நிலவி வந்தது. அதாவது, சுற்றுப்புறச் சூழலில் அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றித் தொழிற்சாலைகள் எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக நீர், நிலம் மற்றும் காற்று போன்ற பொது ஆதாரங்களைப் பாதிப்பது என்ற சமுதாயப் பிரச்சினை ஏற்படலாயிற்று.

சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கா வண்ணம், சுற்றுப்புறச் சூழலின் ஆதாரங்களில் கழிவுகளை வெளியேற்றும் வகையில், இந்தப் பிரச்சினை தொழிற்சாலையின் எல்லைக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்பதே இந்த மாசுக்கட்டுப்பாட்டுச் சட்டங்களின் மூலக்கருத்து ஆகும். அதாவது தொழிற்சாலை தனது கழிவுகளைச் சுற்றுப்புறச் சூழல் ஆதாரங்களில் வெளியேற்றுவதற்கு முன்பு அதனைச் சமுதாயத்திற்குப் பாதுகாப்பாக இருக்கும் வகையில் வெளியேற்ற வேண்டும்.

இன்றைய தொழிலக அரங்கின் தனிச்சிறப்புகளில் ஒன்று இரசாயனத் தொழிற்சாலைகளின் விரைவான முன்னேற்றமாகும். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட தொழில்துறை முன்னேற்றத்தை எடுத்துக் கொண்டால், ஆரம்ப காலங்களில் உலோகங்கள் சார்புடைய தொழில்கள் முன்னேற்றமும், பின்பு இரசாயனத் தொழில் முன்னேற்றமும், அதன் பின்னர் மின்னணுத் தொழிற்சாலை

## ஓஸோன் வாயு

பூமியைச் சுற்றியுள்ள 'ஓஸோன்' வாயுவின் தூய்மையைப் பாதுகாப்பதில், அனைத்துநாட்டு ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான சர்வதேச ஒப்பந்தமொன்று ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் ஐ.நா.சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1985 மார்ச் 22-ந் தேதி ஏற்படுத்தப்பட்டதாகும். உலகின் 24 நாடுகளும், 'ஐரோப்பியச் சமுதாய' அமைப்பும், அமெரிக்காவும், ரஷியாவின் இரு குடியரசுகளும் இந்த உடன்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளன.

'ஓஸோன்' என்பது மனிதன் சுவாசிப்பதற்கு அத்தியாவசியமான பிராணவாயுவின் ஒரு வகையே. சூரியனிடமிருந்து வரும் புற ஊதாக் கதிர்களின் தீயவிளைவுகளை 'ஓஸோன்' தடுத்து விடுகிறது.

ஓஸோன் வாயுவை நச்சுப் படுத்தக்கூடிய பொருட்களை வாயு மண்டலத்தில் கலக்க விடாமல் தடுப்பதற்கு இந்தச் சர்வதேச உடன்பாடு வகை செய்கிறது. ஓஸோனைப் பாதிக்கக் கூடிய 'குளோரோ புளோரோ கார்பன்' என்னும் இரசாயனப் பொருளை விமானங்களில் எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கு அமெரிக்கா 1977-ஆம் ஆண்டிலேயே தடை விதித்துள்ளது.

முன்னேற்றமும் ஏற்பட்டது. ஆனால் அதற்குமாறாக, வளர்ந்து வரும் நாடுகளில், வெவ்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட வெவ்வேறு தரப்பட்ட தொழில் முன்னேற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படாமல், எல்லா வகைப்பட்ட தொழில்களும் ஒரே சமயத்தில் முன்னேறத் தொடங்கியுள்ளன.

சமுதாயத்தின், உணவு உடை, வீடு மற்றும் நல்வாழ்வின் தேவைகளை இரசாயனத் தொழில்துறை பூர்த்தி செய்கின்றது. தீங்கு விளைவிக்கக் கூடிய எண்ணற்ற இரசாயனப் பொருட்கள் இறுதி நிலைப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ அல்லது மூலப் பொருளாகவோ அமையும் வகையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த அளவுகள் மேலும் அதிகரிக்கும். சில இரசாயனப் பொருட்கள், சுற்றுப்புறச் சூழலில் நச்சுத்தன்மை கொண்ட பொருட்களை வெளியேறக்கூடிய, தீப்பற்றக்கூடிய, வெடிக்கக்கூடிய மற்றும் பெருங் கேட்டினை விளைவிக்கின்ற கிரியைகளை ஊக்குவிக்கும் தன்மை உடையன. அதனால் இப்படிப்பட்ட விளைவுகளைத் தவிர்த்துப் பாதுகாப்பளிக்கும் முறைகளை இரசாயனத் தொழிற்சாலைகள் கையாளுவது அவசியமாகும்.

தொழிற்சாலைகளின் திட்டக் காலத்திலேயே உள்ளடக்கிய பாதுகாப்பு அமைப்புகள், பழுதுறாச் சாதனங்கள், நல்ல கிரியா ஊக்கிகள், பிரச்சினை ஏற்படுத்தும் பகுதிகளில் தகுந்த உறுப்புகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவைகள் பற்றித்திட்டமிடப்பட வேண்டும். மேலும் காலந் தவறா பாதுகாப்பு ஆய்வு மற்றும் தகுந்த பயிற்சியாளர்களை அமர்த்துவதும் வலியுறுத்தப்பட வேண்டும். தொழிற்சாலைகளில் இரசாயனப் பாதுகாப்புக்காக தகுந்த பயிற்சி பெற்ற ஆட்களை நியமிப்பதில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கடைப்பிடிக்கக் கூடாது. இரசாயனப் பொருட்கள் பாதுகாப்பு, தொழிற்சாலையின் மேலாண்மையில் ஒரு அம்சம் ஆகும்.

சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி என்பது ஒரு நாகரிக மோகமல்ல. மனித இனம் நீண்ட காலம் தழைத்து வாழ இது ஓர் அவசியமாகும். சீனப் பழமொழி ஒன்று உண்டு. "நீ ஒரு வருடத்திற்குத் திட்டமிட எண்ணினால் நெல்லைப் பயிரிடு: நீ, பத்தாண்டுக் காலத்திற்குத் திட்டமிட எண்ணினால் ஒரு மரத்தை நடு; மற்றும் நீ நூறு ஆண்டு காலங்களுக்குத்திட்டமிட எண்ணினால் கல்வி அறிவு புகட்டு;" சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரிடையேயும் ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது அவசியமாகிறது.



## நகர வாழ்வு மிகுந்த கேடு நிறைந்தது!

"தூய நறும் காற்றும், தூய்மையான குடிநீரும், இறைவன் மனிதருக்கு அருளிய விசேட நன்கொடைகள். அவற்றின் விலை மதிப்பு நாம் அளவிட முடியாத ஒன்று. இவற்றை அசுசிப்படுத்தும் அலுவல்தான், நாகரீகம் மிகுந்த பட்டணங்களில், மிகவும் கிரமமாக, இப்பொழுது நடைபெற்று வருகின்றது. பட்டணங்களில் கிளம்பும் புழுதி தூசி, மோட்டார் வாகனங்களிலிருந்து கிளம்புகின்ற பெட்ரோல் வாயு, இரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகின்ற வாயுக்கள், ஆலைகள், புகைவண்டிகள் கக்கும் புகை ஆகிய யாவும் சேர்ந்து, நுரையீரல் நோய்கள் பலவும் தோன்றப் பெருங் காரணங்கள் ஆகின்றன.

"மூக்கு எதற்காக அமைந்திருக்கின்றது? இவ்வகைப் புழுதிகளும் நாற்றங்களும் நுழைவதற்கா? மனித வாழ்விற்கு வேண்டற்பாலதாய உணவைக் கொள்ளுதற்கு, இரண்டு நுழைவாயில்கள், படைப்பில் அமைந்திருக்கின்றன. ஒன்று மூக்கு, மற்றொன்று வாய். மூக்கின் வாயிலாகச் செல்லும் காற்றும், இன்றியமையாத உணவேயாகும். சோற்றுணவினுங் காற்றுணவே மிகச் சிறந்தது. "மீனுக்கு நீர், மனிதனுக்குக் காற்று" என்பது ஆன்றோர் மொழி. அக்காற்றுக்குரியதாய் அமைந்துள்ள மூக்கில் நகரங்களிலும், ஒரு சில கிராமங்களிலும், என்னென்ன பீடைகள் நுழைகின்றன! இக் கழிவுகள் மூக்கின் வாயிலாக நுழைந்து, நுரையீரலில் நிலை பெற்றால் அவ்விடம் என்னவாகும்? அது சாக்கடையாகுமன்றோ? அச் சாக்கடையில் புழு நெளிதல் இயல்பன்றோ? இவ்வாறு, நகர்வாழ் மக்களின் உயிர்ப்பு நிலை மிகவும் கெடுகின்றது."

தமிழ்த் தென்றல் திரு. வி. க.

## கிருமியை எதிர்க்கும் தாவரங்கள்

நோய்க் கிருமிகள் தாக்கினாலும், அதனால் பாதிக்கப்படாமல் தாக்குப்பிடித்து நிற்கக்கூடிய தாவரங்களை உருவாக்குவதில், வாஷிங்டன் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் வெற்றியடைந்துள்ளனர். மரபியல் நுட்பத்தில் இது ஒரு மைல் கல்லாகும்.

'வைரஸ்' எனப்படும் நோய்க்கிருமிகள் ஆண்டுதோறும் ஏராளமான தாவரங்களைத் தாக்கி நாசமாக்கி வருகின்றன. இதனால் கோடிக்கணக்கான பணம் இழப்பு ஏற்படுகிறது. இதனைத் தடுக்க விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.

பரவலாகக் காணப்படுகின்ற 'டொபாக்கோ மொசேக் வைரஸ்' எனப்படும் நோய்க்கிருமிகளிலிருந்து மரபு அணுக்களைப் பிரித்தெடுத்து, அவற்றை நன்கு செழிப்பாக உள்ள தாவரத்தின் செல்களுக்குள் புகுத்துகின்றனர்; அந்த மரபு அணுக்களின் மூலம் அத்தாவரம 'நோய் எதிர்ப்புச் சக்தியைப்' பெறுகிறது. வைரஸ் தாக்குதலினின்று காக்கப்படுகின்றது. இந்நோய் எதிர்ப்புச்சக்தியானது அந்தத் தாவரத்தோடு நின்று விடாமல், அதன் விதை மூலம் உருவாகக்கூடிய அதன் சந்ததிகளுக்கும் பரவுகிறது.





முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

# சுற்றுப்புறம் காக்கக் கற்றுக் கொள்வோம்



— மு. முத்துக்காளத்தி

மனிதன் தனது சுயநலத்துக்காகச் செய்துவரும் காரியங்களால் இன்று இயற்கையே அழிந்துவிடும் ஆபத்து உண்டாகியிருக்கிறது. அவன் சுரண்டிச் சுரண்டி, உலக வளங்கள் வறண்டு வருகின்றன.

நகரங்கள் நரகங்களாகின்றன. அடிப்படை வசதியின்றி, வாழ்க்கை துடிப்பதைப் பார்க்கிறோம். குடிப்பதற்கும் நல்ல நீர் இல்லை.

மனித குலத்தின் இன்னொரு பகை: புகை. மனிதன் விடும் புகை, தொழிற்சாலைகளின் விஷப்புகை. அதன் விளைவு—

செடி கொடிகள் வாடுகின்றன. பறவைகள் மடிகின்றன. மக்களுக்குப் பலவித வியாதிகள் வருகின்றன. சில நேரங்களில் விஷப் புகை மக்களின் உயிரைக் குடிக்கும் விபரீதங்களையும் பார்க்கிறோம்.

நட்சத்திரப் போர், அணுசக்திப் போர் பற்றி அதிகம் பேசுகிறார்கள். அச்சப்பட்டுப் பேசுகிறார்கள். இயற்கையை அழித்து மனிதன் உலகெங்கும் அன்றாடம் நடத்தி வரும் போரை அசட்டை செய்கிறார்கள். நான் அதிகம் கவலைப்படுவது இந்தப் போரைப் பற்றித்தான்.

உலகில் பாலூட்டி இனத்தில் ஏதாவது ஒரு இனம், உலகத்திற்கு எந்தவிதப் பாதிப்பும் செய்யாமல் பூண்டற்றுப் போகக்கூடுமானால், அது மனித இனமாகத்தான் இருக்கும் என்பது என் கருத்து. ஒரு ராத்திரியில் ஒரு பெரிய காட்டை அழித்துவிட மனிதனால் முடிகிறது. ஒரு ராத்திரியில் எத்தனைச் செடிகளை அவனால் உண்டாக்க முடியும்?

இயற்கைச் சூழலைப் பாதுகாக்க, விலங்கினங்களைப் பாதுகாக்க, புதிய வனங்களைப் பயிராக்கிப் பராமரிக்க உலக மக்கள் ஒன்றுபட்டு உழைத்தால் மனித குலம் உய்வதற்கு வழி பிறக்கும். இந்தியாவில் நமக்கு இந்த நம்பிக்கை நிறைய இருக்கிறது. இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி, தம் அன்னையார் திருமதி இந்திரா காந்தியைப் போலவே, இயற்கை வளங்களைப் பேணி வளர்ப்பதில் பேரார்வம் காட்டி வருகிறார்.

பிரதமரைப் போலவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும் இயற்கைச் சூழலைப் பேணுவதிலும், மாசுக் கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்தி மக்கள் வாழ்க்கையில் சுகாதாரக் கேடு ஏற்படாமல் பாதுகாப்பதிலும் பெருங் கவனம் செலுத்தி வருகிறார். இந்த நிலைமைகள் மக்கள் பெரிதும் போற்றி வரவேற்கத் தக்கவையாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

ஒலியால் ஏற்படும் வலி ஒரு பக்கம். நரம்புத் தளர்ச்சிக்கு மக்கள் பலியாகின்றனர். வாகனங்களின் இரைச்சல்..ஒலிபெருக்கிகளின் ஓயாத அலறல்... காதை அடைத்துக் கொண்டால்கூட, உபாதை குறைவதில்லை.

இந்தச் சப்தங்கள் போதாதென்று, வெடிச்சப்தமும் குடிகொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது. நல்லதுக்கும் கெட்டதுக்கும் வேட்டு வைக்கும் பழக்கம் நமக்கு உண்டு. செவிட்டுக்குக் கேட்பானேன்?

உலகில் தொழிற்புரட்சி வசதிகளை அதிகமாக்கியது. அதே சமயம் உலகத்தை வாழ்வதற்கு லாயக்கற்றதாகவும் ஆக்கிவிட்டது. pollution என்ற பிரச்சினைக்கு solution காண முடியாமல் இன்று நாடுகள் திகைக்கின்றன.

காற்று மாசுபடுவது, தண்ணீர் மாசுபடுவது, இதனால் கேடு உண்டாவது ஆகிய பிரச்சினைகள் பலருக்கும் புரிகிறது, தெரிகிறது. ஒலித்தொல்லை தெரிவதில்லை. எலித்தொல்லை புரிகின்ற அளவுக்குக்கூட மக்களுக்கு ஒலித்தொல்லை புரியவில்லை.

சுற்றுப்புற ஒலி ஒவ்வொரு பத்தாண்டுக்கும் இரட்டிப்பாகிறது. அமைதி எங்கே என்று தேடி அலைய வேண்டியிருக்கிறது. அக அமைதி இருக்கட்டும். புற அமைதியே இன்று காணக்கிடைக்காத கற்பகமாகிவிட்டது.

என் வீட்டில் குழந்தைகள் கூப்பாட்டை என்னால் தாங்கமுடியவில்லை. வெளியே வந்தால் பஸ், ரயில் இரைச்சல், பயணிகளின் வள வளவம்பு சாலைகளில் அட்டகாச அரட்டைகள். நான் எங்கே தான் ஓடுவது? என்னைப் போல் எத்தனை ஆயிரம் பேர் ஏங்கித் தவிக்கிறார்களோ?

வாய் ஒன்று, நாக்கு ஒன்று போல் காதும் ஒன்றாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே? ஒலி மிகுதியால் இதய நோய்கள், உயர் அழுத்த நோய்கள், நரம்புத் தளர்ச்சி, மூளைப் பாதிப்பு இத்யாதி சங்கடங்கள் விளைகின்றன.

விமான தளம், பஸ் நிலையம், ரயில்நிலையம் இவற்றின் பக்கத்தில் இருப்பவர்களுக்கு மனோ வியாதிகள் அதிகமாக இருக்கும்.

ஒலியைக் காது வழியாக வாங்கி மூளைக்கு அறிவிக்கும் மெல்லிழை செல்கள், அதிக சப்தத்தின் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டு, சீக்கிரத்திலேயே அந்த நபர் செவிடாகிறார்.

இயந்திர இரைச்சல் மிகுந்த இடங்களில் வேலை செய்கிறவர்கள் கேட்கும்சக்தியைச் சுலபத்தில் இழக்கிறார்கள். ஒலியைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் இருந்தாலும், செலவு கருதியும், மற்ற மக்களைத் துச்சமாக மதித்தும் அதனை நிறைவேற்றாமல் இருந்து விடுகிறார்கள்.

ஒலியை அளந்து வைத்திருக்கிறார்கள் விஞ்ஞான முறையில். 90 டிசைபல்கள் வரை மனித காது தாங்கும். அதற்கு மேல் போனால் செவிப்புலனுக்கு ஆபத்துதான். காந்தியடிகள் அந்தக் காலத்தில் ரயிலில் பயணம்

செய்யும்பொழுது காதில் பஞ்சு வைத்துக் கொள்வாராம். இப்பொழுது நாம் எல்லா நேரத்திலும் பஞ்சு வைத்துக் கொண்டு, முக்கிய செய்திகளைக் கேட்க வேண்டும்போது மட்டும் அதை எடுத்துவிடலாம்.

மென்மையான இசை உள்ளத்துக்கு இதமாக அமைந்து, உடல் நலனுக்கு மேன்மை தரும். வன்மையான இசை துன்பத்தைக் கொண்டு வரும். காட்டுக்கத்தல் இசையான rock மனிதனுக்கு shock கொடுத்து, கேட்கும் சக்தியை knock out பண்ணுகிறது. இங்கிலாந்தில் இலட்சக் கணக்கில் இளைஞர்களுக்குக் காது பழுதாகியிருக்கிறது இந்த rock இசையால்!

இயற்கையை நாம் பாதுகாக்கத் தவறினால், இயற்கை நம்மைப் பாதுகாக்கத் தவறிவிடும். இதுதான் இயற்கை நியதி.

மனிதர்கள் மனிதர்களை மட்டுமே மதிக்கிறார்கள். மற்ற உயிரினங்களை மிதிக்கிறார்கள். இந்த உலகம் எல்லா ஜீவராசிகளுக்கும் பொது. அனைவருக்கும் உரிமையுடையது. சகோதரத்துவம் நமக்குள் மட்டும் தானா? செடி கொடிகள், விலங்குகளை விலக்கிவிட்டுப் பார்க்கும் மனோபாவம் இனியாவது விலகிப் போகட்டும்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வள்ளலார் வாடினார். தேடிய கண்ணனை, பார்வை பட்ட இடத்திலெல்லாம் பார்த்தார் பாரதியார். உயிர்வாழ் இனங்கள் எல்லாவற்றுடனும் ஒத்துப்போக நாம் கற்றுக் கொள்வது ஒன்றே, உலகம் செத்துப் போகாமல் இருக்க ஒரே வழி.

விசையொடிந்த தேசத்தில் வன்மை வேண்டுமென்று, அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி 20 அம்சத் திட்டம் கொண்டுவந்தார். விழித்தெழுந்த தேசம் வீறுகொண்டு செயலாற்றிட, இளைய தலைமுறையின் எழுச்சிச் சின்னமாக விளங்கும் இன்றைய பிரதமர் திரு ராஜீவ் காந்தி, 1986ல் புதிய 20 அம்சம் தந்தார். அதில் 17-வது அம்சம், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கிறது.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க மக்களுக்கு விழிப்பூட்டவும், ஆதரவைத் திரட்டவும், இயற்கைத் தாய்க்குத் தாலாட்டவும், இயற்கைக்கு ஒத்திசைந்த வகையில் திட்டப் பகுதிகள்'' மற்றும் தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுக்கவும் அது மக்களை ஆற்றுப்படுத்துகிறது.

## மாசுக் கட்டுப்பாட்டுக்கு மத்திய அரசு நடவடிக்கை





சுற்றுப்புறச் சூழலை, தொழிற்சாலைகள் கெடுத்துவிடக்கூடாது என்பதில் மத்திய-மாநில அரசுகள் கண்டிப்பாக இருக்கின்றன. இந்த வகையில் மத்திய அரசு சில நிபந்தனைகள் விதித்தே உரிமம் வழங்குகிறது.

சுற்றுப்புறச் சூழ்நிலை கெடாமல் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் எனத் தொழிலதிபர்கள் உறுதியளிக்க வேண்டும். தொழில்கள் தொடங்கப்படும் இடத்தின் தன்மையும் கவனிக்கப்படும். சுற்றுப்புறச் சூழல்பற்றி மாநில அரசின் சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

துத்தநாகம், ஈயம், செம்பு, அலுமினியம், உருக்கு, காகிதம், பூச்சி மருந்துகள், தோல் பதனிடும் ஆலைகள் போன்ற 18 வகைத் தொழில்களுக்கு மத்திய அரசு உரிமம் வழங்க நிபந்தனை விதித்துள்ளது.

விறகுக்காக மரங்களை வெட்டுவதன் மூலம், இந்தியாவில் ஆண்டுதோறும் 15 இலட்சம் எக்டேர் பரப்புக்குக் காடுகள் அழிக்கப்படுகின்றன. வனவளம் குனறினால் மண்வளம் மங்கும். மண்வளம் மங்கினால், உற்பத்தி குறையும். இந்த வகையில் இந்தியாவில் ஆண்டுதோறும் 5 கோடி டன் உணவு உற்பத்தி குறைந்து வருகிறது.

விறகுக்குப் பதில் கெரசின் உபயோகிக்கலாம் என்று சொல்லலாம். ஆனால் அது மாற்று ஏற்பாடாக அமைய முடியாது. ஏனெனில், கெரசின் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் தற்போது அது விற்கபபடும் விலை, அதன உண்மையான விலை அல்ல. ஏழைகள் இன்னலுறக்கூடாது என்பதற்காக, இந்திய அரசு மானிய விலையில் இந்தியாவில் கெரசினை விற்பனை செய்கிறது. அதனால்தான் அதன் விலை குறைவாக இருக்கிறது. இந்த நிலை எப்பொழுதுமே நீடிக்க முடியாது.

கெரசினுக்குப் பதிலாக விறகுக்கு மாற்றுப் பொருளாகப் பழுப்பு நிலக்கரியையும் பயன்படுத்தலாம். சாண எரிவாயு தொட்டியில் எஞ்சியிருக்கும் இந்த உரத்தின் மூலம் 30 சதவிகிதம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

வெப்ப நாடுகளில் உள்ள தாவரங்கள், மருந்து தயாரிப்புக்கு ஒப்பற்ற கருவூலங்கள்.

அறுவைச் சிகிச்சையில் பயன்படுகிற வலி மரப்பு மருந்துகள், தசைத் தளர்வாக்கிகள், கருத்தடை மருந்துகள், உயர் இரத்த அழுத்தம், இரத்தப் புற்று, மலேரியா போன்ற பலவிதமான நோய்களுக்கான மருந்துகள் தாவரங்களிலிருந்தே உண்டாக்கப்படுகின்றன.

உலகில் உற்பத்தியாகும் மருந்துகளில் 25 சதவிகிதம் தாவரங்களிலிருந்தே கிடைக்கின்றன. இவற்றின் மதிப்பு பல கோடி ரூபாய்கள் இருக்கும்.

ஒவ்வோர் ஆண்டும் உலகில் 245 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்புக்குக் காடுகள் அழிக்கப்படுகின்றன. இது இங்கிலாந்து நாட்டின் மொத்தப் பரப்பளவுக்குச் சமம்.

இந்த வேகத்தில் போனால், இன்னும் 30 ஆண்டுகளில் வெப்ப நாட்டுக் காடுகளே இராது. அவற்றுடன் 440 ஆயிரம் தாவர இனங்களும் அழிந்துவிடும். இது மருந்து உற்பத்தித் தொழிலுக்கு விழக்கூடிய பெரிய அடி!

வெப்ப நாட்டுக் காடுகள் அழிவது புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தைப் பாதிக்கும். எய்ட்ஸ் என்ற பயங்கர நோய்க்கு, அமேசான் காடுகளிலுள்ள ஒருவகை ஓக் மரத்தின் கஷாயம் சிறந்த முறையில் உதவுவதாக, சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

முனிவர்களுக்கும் மூலிகைகளுக்கும், கனி வர்க்கங்களுக்கும் காயகல்பத்துக்கும் பேர் போனது புண்ணிய பாரதம். தீராத வியா

திகள் கூட சிரான பச்சிலைகளினால் பறந்து போகும். இவ்வளவு பாரம்பரியம்மிக்க நமது நாட்டில், நாட்டு மருந்துகளில் நாட்டத்தைக் கோட்டை விட்டு, எதிர் விளைவுகளை உண்டாக்கும் நவீன மருந்துகளைச் சாப்பிட்டு உடம்புக்குக் கேட்டைத் தேடிக் கொள்கிறார்கள்!

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிலதிபர்களுக்கு நல்ல ஆலோசனைகள் கூறி, வழிகாட்டி வருகிறது. தொழிலதிபர்கள் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு முன்னால், அந்தத் தொழிற்சாலைகளால் சுற்றுப்புறப் பாதிப்பு இராது என்பதற்கு, இந்த வாரியத்திடமிருந்து சான்று பெற்றாக வேண்டும். தொழிற்சாலைகளின் கழிவுகளை ஆய்வு செய்து சான்றிதழ் வழங்க, சென்னையிலும் மதுரையிலும் வாரியத்திற்குச் சோதனைச் சாலைகள் உள்ளன. திருச்சியிலும் சேலத்திலும் ஏற்படப்போகின்றன. இந்த வசதி வாய்ப்பைத் தொழிலதிபர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆதரித்து ஒத்துழைக்க வேண்டுமே தவிர, அவை கடுமையானவை செலவு வைப்பவை என்று அமலாக்காமல் இருந்துவிடுவது தேசபக்தியற்ற செயலாகும்.

எதிர்காலச் சந்ததியினர் இன்பமாக வாழ நாம் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும்.

நினைத்தால் வாழலாம்!

நிமிர்ந்தால் உயரலாம்!

மனிதனால் உண்டாக்கப்படும் பிரச்சினைகளுக்கு மனிதனால் பரிகாரம் காண முடியும். அறிவு ஒரு சிலரின் ஏகபோகம் அல்ல. அனைவருக்கும் இருக்கிறது. செயல்படுத்த முனைவோர் முன்னேறுகின்றனர். இந்தத் தன்னேரில்லாத ஆற்றல் இந்தியர்கள் அனைவருக்கும் உண்டு என்பதை நிரூபிப்போம்!

சென்னையில் கூவத்தைச் சுத்தப்படுத்தக் கோரிக்கை எழுப்புவதோடு நின்றுவிடாமல் அதற்கான ஆக்கவழிகளிலும் ஈடுபடப் பொதுமக்கள் இன்று ஆர்வம் காட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னை, ஆழ்வார்ப் பேட்டையில் எல்டாம்ஸ் ரோடு சந்திப்பிலுள்ள சி.பி. கலை மையத்தில், குழந்தைகளுக்கு இயற்கை மற்றும் சுற்றுச் சூழல் குறித்துப் போதிப்பதற்கு, குழந்தைகள் மையமும் ஒன்று உருவாக இருக்கிறது.

இந்த மையத்தில், குழந்தைகள் விஞ்ஞான அறிவு பெறும் வகையில் நூல்களும் சாதனங்களும் வைக்கப்பட்டிருக்கும்.

அடையாறு முகத்துவாரத்தில் பல அபூர்வப் பறவைகள் வந்து தங்குவதால் அந்த இடத்தின் சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாப்பதற்கும், அடையாறு முகத்துவாரத்திலிருந்து மகாபலிபுரம் வரையுள்ள கடற்கரையோரங்களில் கடலாமைகள் இடும் முட்டைகளைச் சேகரித்து, அந்த அபூர்வ கடலாமை இனம் அழிந்து போகாமல் காப்பதற்கும் உலக விலங்கின நிதியமைப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சுற்றுச் சூழல் மேம்பாட்டு மாதத்தையொட்டி, 10,000 மரக் கன்றுகளை நட, சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்துள்ளது. நட்ட மரக் கன்றுகளை ஆடு மாடுகள் மேய்ந்து விடாமல் தடுக்க, ஒவ்வொரு கன்றுக்கும் மாநகராட்சி கூண்டுகளை அமைக்கிறது. தொண்டு நிறுவனங்களும், பொதுத்துறை நிறுவனங்களும் இந்தக் கூண்டுகளுக்கு ஆகும் செலவை ஏற்றுக் கொள்ளுமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்தா ஷீலா நாயர் இ. ஆ. ப. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் சாஸ்திரி நகர், பெசண்ட் நகர் ஆகிய பகுதிகளில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப. அவர்கள் 19.11.1986 அன்று மரக்கன்றுகளை நட்டார்.

இதோ இளைஞர்கள் எழுந்து விட்டார்கள். ''எங்கள் உள்ளத்தைப்போல் இல்லத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வோம். இந்தியாவில் வீடுகள் குப்பையாக இருக்கின்றன; மாடுகள் சப்பையாக இருக்கின்றன; மனிதர்கள் தொப்பையாக இருக்கின்றனர் என்ற அவலத்தை மாற்றுவோம். உடை, நடை, உடல், வீடு, தெரு, நாடு, ஊர், உலகம் தூய்மையாக இருக்கப் பாடுபடுவோம்.


''தெரிகிறது நிலைமை. புரிகிறது கடமை. முறிகிறது சோம்பல். எரிகிறது அழுக்கு. பிளவுக்கு முழுக்கு. பிந்தினால் இழுக்கு'' என்று முந்துகிறார்கள் முனைந்து பணியாற்ற! வெற்றியன்றி வேறென்ன விளையும்?

## கண்ணீர் சிந்தும் பாறைகள்

உலகில் கண்ணீர் சிந்தும் பாறைகளை எங்காவது காண முடியுமா? சோவியத் நாட்டின் வடகிழக்கு சைபீரியாவில் யாகுத்ஸ்க் பிரதேசத்துக்கு அருகிலேயே அத்தகைய பாறைகளை ஒருவர் காண இயலும்.

லேனா நதியின் வலது கரை நெடுகிலும் 200 கிலோ மீட்டர் நீளத்துக்கு முரண்பட்ட நிலையிலான, உயரமான செங்குத்துப் பாறைகள் அமைந்துள்ளன. அந்தப் பாறைகளின் கரடுமுரடான மேற்பகுதியிலிருந்து கண்ணீர்த் தாரைகள் போல் நீர்த்தாரைகள் வழிவதைக் காணலாம். மிக அதிகமான வெப்ப நிலையிலும் அந்த நீர்த்தாரைகள் உலர்ந்து விடுவதில்லை. தொடர்ந்து அந்தப் பாறைகள் கண்ணீர் வடித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்த அதிசயக் காட்சியினால் கவரப்பட்ட சோவியத் விஞ்ஞானிகள் இதன் காரணத்தை ஆராய்ந்தார்கள். இந்தச் செங்குத்துப் பாறைகளின் பகுதிகளில் கனமான அடுக்குப் போல பாசி படர்ந்திருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் மிக அதிகமான வெப்ப நிலையில் காற்று மண்டலத்தில் ஒரு கன மீட்டருக்கு 10 கிராம் அளவுக்கு ஈரப்பதம் இருக்கிறது. இந்த வெப்பக் காற்று இந்தப் பகுதி மூடிய, பாசி படர்ந்த பாறையின் மீது படும்போது அதிலுள்ள ஈரப்பதம் குளிர்ச்சியடைந்து நீர்த் துளிகள் ஏற்படுகின்றன. அந்த நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்தே நீர்த்தாரைகள் ஏற்படுகின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பாறைகள் கண்ணீர் சிந்தும் விந்தை இதுதான்.



# வளரும் கைத்தறித் தொழில்

நீண்ட காலமாக இயங்கிவரும் கிராமியத் தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பினை மக்களுக்குப் பெருமளவில் அளித்து வருகிறது. தமிழநாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கிவருகின்றன. இதன மூலம் 13.34 இலடசம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைககிறது. தேசிய இலக்கான 60 சதவிகிதத்தைத் தாண்டி தமிழ்நாட்டை பொறுதத வரை 68% கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின கிழ் கொணடு வரபபட்டுள்ளன.

31.8.1986ல் தமிழ் நாட்டில் 1625 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள 3.79 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன. 1986-87ல் மொத்தம 20,000 கைத்தறி நெசவாளர்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கூட்டுறவு அமைப்பின் கீழ கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள தொடக்க நெசவாள கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1986-87ல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசின் பங்கு மூலதன உதவி என்னும் திட்டத்திற்காக 100 இலட்சம் நிதி ஒதுக்கத் திட்டமிடபபட்டுள்ளது. 1985-86-ல் கூட்டுறவுத் துறையின் கீழ் கைத்தறித்துணியின் உற்பத்தி 162 மில்லியன் மீட்டர்களாக இருந்தது. 1986-87ல் உற்பத்தியை 185 மில்லியன் மீட்டர்களாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

சி. மு. முனிரத்தினம்
இணை இயக்குநர் (கைத்தறி)

தமிழ் நாட்டிலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக அனுமதிக்கப் படும் ஒவ்வொரு நெசவாளர்களுக்கும் பங்கு மூலதனத் தொகை செலுத்துவதற்காகப் பருத்தி தறி ஒன்றுக்கு ரூ. 200 பட்டு மற்றும் கம்பளித் தறி ஒன்றுக்கு ரூ.250 பாலியஸ்டர் தறி ஒன்றுக்கு ரூ. 500 என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனத்தினை அதிகரிக்கும் பொருட்டு தேசீய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD) மறு நிதிஉதவி அளித்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த வங்கி, வங்கிவட்டி வீதத்தைவிட 2½% குறைந்தவட்டி விகிதத்தில் கடன் உதவி அளித்து வருகிறது. இச்சலுகையின் மூலம் தலைமை மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 7½ % வட்டியில் நடைமுறை மூதலனம் பெற்று வருகின்றன்.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் 4.38 இலட்சம் கதிர்கள் திறன் கொண்டு ஆண்டிற்கு 1.44 இலட்சம் பேல்கள் நூல் பல தரப்பட்ட வகைகளில் உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவு நூற்பு ஆலைகளில் அவ்வாறு தயாராகும் நூல்கள் கோ-ஆப்டெக்ஸிற்கு விற்கப் பட்டு அவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நெசவாளர் மையங்களில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஊத்தங்கரை, அறந்தாங்கி, தேனீ, எட்டையபுரம் மற்றும் கமுதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 5 கூட்டுறவு நூற்



நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நூல் விநியோகம்.

பாலைகள் உற்பத்தியை ஆரம்பித்துவிட்டன. இவற்றுள் எட்டையாபுரம் கூட்டுறவு நூற்பாலை பாலியஸ்டர் போன்ற ரகங்களை உற்பத்தி செய்வதற்கான நூல்களை உற்பத்தி செய்து வருகினறது.

கமுதியில் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலை, ஆதிதிராவிடர்கள் நலனுக்காகவெனறே அமைக்கப்பட்டுள்ள ஒன்றாகும். கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரைத் தலைவராகக் கொண்ட நூல் விலை நிர்ணயக் குழு நூற்பாலைகள் கோ-ஆப்டெக்ஸிற்கு வழங்கும் நூல்களின் விற்பனை வீதங்களை வரையறுக்கிறது. ஒவ்வொரு விற்பனை நிலையங்களுக்கும் தேவைப்படுகிற நூலின் அளவுகளுக்கேற்ப கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், அவைகளுக்குப் பல தரப்பட்ட எண்ணிக்கை நூல் ஒதுக்கீடு செய்து வருகிறார். தனிப்பட்ட நூற்பாலைகளிலிருந்து ஒதுக்கீடுகளை கோ-ஆப்டெக்ஸ் பல்வேறு விற்பனை நிலையங்களுக்கும் வழங்குகின்றன. இதனால் அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் தாராளமாகக் கிடைப்பதுடன், சங்கங்களில் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினையும் அளித்து வருகிறது.

இந்திய அரசின் நிதியுதவியினைக் கொண்டு தமிழ்நாடு அரசு கூட்டுறவு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்கள் காஞ்சிபுரம், ஈரோடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. இத்திட்டங்களின் மூலம் இது வரையில், 18436 கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் மூலம் 1985-86ஆம் ஆண்டில் ரூ. 663.58 இலட்சம் மதிப்புள்ள 79.46 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 766.37 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்படி திட்டங்கள் நலிநத மற்றும் செயலிழந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அச்சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை நல்கி வருகின்றன.


கோ-ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாட்டில் உள்ள 1625 பிரதம நெசவாளர் கூட்டுறவுசங்கங்களின் தலைமைச் சங்கம் ஆகும். இது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக 50%ஐ கொள்முதல் செய்து நாடெங்கிலும் உள்ள அதன் 530 கிளை விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்து வருகின்றது.

இச்சங்கம் கடந்த 1985-86ல் 60.67 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து ரூ.102.06 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்துள்ளது. மத்திய அரசின் மலிவு ரகத் துணிகளை அளிக்கும் ஜனதா ரகத் திட்டத்தினை இச்சங்கம் நிறைவேற்றிவருகிறது.

இதன்மூலம் மக்களுக்கு மலிவு விலையில் ஜனதா ரக வேட்டிகள் மற்றும் சேலைகள் லுங்கிகள் போன்றவை கிடைக்கின்றன. தவிர அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சித் துறை ஊழியர்களுக்கும் கைத்தறித் துணிகள் கடனில் விற்பனை செய்யும் திட்டத்தினையும் கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது.

கைத்தறித் துணியின் விற்பனையினைப் பெருக்குவதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் நுகர்வோருக்கு கைத்தறித் துணி வாங்குவதன் மீது தள்ளுபடி அளிப்பது ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் மானியத் தொகையை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் அரசு 20 சதவிகித சிறப்புத் தள்ளுபடியும் அளித்து வருகிறது.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தில்
பட்டுச்சேலை விற்பனை





# செங்கல் தொழில்

செங்கல் தயாரிப்புத் தொழில் குறைந்த முதலீட்டில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவல்ல ஒரு துறையாகும். இத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களில் அனைவரும் ஆதிதிராவிட, பின்தங்கிய மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவுகளைச் சார்ந்தோராகும். இவர்களுக்குக் கூடுதல் வாய்ப்புகளை உருவாக்கவும், அதிகக் கூலியினைக் கொடுக்கவும் அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தவும் 17 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை 6,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பளித்து வருகின்றன. மேலும் 1,000 தொழிலாளர்களுக்கு இவற்றின் மூலம் வேலை வாய்ப்பளிக்க உள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டிற்கு அரசு ரூ. 17.36 கோடி அளவிற்குத் தள்ளுபடி மானியமாக அனுமதி வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு 1986-87ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு இவ்வாண்டு ரூ. 25 கோடி நிதியுதவி அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், அரசு பணியாளர்கள், உள்ளாட்சி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் கைத்துறித் துணிகளை வாங்குவதற்கான கடன் வசதித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசும் தம் பணியாளர்களும் இத்திட்டத்தினைக் கொண்டு வர மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுமதிக்கென்று ஒரு தனி அமைப்பினை "கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்" என்ற பெயரில் ஏற்படுத்தி விற்பனை படிப்படியாக அதிகரித்து வருகிறது. 1986-87ஆம் ஆண்டில் குறைந்த அளவு இரண்டு கோடி அளவிற்குத் துணியினை ஏற்றுமதி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறைக்கும், இரசாயனப் பிரிவுகளுக்கும் தேவைப்படும் ஒரு பகுதி துணியினை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்குப் பாதுகாப்புத் துறையினரை மாநில அரசு அணுகியுள்ளது. முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் அடையும் பள்ளிக்கூட மாணவ மாணவியர்களுக்குக் கைத்தறிச் சீருடையினை இலவசமாக வழங்க தேவையான கைத்தறித் துணிகள் இத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

நமது மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களின் நலனுக்காகக் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் பாதுகாப்பு மற்றும் சேமிப்புத் திட்டம் என்ற நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவுக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் மொத்தமாக அனைத்து நெசவாளர்களும் கொண்டு வரப்பட்டுள்ளனர். இது வரை சுமார் 1,16,831 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் ஒவ்வொரு நெசவாளியும் தன்னுடைய கூலியில் ஒரு ரூபாய்க்கு 6 காசு சந்தாவாகவும், இவ்வகையில் அரசு ஒரு ரூபாய்க்கு 3 காசு மான்யமாக அளிக்கிறது. இதன் மூலம் சேரும் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7 சதவிகிதம் வட்டி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு நெசவாளி இறக்க நேரிட்டால் அந்த நெசவாளியின் சேமிப்பில உள்ள முழுத்தொகையும் அரசு மானியமும் அதற்குண்டான வட்டியுடன் ரூ. 3,000 ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலம் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

கோ-ஆப்டெக்ஸும் அதன் சார்பில் ரூ. 2,000 நெசவாளரின் வாரிசுதாரர்களுக்கு 1.7.1985 முதல் அளித்து வருகிறது. 1985-86ஆம் ஆண்டில் ரூ.120 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

# சிப்பிக் காளான் வளர்ப்பு முறை

காளான்கள் பல்லாண்டுகளாகச் சுவைமிக்க உணவாகக் கருதப்பட்டு வந்துள்ளன. கோவை வேளாண்மைக் கல்லூரியில் நடைபெற்ற ஆய்வுகளின் பயனாகச் சிப்பிக் காளான் சாகுபடி செய்யும் முறை உருவாக்கப்பட்டுள்ளது. காளான்களில் அடங்கியுள்ள மணம், சுவை, ஊட்டச்சத்து ஆகியவை எல்லோரையும் கவர்ந்திழுக்கும் இயல்பினைப் பெற்றிருக்கின்றன. அண்மையில் கண்டறிந்த சிப்பிக் காளான் வளர்ப்பு நுணுக்கங்கள் இக் கட்டுரையில் இடம் பெறுகின்றன.

### தட்ப வெப்ப நிலை

இக்காளான் 20 முதல் 30 டிகிரி செ.கி. வெப்ப நிலையில் வளரும். ஆயினும் 20 முதல் 25 டிகிரி செ.கி. வெப்ப நிலையில் நன்றாக வளரும். காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதத்திற்கு மேல் இருக்க வேண்டும். வெப்பநிலை கூடுதலாக இருக்கும் காலங்களில் தரையில் 6-7 சென்டிமீட்டர் உயரத்திற்கு மணலைப் பரப்பித் தண்ணீர் தெளித்து வருவதுடன் சுவரை ஒட்டி சாக்குப் படுதாக்களைத் தொங்கவிட்டுத் தண்ணீர் தெளித்து வரவேண்டும். அதன் மூலம் வெப்பநிலை குறைவதோடு, ஈரப்பதமும் அதிகரிக்கும்.


இயற்கையில் நிலவும் தட்ப வெப்ப நிலைகளை அனுசரித்து மித வெப்பப் பகுதிகளிலும் குளிர்ப் பகுதிகளிலும் சிப்பிக் காளானை வளர்க்கலாம். கூரை வேய்ந்த குடிசை, ஈரச் சூழ்நிலை நிலவும் அறை ஆகியவை இதற்கு தேவை. மலைப் பிரதேசங்களில் காளான் வளர்ப்பதற்கு 'ஆஸ்பெஸ்டாஸ்' போடப்பட்ட வீடுகளைப் பயன்படுத்தலாம்.

படுக்கைகளில் வித்துப் பரவுதலுக்கும், காளான் வளர்வதற்கும் தனித்தனி அறைகள் இருப்பது ஏற்றது. படுக்கைகளைத் தயாரித்தவுடன் வித்துப் பரவும் அறையில் உள்ள அடுக்குகளில் 20 நாட்கள் வரை வைத்திருக்க வேண்டும். இந்த அறையில் வெளி வெளிச்சமும் காற்றோட்டமும் தேவையில்லை. அதன் பின்பு காளான் வளர்வதற்கான அறையில் வெளிச்சமும் காற்றோட்டமும் அவசியம். அப்பொழுதுதான் காளான்கள் படுக்கையிலிருந்து வெளிவந்து வளரும்.

### காளான் வித்து தயாரித்தல்

சோளம், மக்காச்சேரளம், கம்பு, கோதுமை ஆகியவற்றில் ஏதாவதொரு தானியத்தை நீரில் ஓரளவு வேகும்படி கொதிக்க வைக்க வேண்டும். தானியத்தைக் கைவிரல்களுக்கிடையில் வைத்து அமுக்கினால அமுங்குகின்ற அளவுக்கு வெந்திருக்க வேண்டும். தானியங்களில் வெடிப்புத் தெரிகின்ற அளவுக்கு வேக வைக்கக் கூடாது. இதற்கு, மக்காச்சோளத்திற்கு சுமார் ஒன்றரை மணி நேரமும், சோளம், கோதுமை, கம்பு ஆகிய தானியங்களுக்குச் சுமார் ஒருமணி நேரமும் ஆகலாம். பின் நீரை வடித்து விட்டு நிழலில் உலர்த்த வேண்டும்.

ஒரு கிலோ தானியத்திற்கு 20 கிராம் வீதம் கால்சியம் கார்பனேட் கலக்க வேண்டும். பின்பு கண்ணாடிப் புட்டிகளில் முக்கால் பாகம் வரை நிரப்பி புட்டிகளைப் பஞ்சை உருட்டி இறுக்கமாக மூடி வைக்கவும். அதற்குமேல் காகிதத்தைச் சுற்றி நூலினால் கட்டி வைக்கவும். புட்டிகளை அமுக்க வெப்பமூட்டியில் (ஆட்டோகிளேவ்) 20 இராத்தல் அழுத்தத்தில் இரண்டு மணி நேரம் வைத்திருக்க வேண்டும். அமுக்க வெப்பமூட்டி இல்லையாயின் பிரஷர் குக்கரைப் பயன்படுத்தலாம். இவ்வாறு தொற்று நீக்கிய புட்டிகளை வெளியில் எடுத்து வைத்துச் சூடு தணிந்த பின் ஏற்கெனவே வைத்திருக்கும் காளான் பூசணம் வளர்ந்திருக்கும் புட்டியிலுள்ள சில தானியங்



## செருமானியப் பெண்ணின் தமிழ்ப் பாக்கள்

**செ**ல்வி உல்ரிக் நிக்கோலஸ், எம்.ஏ., செருமானிய நாட்டைச் சேர்ந்தவர். தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத்துறையில் யாப்பு பயின்றவர். அவர் பாடிய சில பாக்கள்:

1. குறள்வெண்பா:

### தமிழின்பம்

இன்றமி ழின்னிசையி லின்பந்தா னின்றி
இனிமை யினிமேலு மின்று.

2. ஆசிரியப்பா:

### வயல்வளம்

தஞ்சை சுற்றிய மருத நாட்டிலே
நெஞ்சு மகிழக் கண்கள் குளிரக்
காறறால் கலங்கிய கழனிகள்
பசுங்கடல் போலப் பரந்திருக் கின்றன.

நன்றி: தமிழ்ப்பல்கலைக்கழகச் செய்தி மலர்.

---

களைக் கம்பியைச்சூடாக்கியபின் கிளறிவிட்டுப் புதிதாகத் தயாரித்த புட்டிகளில் உட்புகுத்த வேண்டும். இவ்வாறு செய்யும் போது பிற நுண்ணுயிர்கள் உட்செல்லாதவாறு செயல்படவேண்டும். எனவே பர்னர் அல்லது விளக்கு எரியும்போது அதன்மேல் புட்டியின் கழுத்துப் பாகத்தைப் பிடித்து உட்புகுத்த வேண்டும். புட்டிகளை வைத்திருந்து புட்டிகளின் தூர்ப்பாகம்வரை காளான் பூசணம் வளர்ந்த பின்பு காளான் படுக்கை தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

**காளான் படுக்கை தயாரித்தல்**

இதற்கு வைக்கோல், கழிவுப் பஞ்சு, கழிவுக்காகிதம், கரும்புச் சக்கை போன்றவற்றைப் பயன்படுத்தலாம். வைக்கோலைச் சுமார் 3-5 செ.மீ. நீளத்தில் சிறு துண்டுகளாக வெட்டிக்கொண்டு தண்ணீரில் 4 மணி முதல் 6 மணி நேரம் ஊறவைக்கவேண்டும். பிறகு வெளியில் எடுத்து வெந்நீரிலோ நீராவியிலோ சுமார் 30 நிமிடங்கள் அமிழ்த்தி வைத்திருக்க வேண்டும். நீரை வடித்து விட்டுச் சுத்தமான சாக்குப்படுதாவில் பரப்பிவைத்து, சுமார் மூன்று மணி நேரம் நிழலில் உலர வைக்க வேண்டும். வைக்கோல் அதிக ஈரத்துடன் இல்லாமலும் காய்ந்துவிடாமலும் இருப்பது நல்லது.

காளான் வித்தினைப் புட்டியிலிருந்து வெளியில் எடுக்க வேண்டும். ஒரு வித்துப் புட்டியிலிருந்து எடுத்த வித்துக்களை மூன்று படுக்கைகள் தயாரிக்கப் பயன்படுத்தலாம். வெள்ளைப் பாலித்தீன் பைகளைப் பயன்படுத்திப் படுக்கைகளை அமைக்கலாம். பாலித்தீன் பையின் உயரம் 60 செ.மீ. அகலம் 30 செ.மீ. பாலித்தீன் பை கனமாக இருப்பதைவிட மெல்லியதாக இருந்தால் (80 காஜ்) சிறந்தது. பையின் நடுவில் ஒரு பக்கத்திற்கு ஒரு துவாரம் வீதம் ஒரு செ.மீ. அளவுள்ள துவாரங்கள் ஒரு பைக்கு இரண்டு வீதம் போட்டுக்கொள்ள வேண்டும். பையின் அடிப்பாகத்தை நூலினால் முடிந்து கொண்டு பையின் அடியில் வைக்கோல் துண்டுகளைச் சுமார் 5 செ.மீ. உயரத்திற்குப் பரப்ப வேண்டும். காளான் வித்துக்களை நான்கு சமபங்காகப் பிரித்து அதன் மேல் ஒரு பங்கினைத் தூவ வேண்டும்.

இரண்டாவது தடவையாக வைக்கோல் துண்டுகளைச் சுமார் 10 செ.மீ. உயரத்திற்குப் பரப்பியபின் காளான் வித்துக்களின் மற்றொரு பங்கினைத் தூவ வேண்டும். மூன்றாவது தடவையாக மீண்டும் சுமார் 10 செ.மீ. உயரத்திற்கு வைக்கோல் துண்டுகளைப் பரப்பி மற்றொரு பங்கு வித்துக்களைத் தூவ வேண்டும். நான்காவது தடவையாக மீண்டும் சுமார் 10 செ.மீ. உயரத்திற்கு வைக்கோலைப் பரப்பி இறுதியாக வித்துக்களைத் தூவ வேண்டும். அதன்பின் சுமார் 5 செ.மீ. உயரத்திற்கு வைக்கோல் துண்டுகளைத் தூவி விட்டுப் பையினைக் குலுக்கியபின் பையின் நுனிப் பாகத்தை நூலினால் முடிந்து வித்துப் பரவும் அறையில் உள்ள அடுக்குகளில் வைக்க வேண்டும். காளான் பூசணத்தின் வளர்ச்சி வித்துக்களிலிருந்து தோன்றிப் படுக்கை முழுவதும் பரவும். இருபது நாட்கள் வரை இதே அறையில் வைத்திருக்க வேண்டும்.

இருபது நாட்களுக்குப் பிறகு பாலித்தீன் பையினை உருவி எடுக்கவேண்டும். சிலநேரங்களில் இருபது நாட்களுக்கு முன்பே பாலித்தீன் பையினைப் பெயர்த்துக்கொண்டு காளான் மொட்டுக்கள் தோன்றுதலும் உண்டு. அவ்வாறு மொட்டுக்கள் தோன்றினால் பாலித்தீன் பையினை உடனடியாக நீக்கிவிட வேண்டும். மொட்டுக்கள், தென்படவில்லையாயின் படுக்கை தயாரித்த 21வது நாளில் பாலித்தீன் பையினை நீக்கி விட்டு, காளான் தோன்றுவதற்கான அறைக்கு மாற்ற வேண்டும். இவ்வறையில் காற்றும் வெளிச்சமும் பரவ சன்னல், கதவு ஆகியவற்றை 20-30 நிமிடங்கள் காலையிலும் மாலையிலும் திறந்து வைப்பது பயனுள்ளது. மலைப் பிரதேசங்களில் வெளிச்சம் குறைவாக இருந்தால் டியூப்லைட்டைப் பயன்படுத்தி ஒருநாளைக்குச் சுமார் ஒரு மணி நேரம் வெளிச்சம் பரவுமாறு செய்ய வேண்டும்.

படுக்கைகளைக் காளான் தோன்றுவதற்கான அறைக்கு மாற்றியபின் இரண்டு நாட்கள் தண்ணீர் தெளிக்க வேண்டாம். அதற்குப்பின் நாள்தோறும் இரு முறை படுக்கைக்கு வேண்டிய அளவு தெளிப்பான் மூலம் தண்ணீர் தெளித்து வர வேண்டும். மலைப் பிரதேசங்களில் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் படுக்கைகளின் மேல் அடிக்கடி தண்ணீர் தெளிக்க வேண்டிய நிலை ஏற்படாது.

**காளான் தோன்றுதல்**

காளான் வித்திட்ட நாளிலிருந்து சுமார் 22 முதல் 30

நாட்களில் காளான் மொட்டுக்கள் படுக்கையில் தோன்றும். மொட்டுக்கள் தோன்றியதிலிருந்து நான்கு நாட்களுக்குள் நன்கு வளர்ந்துவிடும். வளர்ந்த காளான்களை தண்ணீர் தெளிக்கு முன்னால் அறுவடை செய்ய வேண்டும். காளான் அறுவடை செய்தவுடன் படுக்கையில் வெளிப்புறத்திலிருந்து சுமார் ஒரு செ. மீ. அளவில் சுரண்டி எடுத்து விட்டுத் தொடர்ந்து தண்ணீர் தெளித்து வர வேண்டும்.

7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் மூன்று அல்லது நான்கு முறைகள் காளான் தோன்றும்.

படுக்கை தயாரிக்கப் பயன்படும் வைக்கோலின் எடைக்குச் சராசரி 40 முதல் முதல் 80 சதவிகிதம் வரை காளான் கிடைக்கும். காளான் ஒரு கிலோ ரூபாய் 17.50 முதல் ரூபாய் 25.00 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

**காளான் உணவுச்சத்து**

அறுவடை செய்தவுடன் சிப்பிக் காளானில் 2.9 சதவிகிதம் புரதச்சத்து உள்ளது. காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் உள்ள புரதச் சத்தினைக் காட்டிலும் சிப்பிக் காளானில் உள்ள புரதச்சத்து அதிகமானதாகும். காளானில் கொழுப்புச் சத்து 0.36 சதவிகிதமும் மாவுச்சத்து 5.3 சதவிகிதமும் உள்ளன. காளானில் கொழுப்புச்சத்தும் மாவுச்சத்தும் மற்ற உணவுப் பொருட்களைக் காட்டிலும் குறைவாகவே உள்ளன. எனவே நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் காளான்கள் சிறந்த உணவுப் பொருளாகப் பயன்படுவதாகப் பலராலும் கருதப்படுகின்றன.

**காளான் வளர்ப்புக்கான பயிற்சி**

காளான் வித்து தயாரித்தல், காளான் வளர்த்தல் ஆகியவற்றுக்கான பயிற்சி கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பயிர்ப்பாதுகாப்பு ஆய்வு மையத்தைச் சேர்ந்த பயிர் நோயியல் துறையில் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5ஆம் நாள் இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆடவரும் பெண்டிரும் இதனால் பயன்பெறலாம். காளான் வித்துப்புட்டிகளும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு புட்டியின் விலை ரூபாய் 2.50. சிப்பிக் காளான் வளர்ப்போரின் எண்ணிக்கை தமிழகத்தில் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும் பெருகி வருகின்றது. அதன் வழி காளான் வளர்ப்பு, வளம் பெருக்கும் குடிசைத் தொழிலாக மாறி வருகின்றது.

**தகவல்:**

**டாக்டர் கா. சிவப்பிரகாசம்·**
**பி. சலால்ராஜன்**
**டாக்டர் ஆர். செயராசன்**
**பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம், கோவை-3.**

---

# இலக்கை மிஞ்சிய சாதனை!



அரசும் வங்கிகளும் சமுதாயத்தில் நலிந்தோர்க்கு வங்கிக் கடன்களும் மானியமும் கொடுத்து நிதியுதவி அளித்து வருகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் பேருதவித் திட்டம் இன்னும் பல திட்டங்களின் மூலமாக வங்கிகளும், கூட்டுறவு நிறுவனங்களும் வழங்கும் கடன்களில் ஒரு பகுதி மானியமாகும். இது தவிர, மானியம் இல்லாத கடன்களையும் நிதி நிறுவனங்கள் வழங்குகின்றன.

1985-86-ஆம் ஆண்டிற்கு 8.57 இலட்சம் நபர்கள் பயன்பெறும் வகையில், கடன்களும் மானியங்களும் சேர்ந்து ரூ. 257 கோடி சமுதாயத்தில் நலிந்தோர்க்கு உதவுவதற்காக, வழங்க வேண்டுமெனத் திட்டம் வகுக்கப்பட்டு, அதற்குண்டான இலக்கினை நிர்ணயம் செய்து, 19 மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அரசு அதிகாரிகளின் முயற்சியாலும், வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பாலும், 1985-86ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைத் தமிழ்நாடு மிஞ்சிவிட்டது.

1985-86-ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 9.93 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளார்கள். ரூ. 305 கோடி வரை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் எய்திய திட்டச்சாதனை 116 சதவீதம் ஆகும். நிதி சாதனை 117 சதவீதமாகும்.

பெரியார், பசும்பொன் முத்துராமலிங்கம், சேலம், நீலகிரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை, காமராஜர், செங்கற்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய 11 மாவட்டங்கள் 1985-86-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட திட்ட மற்றும் நிதி இலக்கினை மிஞ்சிவிட்டன. புதுகோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கினை அடைந்து விட்டன.

பயன் பெற்றவர்களில் மானியத்தொகை இல்லாமல் கடன் பெற்றவர்கள் 7.34 இலட்சம் பேர். எஞ்சியவர்கள் கடன்கள் மற்றும் மானியத்தொகை உதவி பெற்றவர்கள் ஆவார்கள்.



# வீடு விபத்துகளின் கூடு

– மு. முத்துமுருகன்

**வீ**டு குடும்பத்துக்குப் பாதுகாப்பு என்று சொல்வார்கள். ஆனால் இந்த வீடே விபத்துகளின் கூடாகி விடுகிறது! விபத்துகள் அதிக அளவில் நடைபெறும் இடங்களில் வீடும் ஒன்று எனபது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்!

குழந்தைகள் அடிக்கடி கீழே விழுந்து முட்டி உடைத்துக் கொள்வது வீட்டில்தான். சிராய்ப்பு, கத்திக் காயம்படுவது விளையாட்டுப் பொம்மைகளே கூட வினையாகிவிடுவது இதெல்லாம் வீடுகளில் சகஜம்.

பல மருத்துவ மனைகளில் தீக் காயங்களுககாகச் சேர்க்கப்படும் நோயாளிகளில் பெரும்பாலோர் வீடுகளில் காயம் பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

காயங்களிலிருந்தும், கிருமிகளின் தாக்குதலிலிருந்தும் திசுக்களைக் காப்பாற்றுவது தோல். காயம் பட்ட இடத்தின் தன்மை, அளவு இவற்றைப் பொறுத்து அந்தக் காயத்தின் தீவிரத் தன்மை அமைகிறது. தோல் திசுக்கள் புதிதாக வளரும். இந்த இயற்கைத் தன்மையோடு நாம் 'ஆன்டிசெப்டிக்' மருந்துகளையும் பயன்படுத்தும்பொழுது, அவை காயம் ஆறுவதைத் துரிதப்படுத்துவதோடு, வியாதிக் கிருமிகள் வேறு இடங்களுக்குப் பரவாமலும் பாதுகாக்கின்றன.

வீடுகளில் சில தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதன் மூலம், விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். தீக்குச்சிகள், சூடான பாத்திரங்கள், கத்தி, கத்திரிக்கோல்கள், கருவிகள், தையல் இயந்திரங்கள், ஊசிகள் போன்றவை குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் இருக்க வேண்டும். கொஞ்சம் வளர்ந்த குழந்தைகளுக்கு, இந்தக் கருவிகளை எதற்காக, எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பாட்டில், டின் இவற்றில் என்ன இருக்கிறது என்பதை லேபிலில் எழுதி ஒட்ட வேண்டும்.

நெருப்பு, எண்ணெய், நீராவி, மின்சாரம் ஆகியவை தீ விபத்துகளுக்குக் காரணமாகின்றன. கெரசின், விறகு போன்றவற்றை ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். 'பிரஷர் ஸ்டவ்'களைப் பயன்படுத்தும்பொழுதுஅளவுக்கு மீறிய அழுத்தம் தரக்கூடாது. அதனால் ஸ்டவ் வெடிக்கலாம். 'கேஸ் சிலிண்டர்' பயன்படுத்துகிறவர்கள், சமையல் முடிந்தவுடனும், தூங்கப் போகும் போதும் கேஸை மூடிவிட மறக்கக் கூடாது.

சமையல் செய்யும்பொழுது சேலைத் தலைப்பு, வேட்டி முனை போன்றவை பறக்காதபடி மடித்துச் செருகிக்கொள்ள வேண்டும். நூல் சேலை கட்டித்தான் சமைக்க வேண்டுமே தவிர நைலான், நைலக்ஸ், டெரிலின் சேலை கட்டியல்ல. சமைக்கும் பொழுது சாமான்கள் எடுக்க வசதியாக, சமையல் பண்டங்கள் அடுப்பு மேடைக்குக் கீழே அல்லது பக்கவாட்டில் சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். எரியும் அடுப்புக்கு மேலே குறுக்காகக் கைநீட்டி எடுக்கும் வகையில் இருக்கலாகாது.



விபத்துகள் உருவாவதில்லை, உண்டாக்கப்படுகின்றன. விழிப்புடன் இருந்தால் தடுத்துவிடலாம், அல்லது விபத்தை ஒழித்தே விடலாம்.

வீட்டில் எப்பொழுதும் ஒரு முதலுதவி - மருந்துப் பெட்டி இருக்க வேண்டும். சாதாரண காயங்களுக்குக் கட்டுப் போட, ஆண்டிசெப்டிக் கிரீம்கள், பிளாஸ்டர், காஸ், பாண்டேஜ், கத்தீரி, வலி நிவாரண மாத்திரைகள் முதலியன கொண்டதே அப்பெட்டி.

காயம்-சிராய்ப்பு ஏற்பட்டால் பஞ்சை 'ஆண்டிசெப்டிக்' மருந்தில் தோய்த்து, அந்த இடத்தைத் துடைக்க வேண்டும்.

கூரான கண்ணாடி, ஊசி போன்றவை குத்தியிருந்தால் அதை நீக்க வேண்டும்.

'ஆண்டிசெப்டிக்' கிரீம் தடவுக. இதனால் அந்தக் காயத்திலிருந்து கிருமிகள் வேறுபகுதிக்குப் பரவாமல் தடுக்கலாம்.

காயம் பட்ட இடத்தைச் சுற்றிக் கட்டுப் போடுக.

துருப்பிடித்த இரும்பால் காயம்பட்டிருந்தால், டாக்டரிடம், சொல்லி 'டெட்டனஸ்' தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.




சிறு தீக்காயங்களுக்கு, 'ஆண்டிசெப்டிக் கிரீம்' தடவி, தளர்த்தியாகக் கட்டுப் போட வேண்டும். காயம் பெரியதாக இருந்தால் டாக்டரிடம் காட்டுவதே நல்லது.

அதிர்ச்சிக்குள்ளானவருக்குத் தண்ணீர் கொடுக்கலாம். காபி, தேநீர் போன்ற பானங்கள் கூடாது. ஆளை அமைதிப்படுத்த வேண்டும்.

தீயினால் ஏற்பட்ட கொப்புளங்களைத் தொடுவதோ, குத்துவதோ கூடாது. டாக்டரிடம் காட்டித்தான் சிகிச்சை பெற வேண்டும்.

## கூட்டுறவு வாரவிழா

# பத்திரிகையாளர் சுற்றுலா

ஆண்டுதோறும் கூட்டுறவு வார விழா நவம்பர் 14 ஆம் நாளிலிருந்து 20 ஆம் நாள் வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனையொட்டி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தினர் சென்னை நகரிலுள்ள சில கூட்டுறவு அமைப்புகளைப் பார்வையிட்டுப் பல தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகப் பத்திரிகை நிருபர்களை அழைத்துச் செல்வது மரபாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு நவம்பர் 7 ஆம் நாளன்று பத்திரிகையாளர்கள் அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டனர். சுற்றுப்பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலக வளாகத்தில் தனி அலுவலர் திரு மு.சுப்பையா, கூட்டுறவுப் பணிகள் குறித்து நிருபர்களிடம் விவரித்தார்:

''கூட்டுறவு வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. டெல்லியில் நடைபெற்ற கூட்டுறவு வளர்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டபோது, அங்கே மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் தமிழகத்தைப் பாராட்டினார்கள். தமிழக அரசுக்கு எழுத்து மூலமும் தெரிவித்திருக்கிறார்கள்.

''தமிழ்நாடு கூட்டுறவு, அகில இந்திய அளவில் முதலிடம் பெறுகிறது. நுகர்வோர் துறையிலும் அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.

''கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் தற்போது 9 உள்ளன. விரைவில் 10வது பயிற்சி நிலையம் சாத்தூர் அருகே உருவாக இருக்கிறது.

''சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துக்கு ரூபாய் 1 கோடியே 30இலட்சம் செலவில் புதிய கட்டடம் உருவாக்க் கொண்டிருக்கிறது.

''கிராமங்களுக்குக் கூட்டுறவு அதிகாரிகளை அனுப்பி அங்குள்ள மக்களிடம் கூட்டுறவுத் தத்துவங்களையும் கொள்கைகளையும் எடுத்துக் கூறி வருகிறோம்.

''தமிழகம் முழுதும் ஒன்றியத்திற்கு 840 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மொத்தம் 1½ இலட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றனர்.''

முதலில் திருவல்லிகேணியில் உள்ள டி.யு.சி.எஸ். கூட்டுறவுப் பண்டகசாலைக்குச் சென்றோம். அங்குள்ள சுயசேவைப் பிரிவு மனத்தைக் கவர்ந்தது. அங்கே இல்லாத பொருள் இல்லை. பலசரக்குப் பொருள் முதல் எவர்சில்வர் பாத்திரம் வரை எல்லாம் அந்த நிறுவனத்தில் கொலுவீற்றிருக்கின்றன.

''இந்தச்சுயசேவைப் பிரிவைப் பொதுமக்கள் மிக்க ஆர்வத்துடன் வந்து பயன்படுத்துகிறார்கள். விற்பனையும் தினமும் அதிகரித்து வருகிறது'' என்று குறிப்பிட்டார், தனி அலுவலர் திரு ஆர்.எஸ்.நடராஜன்.

அடுத்து செம்புதாஸ் தெருவில் உள்ள சென்னைத் துறைமுகப் பணியாளர் கூட்டுறவு வங்கிக்குச் சென்றோம். அதன் செயலாளர் திரு ஜி. சண்முகசுந்தரம் அளித்த தகவல்கள்:

''1987இல் பொன் விழாவைக் கொண்டாட இருக்கும் இந்த வங்கியில் மொத்தம் 1,150 உறுப்பினர்கள் உள்ளனர். சென்னைத் துறைமுகத்தில் நிரந்தரம் செய்யப்பட்ட அனைத்துத் தொழிலாளர்களும் இந்த வங்கியில் உறுப்பினராகச் சேர்ந்து கடன் பெறலாம்.

''தொழிலாளர்கள் வங்கிகளைப் பொறுத்தவரை, இது முதல் தரமாக-அதாவது ஏ பிரிவு வங்கியாக விளங்குகிறது. பல வகைப்பட்ட சேமிப்புத் திட்டங்களை இந்த வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

''குடும்ப நல அறுவைச்சிகிச்சை செய்து கொள்ளும் உறுப்பினருக்கு ரூ.1000 சாதாரண வட்டிக்குக் கடனாகக் கொடுத்து வருகிறது இந்த வங்கி. அசலை, உறுப்பினர்கள் 20 தவணைகளில் செலுத்தலாம். தமிழ்நாட்டிலேயே குடும்ப நலத் திட்டத்திற்காக இந்த வங்கிதான் முதன் முதலாகக் கடன் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

''நுகர்வோர் கடனாக ரூ.3500 வழங்கப்படுகிறது. இதற்கு14.2% வட்டி வசூலிக்கப்படுகிறது.''

அடுத்து, புரசவாக்கத்தில், தந்தை பெரியார் நெடுஞ்சாலையிலுள்ள புரசவாக்கம் கூட்டுறவு வங்கிக்குச் சென்றோம். வங்கித் தலைவர் டாக்டர் கே.வெங்கட்ராம் அளித்த தகவல்கள்:



''1924இல் 36 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இந்த வங்கி தற்போது 11,875 உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறது. தொடக்கத்தில் 63 ரூபாய்தான் மூலதனம்; தற்போது 3 கோடி ரூபாய்க்கு மேல் நடைமுறை மூலதனம் உள்ளது.

''1966 வரை வீட்டு அடமானக் கடன்களை வழங்கி வந்தது. பின்னர் நகைக் கடன்களை வழங்கத் தலைப்பட்டது. தற்போது, சிறுதொழில் புரிவதற்கும், ஆடு மாடு, கோழி, பன்றி வளர்ப்பதற்கும், சுயதொழில் புரிவோர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாய் அளவில் கடன்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் சிறப்பாகச் செயல்படும்

வங்கி என மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமை இந்த வங்கிக்கு உண்டு. 1970-71இல் 27 ஆயிரம் ரூபாய் நட்டத்தில் இயங்கிய இந்த வங்கி தற்போது ஆண்டுக்கு 7 இலட்ச ரூபாய் இலாபத்தை ஈட்டி வருகிறது.''

அடுத்து, வேப்பேரி, ரீதர்டன் தெருவில் இயங்கி வரும்சென்னை நகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்குச் சென்றோம்.

1912இல் சென்னைக் கூட்டுறவு வங்கி லிமிடெட் என்ற பெயரில் 22 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் தொடக்கத்தில் வங்கிப் பணிகளையே செய்து வந்திருக்கிறது. பின்னர், சென்னை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியுடன் இணைக்கப்பெற்று அதனிடமிருந்து நிதி உதவி பெற்றது. நகைக் கடன்களையும் வீட்டு அடமானக் கடன்களையும் வழங்கத் தொடங்கிற்று.

1959இல் ஆரம்பக் கூட்டுறவு வீட்டு அடமான வங்கி ஒன்று நிறுவப்பட்டு, அது வீட்டு அடமானக் கடன்களை வழங்கி வந்தது. இந்த வங்கியிடமிருந்து மேற்படி சங்கம் கடன்பெற்று, வீட்டு உரிமையாளர்களுக்குக் கடன் உதவி செய்யத் தொடங்கியது. தனது 50 ஆவது ஆண்டில் வங்கி பொன் விழாவைக் கொண்டாடியதுடன், சென்னை நகர கூட்டுறவு வீட்டு அடமானச் சங்கம் என்று தனது பெயரையும் மாற்றி அமைத்துக் கொண்டது. பின்னர் 1975 இல் சென்னை நகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் லிமிடெட் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டது.


கூட்டுறவு வீடுகளின் பதிவாளர் திரு. வைத்தியலிங்கம் தெரிவித்த தகவல்கள்:

''இந்தச் சங்கம் தனது உறுப்பினர்கள் புதிதாக வீடு கட்டிக் கொள்வதற்கும், பழைய வீடுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் பணம் கடனாகத் தந்துதவுகிறது. உச்ச கட்டமாக 80 ஆயிரம் ரூபாய் வரை கடன் கொடுக்கப்படுகிறது.

''கிராமப் புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு - அதாவது மாத வருமானம் 350 ரூபாய்க்கு மிகாமல் உள்ளவர்களுக்கு வீடு கட்டக் கடன் உதவி செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளது. இந்த வகையில் ஆண்டுக்கு 5 ஆயிரம் வீடுகள் கட்டுவது இதன் இலட்சியம். ஆனால் இந்த ஆண்டு மாண்புமிகு முதலவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆண்டுக்கு 40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார். அந்த ஆணையை நிறைவேற்றும் பணியில் இச்சங்கம் ஈடுபட்டுள்ளது.

''பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் வீடு கட்டுவதற்கு 4,500 ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. இதில் 3,000 ரூபாயை ஹட்கோ நிறுவனமும், 1,000 ரூபாயை அரசும் வழங்குகின்றன.

''இந்தத் தொகை 20 வருடங்களில் திருப்பித் தரப்பட வேண்டும். இதற்கு வட்டி 8.25% தான். மாதத்திற்கு 45 ரூபாய் கட்ட வேண்டும். இதுவரை இந்த வகையில் 2 இலட்சத்து 18 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.''




அடுத்து, எழும்பூர் கெங்கு ரெட்டி தெருவில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பார்வையில் செயல்படுகிறது இந்த இணையம்.

இணை இயக்குநர் திரு எம். முனுசாமி தெரிவித்த தகவல்களாவன:

''பனைமரத்தின் ஒவ்வொரு பகுதியும் நமக்குப்பயன்படுகிறது. இந்தியாவில் மொத்தம் 8.59 கோடி பனைமரங்கள் உள்ளன. இவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் 5.01 கோடி.

''பனை வெல்லத்தில் தயாரிக்கப்பட்ட பான வகைகளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

''அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட 14 நாடுகளுக்கு 1964 முதல் பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. துவரை 7 கோடியே 38இலட்ச ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கு மட்டும் 80 இலட்ச ரூபாய்க்கு ஆணை வந்துள்ளது.''

கூட்டுறவு வார விழா தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் சுற்றுலா -அனைவரின் கூட்டுறவின் காரணமாக - வெற்றிகரமாகவும் பயன்மிக்கதாகவும் முடிவடைந்தது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.

—நமது செய்தியாளர்



டி.யு.சி.எஸ். சுயசேவைப் பிரிவு.



# செங்கல்பட்டு மாவட்டத்தில் நவீனப்படுத்தப்படும் ஏரிகள்


**பா**சனத்திற்கும், குடிப்பதற்கும் பெரும்பாலும் ஏரிகளையும் கிணறுகளையும்தான் மக்கள் பெரிதும் நம்பி வருகின்றனர். மழைக் காலங்களில் வீணாகப் போகும் தண்ணீரைத் தேக்கி வைத்துச்சாகுபடிக்குப் பயன்படுத்தி அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. பெரும்பாலும் ஏரி, குளங்கள் நிரம்பினால்தான் கிணறுகளில் ஊற்று எடுத்து மேலே வர வாய்ப்பு உள்ளது.

ஏரிகளும், குளங்களும் நாளடைவில் தூர்ந்து போகின்றன. எனவே தூர் எடுத்து, கரைகளையும் பலப்படுத்தப்பட வேண்டும். எனவேதான் தமிழ் நாட்டில் செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு, புதுக்கோட்டை, மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 100 எக்டேருக்கு மேலும் 200 எக்டேருக்கும் குறைவான பாசன பரப்புள்ள 150 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பு உதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்டு துரிதமாக இயங்கி வருகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் துவக்கப்பட்ட இரண்டுபொதுப் பணித்துறை கோட்டங்களில் இக்கோட்டமும் ஒன்றாகும். சென்னையில் மற்றொரு கோட்டமும் இயங்கி வருகிறது.

செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள 16 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் ஏரிகளின் கரைகளை

**மூர்த்தி**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**

செப்பனிட்டு நிர்ணயிக்கப்பட்ட மட்டத்திற்கு கொண்டு வருதல், வாய்க்கால்களை சீர் படுத்துதல், மற்றும் பாசன வாய்க்கால்களில் 10 எக்டேர் நிலப்பரப்புக்கு மிகாத பிரிவுகள் வரை அகவறை செய்தல், ஏரியில் உள்ள மதகுகளை திருகாணி கதவு அமைப்புகள்



கொண்ட மதகுகளாக நவீனப்படுத்துதல், தடுப்பு அறைகள் கட்டுதல், கலங்கள் கட்டுதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் விவசாயப் பொறியியல் துறையினரால் 10 எக்டேர் நிலப்பரப்பிற்கு உட்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த சிறிய வாய்க்கால்களை, அகவறை செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் வட்டத்தில் கீழ்க்காணும் ஏரிகளின் மதிப்பீடுகளுக்கு ஏரிகள் நவீனப் படுத்தும் திட்டத்தின்கீழ் செயல்படுத்த அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வையாவூர் ஏரி | 26.95 |
| 2. | ஒலையூர் ஏரி | 26.15 |
| 3. | புத்தகரம் ஏரி | 25.90 |
| 4. | கள்ளிப்பட்டு புத்தகரம் ஏரி. | 09.53 |
| 5. | கலியனூர் ஏரி | 15.90 |
| 6. | சேக்கான்குளம் ஏரி | 12.80 |
| 7. | நாய்க்கன்குப்பம் ஏரி | 15.28 |
| 8. | தெம்மானூர் புத்தேரி | 26.95 |
| 9. | கம்பராஜபுரம் பெரிய ஏரி மற்றும் சித்தேரி | 29.32 |
| 10. | வில்லிவலம் ஏரி | 15.84 |
| 11. | மருதம் ஏரி | 13.00 |
| 12. | மாகரல் ஏரி | 30.64 |
| 13. | கீழக்காட்டூர் ஏரி | 28.50 |
| | மொத்தம் | 276.76 |

◉ மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல; அல்லது ஸ்தூல உடலுமல்ல; உணர்ச்சியா என்றால் அதுவுமில்லை. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்றுகூடினால்தான் மனிதனாகிறான். இம்மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்.

◉ உண்மையும் அகிம்சையும் மனித சமூகத்தை விட்டு விட்டுத் தனியாக உட்கார்ந்து கொண்டு அனுஷ்டிக்கவேண்டிய அறங்களல்ல. அவை மனிதவர்க்கம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய அறங்களாகும்.

◉ பாடசாலைகளும், கல்லூரிகளும் புனிதமான நிலையங்கள், அங்கே புனிதத்தன்மையற்ற இழிவான எந்தச் செயலுக்கும் இடமில்லை. பாடசாலைகளும், கல்லூரிகளும் தொழிற்சாலைகள். அங்கே சிறந்த பண்பு வாய்ந்த மனிதத்தன்மை என்னும் அரிய பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.

—அண்ணல் காந்தியடிகள்



மேலும் கீழ்க்காணும் மூன்று ஏரிகளுக்கு அரசு அங்கீகாரம் பெறும் நிலையில் உள்ளது.

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | சிறுகாவேரிப்பாக்கம் ஏரி | 20.00 |
| 2. | வேலத்தோட்டம் ஏரி | 20.00 |
| 3. | கீழப்பெருமாநல்லூர் ஏரி | 20.00 |

மேற்கண்ட 16 ஏரிகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 336.76 இலட்சமாகும். இதுவரையில் மேற்கண்ட ஏரிகள் நவீனப் படுத்தும் பணிகளுக்கென ரூ. 132.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஏரிகள் நவீனப்படுத்தும் பணிகள் 1984-85 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இவை 1987-88 ஆண்டு முடிவடையும்.

இத்திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்ட உடன் குறைந்த நீர் பங்கீட்டுடன் நிறைந்த மகசூல் பெற வழி வகுக்கும்.

செங்கற்பட்டு மாவட்டத்தைப்பொறுத்த வரை இன்னும் 5 ஆண்டுகள் கழித்து பார்த்தோமானால் எங்கும் பச்சைபசேல் எனும் வயல்காடுகள்தான் நம் கண்ணுக்குத் தென்படும். பயிர் விளைச்சலில் செங்கற்பட்டு மாவட்டம் தன்னிறைவுபெற்றுவிடும் என்பதில் ஐயமில்லை. மக்களும் சுபீட்சமாக வாழ வழியுண்டு. மிகுதியாகும் நெல்லைப் பிற மாவட்டங்களுக்கு அளிக்கவும் வாய்ப்புண்டு.

# நூல் நயம்

## உணர்ச்சிகள் உருவாக்கும் உடல் நோய்கள்

### சிகிச்சையும் தடுப்பு முறையும்

ஆசிரியர்: டாக்டர் தி.ஜெயராம கிருஷ்ணன்
பு.ஜெயச்சந்திரன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

விலை: ரூ. 25 பக்கம்: 240

'உணர்ச்சிகள் உருவாக்கும் உடல் நோய்கள்' எனும் இந்நூல் மனித உணர்வுகளையும் உணர்வுகளின் வழி வரும் நோய்களையும் அவை நீக்கப்பட வேண்டிய முறைகளையும் மிகத் தெளிவாக-எளிமையாக அழகுபட எடுத்துக் கூறுகிறது.

மனிதனின் குழந்தைப் பருவம் முதல் ஒவ்வொரு நிலையிலும் அவன் மனமும் உடலும் வளர்கின்ற முறைகளை அவற்றின் மாறுதல்களைச் சுவைபடக் குறிக்கின்றனர் ஆசிரியர்கள்.

அகமனம், அச்சநோய், அதிகார உருவம், அதீத கற்பனை, அதீதப் பணிவு, எண்ணம், ஆவேசம், இருமனப்போக்கு, இழப்பீடு, ஈகோ, உந்தல், உணர்ச்சியற்ற நிலை முதலியன நன்கு விளக்கப் பட்டுள்ளன.

தாயின் அரவணைப்பு குறைந்தால் - தாயை இளமையில் இழந்தால் ஏற்படும் குறைகளையும், தாழ்வு மனப்பான்மை பற்றியும் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

பிராய்டின் மன ஆய்வுக் கொள்கைப்படி பிரிக்கப்பட்ட, புறமனம், நடுமனம், அகமனம் மூன்று. அவை தொடர்பான செய்திகளும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

பெற்றோர், ஆசிரியர் முதலியோரிடம் ஏற்படும் கோபம், எதிர்ப்பு, வெறுப்பு முதலிய வற்றை நேரடியாக வெளிக்காட்ட முடியாதபோது தம் உணர்வுகளை வயிற்றுவலி, வாந்தி, குமட்டல், அஜீரணம், உண்ணமறுத்தல் போன்ற செயல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றன. குழந்தைகள். இவ்வுணர்ச்சிக் கட்டுப்பாடுகள் பின்னர் அவர்கள் வாழ்க்கையை எந்த அளவு பாதிக்கின்றன என்பதையும் இந்நூல் சிறப்பாகப் புலப்படுத்துகிறது.

ஒவ்வொரு நோய் தோன்றுவதற்கும் உடலியல் காரணங்கள், உளவியல் காரணங்கள் சொல்லப் பட்டுள்ளன.

ஆண்-பெண் மனநிலை, பாலுணர்வில் அதிக விருப்பம் கொள்ளுதல், அல்லது ஆர்வமின்மை, ஆண்மைக் குறைவு, இவற்றின் காரணம், விளைவு அனைத்தும் குறிக்கப்பட்டுள்ளன.

மன ஆய்வு மருத்துவம், மனோவசிய மருத்துவம், குழுவழி-குடும்ப வழி மருத்துவம் முதலிய உளவியல் மருத்துவங்களும் இந்நூலில் உண்மையிலேயே கற்போர் உள்ளங்களை ஈர்க்கும் வகையில் எழுதப்பட்டுள்ளன.

இத்தகைய அருமையான நூலை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும்.

—டாக்டர் சிவஅரசி
முத்துக்காளத்தி

## நிகழ்ந்த கதைகள்

ஆசிரியர்: லஷ்மி
வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை -600 004.

விலை: ரூ.23 பக்கம்: 307

முப்பத்தோரு சிறுகதைகள் கொண்ட தொகுப்பு இது. பெண் இனம் கொடுமைக்கு ஆளாகிய நிகழ்ச்சி ஒவ்வொரு கதையிலும் வர்ணிக்கப் பெற்றிருக்கிறது. பெண்இனம் ஆண்களால் வஞ்சிக்கப்பட்டு வருவதை இந்தக் கதைகள் எடுத்துச் சொல்கின்றன. ஒவ்வொரு பெண்ணின் வாழ்வில் ஒவ்வொரு விதமான சஞ்சலம் சூழ்ந்திருப்பதை இக்கதைகள் தெளிவாக்குகின்றன.

ஒரு கதையில் கணவன் அயோக்கியனாக இருக்கிறான்; மற்றொரு கதையில் மாமியார் கொடுமைக்காரியாகக் காட்சி தருகிறாள். மற்றொரு கதையில் பக்கத்து வீட்டு மனிதன் வில்லனாக வந்து கெடுதலை உண்டுபண்ணுகிறான். இப்படி, பெண் இனத்துக்குக் கொடுமை செய்பவர்கள் உலகெங்கும் இருக்கிறார்கள். அத்தகைய கொடுமையாளர்கள் மத்தியிலே போராடி, வெற்றி பெற்று வாழ்க்கையைச் சீராக்கிக் கொள்ளும் பெண்களும் இருக்கின்றனர் என்பதை இந்தச் சிறுகதைகளின் வாயிலாக உணர முடிகின்றது.

படிப்பு, பல பெண்களுக்குக் கைகொடுத்துள்ளது என்றும், துணிவு பல பெண்களுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தியுள்ளது என்றும், வைராக்கியம் பல பெண்களுக்கு முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளது என்றும் நூலாசிரியர் தமது அனுபவத் திறன் கொண்டு நிறுவியிருக்கிறார்.

பெண்களால் ஏமாற்றப்பட்ட சில ஆடவர்களின் கதைகளும் இதில் உள்ளன.

'வாழ்க்கைவாழ்வதற்கே' என்ற கதை - காதலில் தோல்வியுற்ற வாலிபனுக்கு அவனது தந்தையே ஆறுதல் சொல்லி, அவனை நல்வழிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இக்கதையில் வரும் அருண் மட்டுமல்ல-காதலிலே தோல்வியுற்ற, கண்கலங்கும் ஒவ்வொரு இளைஞனும் கலக்கம் நீங்கி மன வலிவு கொள்வதற்கு இந்தக் கதைகள் உதவும்.

ஒவ்வொரு கதையும் ஒரு வைர மணி; இனிய நடை-சுவையான சம்பவப் பிணைப்பு அனைத்தும் இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

## குத்தகைகள் சட்ட விளக்கம்

ஆசிரியர்: சோ.சேசாசலம்,

வெளியீடு: நர்மதா பதிப்பகம்,
10, சோமசுந்தரம் தெரு,
தியாகராயநகர், சென்னை17

விலை ரூ. 5 பக்கம்: 64

ஒருவர், தமது வீட்டை மற்றொருவருக்குக் குத்தகைக்கு விடுகிறார்; ஒருவர், வயலைக் குத்தகைக்கு விடுகிறார்; மற்றொருவர் தமது நிறுவனத்தைக் குத்தகைக்குவிடுகிறார். சில ஆண்டுகள்

கழித்து அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார். ஒருசில நேரங்களில் திரும்பப் பெற முயலும்போது, குத்தகைதாரர் திருப்பித் தர மறுக்கிறார். அப்போது குத்தகைக்குக் கொடுத்தவர் வழக்கு மன்றத்திற்குச் செல்கிறார். குத்தகை விஷயத்தில் இது போன்று பல பிரச்சினைகள் எழுவதுண்டு. அவற்றைப் பற்றித் தெரிவிக்கிறது இந்நூல்.

குத்தகை என்றால் என்ன, விளை நிலமாக இருந்தால் எத்தனை ஆண்டுக் காலம் குத்தகைக்கு விடலாம், கட்டடமாக இருந்தால் எத்தனை ஆண்டுகளுக்குக் குத்தகை விடமுடியும், குத்தகைச் சட்டம் எந்த ஆண்டு ஏற்பட்டது, குத்தகைக்கு விடுபவரின் கடமைகள், உரிமைகள் யாவை, குத்தகைதாரரின் உரிமைகள், கடமைகள் யாவை என்ற விவரங்களை ஆசிரியர் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

குத்தகைக்கும் லைசன்சுக்கும் உள்ள வேற்றுமை குறித்தும் விளக்கியிருக்கும் நூலாசிரியர் சில முக்கிய வழக்குகளைச் சான்று காட்டி, குத்தகையின் சிறப்பம்சங்களை எடுத்துரைத்திருக்கிறார். பயனுள்ள நூல் இது.

## உங்கள் மாடு சினைப் பிடிக்காதது ஏன்?

ஆசிரியர் டாக்டர். பி. போத்தி
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-690098
விலை ரூ.7.50 பக்கம் 67

மாட்டின் இன உறுப்புகளில் துவக்கி, எவ்வாறு அவை கருவுறுகின்றன, கரு வளர்ச்சி, மலட்டுத் தன்மை, கருப்பைக் கோளாறுகள், இன உறுப்புக்களைத் தாக்கும் நோய்கள் கருச்சிதைவு, செயற்கை முறை இன விருத்தி, நோய்கள் அவற்றுக்கான மருத்துவம், சோதனைக் குழாய் கன்றுகள் என்று மிக விரிவாகத் தெளிவான படங்களுடன் மாடுகள் சினைபிடிப்பது பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டு வயதில் சினைப் பிடித்து முதல் கன்று ஈனும் மாடு சுமார் எட்டு ஆண்டுகள் தொடர்ந்து கன்று ஈன்று பால் தர வல்லது.

ஆனால் மாடுகள் சினைப் பிடிக்காமல் காலம் தாழ்த்தினால் அவற்றை வளர்ப்பவர்களுக்குப் பெரும் பொருளாதார இழப்பு ஏற்படும்.

இந்நூலில் சினைப்பிடிக்காமல் இருக்கும் காரணங்கள், அவற்றைப் போக்கும் வழிகள் ஆகியவை விவரிக்கப்பட்டிருக்கின்றன.

பால் மாடுகள் வளர்த்துப் பிழைப்போருக்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

—அ. மருதவிநாயகம்.

## சோவியத் நட்புறவுப் பயணம்.

ஆசிரியர்:
திரு செ. அரங்கநாயகம்,
முன்னாள் கல்வி அமைச்சர்,
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை 98
விலை: ரூ.7.00 பக்கம் 96

சோவியத் நாட்டில் நடைபெற்ற நட்புறவு விழாவில் கலந்து கொள்ளச் சென்ற இந்திய, சோவியத் கலாசாரக் கழகத்தின் தூதுக் குழுத் தலைவராகப் பயணம் மேற்கொண்ட முன்னாள் தமிழகக் கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் எழுதியுள்ள பயணநூல்.

சோவியத் நாட்டில் பிரமுகர்கள் பார்க்கும் வழக்கமான பல இடங்களை ஆசிரியர் சுற்றிப் பார்த்தாலும், கிழக்கு சைபீரியப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்த முதல் இந்தியத் தூதுக் குழுவின் தலைவர் இவர் தானாம்.

தான் கண்ட விஞ்ஞானக் கூடங்கள், அருங்காட்சியகங்கள், சோவியத் கல்வி முறை, புகழ் பெற்ற பைகால் ஏரி, பயனீர் இயக்கம், காயிகாத் திட்டம், தொழிற்சாலைகள், மாணவர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகள், கிராம, நகர மக்களின் முன்னேற்றம் ஆகியவற்றைத் தெளிவாக எளிய நடையில் விவரித்து இருக்கிறார் ஆசிரியர்.

இந்நூலில் ஒவ்வொரு துறையிலும் அரசின் அணுகுமுறைகளையும், நிர்வாகத் திறமையையும் ஆசிரியர் பாராட்டியுள்ளார்.

—அ.ம

> **நாணயங்கள்**
>
> விலங்குகள் சில வரன்முறைகட்கு உட்பட்டே வாழ்கின்றன. வரன்முறைகளோடு வாழ்வதே நாணயம். எனவே 1986ஆம் ஆண்டில் உலக வனவிலங்கு நிறுவன (World Wildlife Fund) த்தின் வெள்ளி விழாவினையொட்டி அதன் நினைவாக அந்தந்த நாட்டுச் சிறப்பு விலங்குகள் உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட இருபத்தைந்து நாடுகள் முன்வந்து பல நாடுகள் அவ்வாறு வெளியிட்டும் விட்டன. 1985 நவம்பர்த் திங்களில் ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற விழாவில் இந்நிறுவனத்தின் தலைவரான மேன்மைதங்கிய டியூக் ஆஃப் எடின்பரோ அவர்கட்கு முதல் நாணயம் அளிக்கப்பெற்றது. 1986 ஏப்ரல் முதல் மேற்கு ஜெர்மனியிலிருந்து இந் நாணயங்கள் விற்கப்படுகின்றன. இது பற்றி மேலும் விளக்கம் வேண்டுவோர் (Editor, World Wildlife Fund, India Lalbaug Parcel, Bombay-12) என்ற முகவரிக்கு எழுதிப் பெறலாம்.
>
> தாமரை
>
> நன்றி கலைக்கதிர்

## நமது காசுகள்

ஆசிரியர்: திருமதி ரமாவேல்சாமி
வெளியீடு; நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட் 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098.
விலை. ரூ. 25 பக்கம்: 220.

ஒருவனை வாழ வைப்பதும், வறுமையில் ஆழ்த்துவதும் நாணயம்தான். மனிதனுடைய நாணயமே 'நாணயத்தில்' தான் உள்ளது. எனவே நாணயம் நாளும் நம்மை வாழவைக்கும் ஒரு அத்தியாவசியப் பொருளாகும்.

நாணயம்-காசுகள் இவற்றின் வரலாறுகள் சுவையானவை. ஒவ்வொரு வரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியவை. அந்த நோக்கில் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது.

காசுகளின் வரலாறு, வகை, பயன்பாடு, அவை எவ்வாறு தோன்றின -அவற்றின் வளர்ச்சி முதலான குறிப்புகள் இந்நூலில் ஒழுங்காகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பல்வேறு நாணயங்களின் படங்களும், நாணயக் கலைச் சொற்களும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. நாணயங்கள் பற்றி ஆராய்வார்க்கும், நாணயங்கள் சேகரிப்போர்க்கும் இந் நூல் சிறந்த கையேடு. பயனைத் தருகின்ற நூல்.

—பி.வி. கிரி

## மாணவர் பக்கம் :

# கேள்வியும் பதிலும்

**ஈயப் பாத்திரங்களை உபயோகித்துச் சமையல் செய்வது நலலதா?**

ஈயம் என்பது தனிப்பட்ட ஒரு உலோகத்தைக் குறிக்காது. வெள்ளீயமா (அதாவது Tin) அல்லது காரீயமா (அதாவது Lead) என்பதைச் சொல்ல வேண்டும்.

காரீயம் நச்சுத் தன்மை வாய்ந்தது. காரீயச் சேர்மங்கள் உடலில் கலந்தால் நாளடைவில் பெருத்த கேடுகள் விளையும். வெள்ளீயம் அப்படி அல்ல. அதனால்தான் வெள்ளீயத்தால் செய்த பாத்திரங்களைச் சிலர் உபயோகிக்கிறார்கள். முலாம் (கலாய்) பூசவும் வெள்ளீயமே பயன்படுகிறது. சிறு அளவில் இதன் உப்புக்கள் உடலில் கலந்தால் பரவாயில்லை. அதனால் தீமை இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை.

**ஈயத்தின் தன்மையை அதாவது நல்ல ஈயமா இல்லையா என்பதை எப்படிச் சுலபமாகக் கண்டுபிடிப்பது?**

அதாவது குறிப்பிட்ட உலோகம் வெள்ளீயமா, காரீயமா என்று கண்டுபிடிக்கப் பல சோதனைகள் உள்ளன. சுலபமாகச் செய்யக் கூடியது ஒன்று உண்டு. அந்த உலோகத் துண்டால் காகிதத்தில் எழுதிப் பார்க்க வேண்டும். காரீயமானால் கோடுகள் (பென்சில் கோடுகள் போல) விழும். வெள்ளீயமானால் கோடு விழாது.

**பென்சிலில் எழுதும் பகுதி காரீயத்தினால் ஆனதா? கரியால் ஆனதா? வைரம் கரியால் ஆனது என்பது உண்மையா?**

பென்சிலில் எழுதும் பகுதி ஆங்கிலத்தில் 'லெட்' என்று அழைக்கப்பட்டாலும் அது கரியால் ஆனதே. காரீயம் அல்ல. கிராபைட் என்ற கரி (Carbon) யின் ஒரு வடிவமே பென்சிலின் நடுவில் வைக்கப்படுகிறது. லெட் என்ற காரீயத்தைப் போல அது எழுதுவதால் 'லெட்' என்று அழைக்கப்படுகிறது. அவ்வளவு தான்.

கரி அதாவது கார்பன் பல வடிவங்களில் காணப்படுகிறது. அடுப்புக்கரி, கிராபைட், வைரம் எல்லாமே கார்பன்தான். இவற்றுள் முன் சொன்ன கிராபைட்டும், வைரமும் படிக அமைப்பு கொண்டவை. அதிலும் கிராபைட்டில் அடுக்கடுக்கான அணு அமைப்பு இருப்பதால் அது காகிதத்தில் எழுதக்கூடிய மென்மையைப் பெற்றுள்ளது. அதாவது ஒரு அணு அடுக்கு இன்னொன்றின்மேல சரிந்து கொடுக்கும் வகையில் இவை அமைந்துள்ளன. வைரத்தில் அப்படி அல்ல. மிகவும் பின்னிப் பிணைந்த ஒரு பெரிய அமைப்பு இருப்பதால் அது மிகவும் கடினமான பொருளாக இருக்கிறது. ஆனால் கிராபைட் வைரம் இரண்டுமே கரி என்ற கனிமம்தான். இவை தவிர கார்பன் - VI முதலிய வேறு சில கார்பன் வகைகளும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் படிக அமைப்பு ஆராயப்பட்டு வருகிறது.

நன்றி 'வானொலி'

## அறிவுச் செய்திகள்

* சைக்கிள் எனும் சொல் 1870-இல் தான் முதன் முதல் பயன்படுத்தப்பட்டது.

* உலகில் முதன்முதல் மனிதனை ஏற்றிச் சென்ற நீராவி வண்டி 1801-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் 'கார்ன்வால்' எனுமிடத்தில் ஓடியது.

* புகைவண்டிப் பாதையைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த 'ரிச்சர் டிரிவித்திக்'

* உலகிலேயே பாலஸ்தீனத்திலுள்ள 'Dead Sea' எனப்படும் சாக்கடலில்தான் உப்பு மிக அதிகமாக உள்ளது.

* கடலில் 25,000-க்கும் மேற்பட்ட மீன் இனங்கள் வாழ்ந்து வருகின்றன.

* நியூயார்க்கிலுள்ள ஐ.நா. கட்டடத்தை கட்டி முடிக்க 6,80,00,000 டாலர்கள் செலவிடப்பட்டது.

* கோலாலம்பூர் என்றால் 'மண் மேடு' என்று பொருள்.

—த.சீ. பாலு




—கவிஞர் அ. சுப்பையன்

ஒருமைப் பாடு உணர்வு வேண்டும்
ஒன்றி வாழும் தன்மை வேண்டும்!
அரவணைத்துச் செல்லுகின்ற
அன்பு உள்ளம் வேண்டும்; வேண்டும்!

சிறியோர் என்றும் பெரியோர் என்றும்
சிறிதும் பேதம் இன்றி நாளும்
பரிவுடன் சேர்ந்து வாழும் நல்ல
பக்குவம் பெற்றிடல் வேண்டும்; வேண்டும்!

இனத்தால், மொழியால், நிறத்தால் இன்று
ஏனோ இந்தப் பாகு பாடு?
குணத்தால், பண்பால், அன்பால் அன்றோ
குன்றென நிமிர்ந்து நிற்கலாம் என்றும்!

ஒருங்கிணைந்து செய்யும் செயலே
உயர்த்தும் நம்மை ஒவ்வொரு நாளும்!
நெருக்கம் இன்றி நெருடல் கண்டு
நேரிய பாதை தவறுதல் ஏனோ?





# வியர்வை ஒரு வரப்பிரசாதம்

மனித உடம்பின் வெப்பநிலை எப்பொழுதும் ஒரே சீராக இருக்க வேண்டும். கோடைக் காலத்தில் அல்லது உடற்பயிற்சி செய்யும் பொழுது, உடம்பு அதிக உஷ்ண மடையும். அதைக் குறைப்பதற்காக, தோலின் அடிப்பாகத்தில் உள்ள வியர்வைச் சுரப்பிகள் வியர்வையைச் சுரக்கின்றன. இந்த ஈரம் தோலுக்கு மேலே வந்து ஆவியாகிறது. இதனால் உடம்பின் உஷ்ணநிலை ஒரே சீராக இருக்கிறது. இவ்வாறு வியர்வை, உடம்புக்கு ஒரு 'ஏர் கண்டிஷன்' வேலையைச் செய்கிறது.

இந்த வியர்வையினால் நன்மை கிடைப்பதைப் போலவே, சில சமயங்களில் தீமையும் விளைவதுண்டு. வியர்வை ஆவியாகாவிட்டால் காற்றிலுள்ள கிருமிகள் உடம்பில் வந்து தங்கி உபத்திரவத்தை உண்டாக்கும். ஒரு விதத் துர்நாற்றம் வீசும். பக்கத்தில் வருகிறவர்கள் துக்கத்தில் ஒதுங்கிடுவார்கள்.

இந்தத் துர்நாற்றம் வீசாமல் இருக்க, வாசனைத் திரவியங்களை உடம்பில் பூசிக்கொள்ளும் வழக்கம் பழங்காலத்திலிருந்தே இருந்து வருகிறது. வாசனைப் பொடிகளை அடிக்கடி முகரும் பழக்கமும் ரோமர்களிடையே இருந்து வந்தது.

இப்பொழுதெல்லாம், வியர்வையில் கிருமிகள் வந்து தங்கும் பொழுதே அவற்றை ஒழித்துக் கட்டப் பல கிருமி நாசினிகள் வந்துவிட்டன. இவற்றால் தோலின் வனப்போ, அமைப்போ பாதிக்கப்படுவதில்லை.

வியர்வை வெள்ளமாக உடம்பில் பாய்வதைத் தடுக்க, வியர்வை உறிஞ்சும் பவுடர்களும் பயன்படுத்தப்படுகின்றன. சட்டை, பனியன், ரவிக்கை போன்றவற்றில் வியர்வைக்கறை படியாமல் இருக்கவும் இந்தப் பவுடர்கள் உதவுகின்றன.


வியர்வையால் சொறி, சிரங்கு ஏற்படக்கூடும். வியர்வை, உடம்பில் சுரக்கும் இயற்கை எண்ணெய்ப் பசையை வெளியேற்றுவதால் இவ்வித நமைச்சலும், தோல் தடிப்பும் ஏற்படுகின்றன. கழுத்துப்பட்டை, முதுகு, அக்குள் போன்ற இடங்களில், ஆடைகள் உரசுவதால் அரிப்பும் எரிச்சலும் அதிகமாகும்.

தோலுக்கு மேலே வந்த வியர்வை காய்ந்து, வெள்ளையாகப் படைபோல் தோலில் படர்ந்துவிடும். இது வியர்வைத் துவாரங்களை அடைத்துக் கொண்டு, வியர்வை தோலுக்கு மேலே வராதபடி தடுக்கும். அதன் காரணமாக வேர்க்குரு கிளம்பிவிடும். இதனாலும சருமம் தனது நிறத்தையும் மிருதுத் தன்மையையும் இழக்கும். இதற்காகவும் இந்தக் காலத்தில் லோஷன்கள் பல விற்கின்றன. சந்தனத்தைக் குழைத்து உடம்பில் பூசினாலும் வேர்க்குரு, துர்நாற்றம் இவையெல்லாம குறைந்துவடும். வியர்வைத் துவாரங்கள் அடைபட்டிருப்பதை நீக்கிவிட்டால், வியர்வை சுரந்து, ஆவியாகும் நிகழ்ச்சி ஒழுங்காக நடைபெறும். தோலுக்கு அடியில் வியர்வை சுரந்து, மேலே போக வழியில்லாமல் அடைபட்டுக் கிடக்கும் உபத்திரவம் நீங்கும்.

தோலில் இயற்கைத் திரவம் எப்பொழுதும் ஓரளவுக்குத் தங்கியிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அளவுக்கு அதிகமாக சோப்பு போன்றவற்றை உபயோகிப்பதால், தோல் ஈரம் வற்றிக் காய்ந்து, சொர சொரப்பாகிவிடும். ஆடைகள் அணியும்பொழுதும் மிக இறுக்கமாக அணியாமல், தளர்த்தியாக அணியவேண்டும். வியர்வையை ஓரளவு ஒத்தி எடுக்கக் கூடியதும், கிருமிநாசினியாகப் பயன்படக் கூடியதுமான பவுடர்களைக் கேட்டு வாங்கிப் பயன்படுத்துவதால், வியர்வை விளைக்கும் துர்நாற்றத்தையும், அரிப்பு எரிச்சலையும் போக்கி, உடம்பிலிருந்து நல்ல வாடை வீசும்படி செய்யலாம்.

இதற்கெல்லாம் பணம் செலவாகும். செலவில்லாமல் சுகம் பெறும் வழி, சோப்பு, பவுடர் எதுவும் பயன்படுத்தாமல், ஒரு நாளைக்குக் குறைந்தது இரு தடவை சுத்தமாகக் குளிப்பதேயாகும்!

— மு. மீனாட்சி



# இது உங்கள் பக்கம்!

**மாணவ மணிகளே !**

**இது உங்கள் பக்கம்.**

**இப்பகுதியில் நீங்கள் கதை, கட்டுரை, கவிதைகள், பொது அறிவுத் துணுக்குகள் முதலானவை எழுதி அனுப்பலாம். ஆனால் அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பொது அறிவுத் துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும். கல்வியோடு பிற துறைகளில் திறமையுள்ள மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய குறிப்புடன், 'பாஸ்போர்ட்' அளவு புகைப்படத்தையும் அனுப்பி வைக்கலாம். அத்துடன் ஆசிரியரின் கையொப்பமும் அந்தக் குறிப்பில் இருத்தல் வேண்டும்.**

**—ஆசிரியர்.**

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.


மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—*வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

TNSC-BANK/166



# சுற்றுப்புறச் சுகாதாரம்

'உலகச் சுற்றுப்புறச் சூழ்நிலை நாள்' ஆண்டுதோறும் ஜூன் 5-ஆம் நாளன்று உலகெங்கும் அனுசரிக்கப்படுகின்றது.

1972 ஜூன் மாதம் 5 ஆம் நாளில்தான், ஐ. நா. பொதுச் சபையின் உறுப்புநாடுகள் முதன் முறையாக ஸ்டாக்ஹோம் நகரில் கூடி, உலகில், சுற்றுப்புறச் சூழ்நிலை கெடுவதற்கான காரணங்கள் பற்றிக் கலந்துபேசின.

இந்தியப் பிரதமராயிருந்த திருமதி இந்திராகாந்தி அவர்களும் அக்கூட்டத்திலே கலந்து கொண்டார். சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்னைகள் பற்றிய தனது ஆழ்ந்த கவலையை அக்கூட்டத்தில் நிகழ்த்திய உரையிலே அவர் தெரிவித்தார்.

வளரும் நாடுகளிலுள்ள சுற்றுப்புறச் சூழல் பிரச்னைகள், போதிய அளவுக்கு மேம்பாடு அடையாத சூழ்நிலைகளாலேயே ஏற்படுகின்றன என்கிற உண்மையை ஐ.நா. மனிதச் சுற்றுப்புறச் சூழல் மாநாடு வலியுறுத்தியுள்ளது. குடிநீர் வசதி, வீட்டுச் சுகாதார வசதி, எரிபொருள், போக்குவரத்து, தொலைத் தொடர்புத்துறை, மருத்துவப் பாதுகாப்பு முதலியவை மிகக் குறைவாகக் கிடைப்பதனால்தான் சுற்றுப்புறச் சூழல் பிரச்னைகளே தோன்றுகின்றன.

இப்பிரச்னைகளைச் சமாளிக்க, மேம்பாடு என்பது ஓர் அத்தியாவசிய முன்தேவை.

தொழில்நுட்ப உபயோகம், பொருளாதார வளர்ச்சிக்கான வழக்கமான முறை போன்றவை இப்பிரச்னைகளைத் தீர்ப்பதன்றித் தீவிரப்படுத்தவே செய்யும் என அறியப்படுகிறது.

இந்தியாவில், புதுடில்லியில் உள்ள விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறையின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் ஒருங்கிணைப்புக்கான தேசியக் குழு, மக்களுக்கு எவ்வகையில் சுத்தமான ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழ்நிலையை அளித்திட முடியும் என்று தொழில்துறைக்கும் அரசுக்கும் நல்லபல ஆலோசனைகளைக் கூறி வருகின்றது.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு, பொதுவான சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுக்கு மிக முக்கியமானதாகும் என்று இக்குழு கருதுகிறது. காற்று, தண்ணீர், நிலம் ஆகியவற்றின் அசுத்தத்தைத் தடுப்பதற்காக— அனாவசியச் சப்தங்களைத் தவிர்ப்பதற்காக, குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் அதிகமான மனிதக் குடியேற்றத்தை நிறுத்துவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இக்குழுவானது வேண்டுகோள் விடுத்தது.

சுற்றுப்புறச் சூழ்நிலைபற்றி நாம் ஆராயப்புகுமுன் இவற்றையெல்லாம் முதலாவதாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

சிறந்த வாழ்க்கைத் தரத்தை அளிக்கத் தொழில் மயமாக்குதல் வேண்டும் என்றாலும், அதனுடன் நீர் மற்றும் காற்று ஆகியவை அசுத்தமாவதைத் தடுக்கும் வகையில் கவனமாக நாம் திட்டமிட வேண்டியது மிகவும் அவசியம்.

இந்தியா இன்னும் வளரும் நாடாயிருப்பதால வளர்ச்சி அடைந்த நாடுகளைப் போல் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்னையில் கவனம் செலுத்த இயலாது என்று நாம் பின்னணியிலிருந்து குரல் கொடுப்பது கூடாது. உண்மையில், அவர்களது அனுபவத்திலிருந்து நாம் பாடம் கற்றுக்கொண்டு, தொழில் வளர்ச்சியில் நமது நாடு ஈடுபட்டுள்ளபோதே இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

இந்த அழிவைத் தடுக்க, பொது மக்களிடையே ஒரு உணர்வைத் தூண்டுவதைவிட சிறந்த நடவடிக்கை வேறொன்றும் இருக்க முடியாது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் இரண்டு சதவீதம் மட்டுமே உள்ள சமுதாயம், அமைப்பு நிறுவனம் ஆகியவை அரசின் முடிவுகள் மற்றும் மக்களின் உணர்வைத் தூண்டுதல் ஆகியவற்றில் ஈடுபட்டு வெற்றி காண்கின்றன. இந்தியாவிலும் இதுவே நமது குறைந்தபட்ச நோக்கமாக இருக்க வேண்டும். மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவீதத்தினர் இதில் ஆர்வம் காட்டினாலும்கூடப் போதுமானது; நமது பிரச்னைகளில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டுவிடும்!

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைத் துறைக்குப் பிரதமரே தலைமை வகிக்கின்றார். இந்தத் துறைக்குச் சவாலான எதிர்காலம் காத்திருக்கின்றது. காடுகள், நில உபயோகிப்பு, கடல் மற்றும் காற்று ஆகியவை குறித்து தேசிய அளவில் கொள்கைகளை வெளியிட்டது இந்தப் புதிய துறை எடுத்துள்ள பல நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

புதிய விஷயமான சுற்றுப்புறச் சூழ்நிலைச் சட்டமும் முன்னேற்றமடைய ஆரம்பித்துள்ளது. சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு, இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை குறித்துச் சட்ட வரைவுகளைத் தயாரிப்பதில் இந்தத் துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதிப்பு ஆய்வுகளுக்குப் பின்னரே, வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். தொழில்நுட்ப ஆள் பலத்தைத் தருவதற்கான ஒரு உள்ளமைப்பு ஏற்படுத்தப்படும்.

நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைக் குழு, மற்றும் மாநில நீர் மற்றும் காற்று அசுத்தப்படுவதைத் தடுக்கும் வாரியம் ஆகியவற்றின் பணிகளை முடுக்கி விடுவதோடு, அவற்றை வலுப்படுத்தவும் வேண்டும். சுற்றுப்புறச் சூழ்நிலையுடன் சம்பந்தப்பட்ட எட்டு அமைச்சகங்களும் ஒன்றோடொன்று ஒத்துழைப்பதோடு, சுற்றுப்புறச் சூழ்நிலைத் துறையுடன் இணைந்து பணியாற்றினால் இத்திட்டத்தைத் திறமையாகச் செயல்படச் செய்ய இயலும்.

நாடாளுமன்ற இரு அவைகளிலிருந்தும் 70 உறுப்பினர்கள் கொண்ட சுற்றுப்புறச் சூழ்நிலை அமைப்பு ஒன்றினை அன்னை இந்திராகாந்தி அவர்கள் அன்றே துவக்கி வைத்தார்.

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்னைகளைக் குறித்துத் தெரிந்து கொள்ளுதல், இதனையொட்டித் தற்போதுள்ள இயந்திரத்தைப் பயன்படுத்துதல், இதுபற்றிய பிரச்னைகளை அவைகளில் எழுப்புதல், சட்ட நடவடிக்கைக்கான ஆலோசனை வழங்குதல் மற்றும் தொடர்புடைய மாநிலச் சுற்றுப்புறச் சூழ்நிலைக் குழுக்கள் மற்றும் குடிநீர் அசுத்தக் கட்டுப்பாடு வாரியங்களின் கூட்டங்களில் பங்கு கொள்ளுதல் ஆகியவை இந்த அமைப்பின் நோக்கங்களாகும்.

மாநிலச் சட்ட மன்றங்களிலும் இதே போன்று குழுக்களை ஏற்படுத்தவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய சட்டமன்றக் குழுக்கள் நாடாளுமன்றக் குழுவுடன் ஒத்துழைக்கும்.

தமிழ்நாடு அரசும் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்புக்கெனத் தனியொரு துறையினை 1983-ல் ஏற்படுத்தியது.

வருங்காலம் குறித்துச் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற மனித சமுதாயம் சுற்றுப்புறச் சூழ்நிலை குறித்தும் உணர வேண்டிய கால கட்டம் வந்துவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது!


—இல. இராசேந்திரன்

# பூச்சிகளைக் கொல்ல புதிய எதிர்-ஹார்மோன்கள்

பயிர்களை நாசமாக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு இனிமேல் டன் கணக்கில் பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. பூச்சிகளைக் கொல்ல புதிய ''எதிர் ஹார்மோன்'' ஒன்றை, சோவியத் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். ஒரு எக்டேர் நிலத்துக்கு இந்த மருந்தை 5 முதல் 10 கிராம் பயன்படுத்தினால் போதும்.

சோவியத் நாட்டின் தென் பகுதியில் சில தாவரங்கள் ''எதிர் ஹார்மோன்களை'' உற்பத்தி செய்கின்றன. இந்தத் தாவரங்களில் உணவருந்த வரும் பூச்சிகள் இந்த ''எதிர் ஹார்மோனில்'' ஒரு சிறு அளவை உட்கொண்டவுடன் மயக்கமடைந்து கோமா நிலையை அடைகின்றன. இதனைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள், இப்போது இந்த ''எதிர் ஹார்மோன்களை'' சோதனைச் சாலையில் தயாரிப்பதில் வெற்றி கண்டுள்ளனர்.

உருளைக்கிழங்குகளை அழிக்கும் கொலராடோ வண்டுகள் மற்றும் வேறு பூச்சிகள் ஆகியவற்றை ஒழிப்பதில் இந்த எதிர் ஹார்மோன்கள் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டுள்ளன. இதில் உள்ள இன்னொரு சிறப்பு என்னவென்றால், பூச்சிக் கொல்லி மருந்துகளைப் போல இதனால் சுற்றுப் புறச் சூழலுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படுவதில்லை. சில பூச்சிகள் பூச்சி மருந்துகளுக்குப் பழகி விடுவதால், அவற்றால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் இந்த எதிர் ஹார்மோன்கள் முன்பு எந்தப் பூச்சியின் வேலையும் பலிக்காது!



# குழந்தைகள் தின விழா



நேரு பிறந்த நாள்-குழந்தைகள் தினவிழா சென்னை கலைவாணர் அரங்கில் (14.11.86) சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள், இவ்விழாவில் பங்கேற்று குழந்தைகள் திரைப் படத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

வரவேற்புரையாற்றிய செய்தித்துறை இயக்குநா திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன, ஐ.ஆ.ப. அவர்கள் — ''குழந்தைகளைத் தம் உயிராக உடலாக உணர்வாக எண்ணினார் பண்டித நேரு அவர்கள். அந்த வகையிலே நேரு அவர்களின பிறந்த நாள் விழாவை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து கொண்டாடுகிறது. இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்ற வகையில் — குழந்தைச் செல்வங்களை நல்ல எதிர்காலம் நோக்கி ஊக்குவிக்கவே இந்த விழா கொண்டாடப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.



மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் தமது சிறப்புரையில் தெரிவித்ததாவது:

''குழந்தைகளைத் தெய்வமாகக் கொண்டாடிய நேரு அவர்களின் பிறந்த நாள் விழாவை, அரசு குழந்தைகள் தின விழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது. 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி' என்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் குழந்தைகளைத் தெய்வமாகக் கொண்டாடி வருபவராவார். எனவேதான் இந்த அரசு இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

''செல்வச் செழிப்புள்ள குடும்பத்திலே பிறந்திருந்தாலும் கூட ஜவகர்லால் நேரு அவர்கள் இந்திய நாட்டில் உள்ள சாதாரண மக்களின் - வறுமைப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டவராவார். புராணத்திலே இராமன் பதினான்காண்டுக் காலம் வனவாசம் போனான் என்பார்கள். அதே போல இந்திய நாட்டின் அடிமைத்தளை நீங்கவும், நாட்டில் சமத்துவமும் சமாதானமும் ஓங்கவும் பதினான்காண்டுக் காலம் சிறை சென்றவர் நேரு. குழந்தைச் செல்வங்களாகிய நீங்களெல்லாம் அவர் வழி நடக்க இந்தியாவைக் காக்க உறுதி பூண்டு வாழ வாழ்த்துகிறேன்''.

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றிய பின், தொடக்கப்பள்ளி இயக்குநர் திருமதி சரோஜினி அவர்கள் நன்றி கூறினார்.

விழா முடிவில், குழந்தைகள் மகிழ - குமரிக் கண்டம், வ.உ.சி. மாவட்டத் துவக்க விழா, ஆப்பிரிக்காவில் அப்பு ஆகிய திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

—நமது செய்தியாளர்



## 'தமிழரசு' இதழுக்கு குழந்தைக் கவிஞரின் பாராட்டு !

தமிழக அரசு வெளியிட்டு வரும் 'தமிழரசு' பத்திரிகை மிக அருமையாக வெளிவருகிறது. வடிவமைப்பு மிக நன்றாக இருக்கிறது. இதைப் போலவே, குழந்தைப் பத்திரிகை ஒன்றையும் தமிழக அரசு வெளியிட வேண்டும்.

—குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

(குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைகள் தின விழாவில் 15-11-86).





# குழந்தை இலக்கியம் வளர்ந்திட...

குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைகள் நாள் விழா 15.11.86 அன்று சென்னை மயிலை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடந்தது.

மாலை 4 மணிக்கு 'அடுத்த ஐந்தாண்டுகளில் குழந்தை இலக்கியம்' என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

போக்குவரத்து ஆணையர் திரு எஸ்.டி.காசிராஜன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''நாம் இரவு பகலாக உழைக்க வேண்டும். நிச்சயம் வெற்றி நம்மைத் தேடி வரும். நல்ல கதைகளை எழுதுங்கள். ஒரு புத்தகத்தைப் படித்து பத்துப் புத்தகங்களை எழுதக் கூடாது! நம்முடைய கடமை உழைப்பது. இதைக் கவனத்தில் கொள்ளுங்கள்'' என்றார்.

இந்தக் கருத்தரங்கில் திருமதி உஷா சுப்பிரமணியன், திரு இனியவன், பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர் ஆகியோர் பேசினர்.

மாலை ஆறு மணிக்குக் குழந்தைகள் நூல்கள் வெளியீட்டு விழா நடந்தது. தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநர் திரு புத்தனேரி சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தமிழ் வளர்ச்சி உயர் மட்டக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''நான் குழந்தை எழுத்தாளர் மட்டுமல்ல, குழந்தைக் கவிஞனும் கூட. அந்தக் காலத்தில் நான் சிறையில் இருந்த போது குழந்தைப் பாடல் எழுதியிருக்கிறேன். அதுவே எனது முதல் கவிதை. கிராமியக் கலைகளிலே குழந்தை இலக்கியம் ஒன்று. நாட்டில் சமாதானம் நிலவினால்தான் அந்த நாட்டில் இசை வளரும், இலக்கியம் வளரும்'' என்றார்.



மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் புதிய குழந்தை நூல்களை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''குழந்தை இலக்கியம் கவிதை-உரை நடை எப்படி இருத்தல் வேண்டும் என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழக அரசைப் பொறுத்தவரை, குழந்தை நலனை முக்கிய நலனாகக் கருதிப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

''ஆங்கிலத்தில் வெளி வரும் நல்ல நல்ல குழந்தை நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். விஞ்ஞான ரீதியான கதைகளைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். தமிழ்ச் சமுதாயத்துக்கு ஆக்க ரீதியான நூல்களைத் தர வேண்டும். ஒழுக்கம், நாணயம், தர்மசிந்தனை முதலான உணர்வுகளை ஊட்ட வேண்டும்'' என்றார்.

டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் குழந்தை இலகசியப் போட்டியிலும் எல்லப்பா—ரங்கம்மாள் நினைவுப் போட்டியிலும் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

ஏவி.எம். அறக்கட்டளையின் முதற்பரிசு தங்கப்பதக்கத்தையும் இரண்டாம் பரிசு வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றவர்கள் வருமாறு:

வாழ்க்கை வரலாறு எழுதியதற்காக திருமதி அரசு மணிமேகலை (முதற்பரிசு), திரு ஜானகிமணாளன் (இரண்டாவது பரிசு).

அறிவியல் நூல் எழுதியதற்காக திரு எம்.சோலையன் (முதற்பரிசு), திரு தி. பட்சிராஜன் (இரண்டாம் பரிசு).

எல்லப்பா - ரங்கம்மாள் நினைவுப்பரிசு: திரு தங்க சிவராஜன் முதல்பரிசு (ரூ.1000), திரு வி.ர.வசந்தன் இரண்டாவது பரிசு (ரூ.500).

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்கள் பேசுகையில், ''பிற மொழிகளில் வெளிவரும் நல்ல குழந்தை நூல்களைப் போலத் தமிழிலும் வெளி வர வேண்டும். குழந்தைகளுக்காக, ''சில்ரன்ஸ் டிரஸ்ட்'' அமைக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் டாக்டர் பூவண்ணன், டாக்டர் மதி சீனிவாசன், திரு பி.எஸ்.மணி, திரு எஸ்.சுவாமிநாதன், ஆகியோர் பேசினர். சங்கப் பொதுச் செயலர் திரு எச். கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் 98-ஆவது பிறந்த நாளை யொட்டி 15.11.86 அன்று சென்னையில் நடைபெற்ற குழந்தைகள் நாள் விழா தொடர்பான கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் தொடங்கி வைத்துப் பரிசுகள் வழங்கினார்.





# பழனி மலை பழங்குடிகள்

மதுரை மாவட்டத்தில் பாண்டியனது சரித்திரக் கலாச்சாரங்கள், பண்பாடுகள் ஆகியவைகளை ஒருங்கே திரண்டவாறு கோபுரங்கள், கலைக்கோவில்கள், எழுதம்தாவியங்கள் நமக்குக் காட்டுகின்றன. அதைப்போன்ற தமிழ்நாட்டின் ஒரு தரப்பைச் சார்ந்த ஆதிகுடிகளின் பண்பாடு, நாகரிகம், வளர்ச்சி ஆகியவற்றை மதுரை மாவட்டத்தில் உயர்ந்துள்ள மலைகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. அம்மலைகளில் மிகவும் முக்கியமானது மேற்குத்தொடர்ச்சி மலையைச் சார்ந்த பழனி மலையாகும். கீழ் பழனி மலையை ஒட்டிய சிறுமலை, தென்மலை, தாண்டிக்குடி, குராங்கணி என்னும் சிறுமலைகளில் பரவலாக முதுவர்கள், பலியர்கள், புலையர்கள, மன்னன், காட்டுநாயகன், இருளர், சோலகர், பனியர் ஆகிய ஆதிவாசிகள் காணப்படுகின்றனர். இவர்களில் மிகவும் முக்கியமானவாகள் முதுவர்கள், பலியர்கள் புலையர்கள் ஆவர்.

போடிநாய்க்கன் ஊரை அடுத்துள்ளதே குராங்கணி எனப்படும் சுமார் இரண்டாயிரம் அடி உயரமுள்ள சிறுமலையாகும். இதனை அணுக, வேண்டியபோக்குவரத்து வசதிகள் தற்போது உண்டு. இச்சிறுமலையில் காணப்படும் சிற்றூர்களில் முதுவர்கள் மற்றும் புலையர்கள் வசிக்கின்றனர். தம்பிரான் புல்லுகோடி எனப்படும் முதுவர்களின் குக்கிராமம் சுமார் பத்து கிலோ தொலைவில் அமைந்துள்ளது. சிறிது தூரம் வண்டிப்பாதையிலும், பிறகு ஒற்றை நடைப் பாதையிலும் நடந்து, மலையில் உயரமான இடத்தில், தனியாகப் பதினைந்து குடும்பங்களாக ஒன்று சேர்ந்து மலைச்சரிவுகளில் தனியாட்சி செலுத்தி வருகின்றனர் இவர்கள். மலைச்சரிவுகளில் இரண்டு, மூன்று வரிசைகளில் காணப்படும் அவர்களின் சிறிய மண்வீடுகள், மற்ற கீழ்நாட்டுக் கிராமங்களில் காணப்படும் வீடுகளைப் போன்றே அமைந்துள்ளன. அவை ஓலையும், அதன்மேல் காட்டுப்புல்லினாலும் மூடப்பட்டவை. இந்த ஆதிவாசிகள் இன்னும் பழமையிலும், எளிய வாழ்க்கையிலும், உலகத்தை அறியாதவர்களாகவும் ஒதுங்கி வாழ்ந்து வருகின்றனர்.


தமிழ்நாட்டுப் பழங்குடிகளில் எழுபது சதவிகிதத்திற்கு மேற்பட்ட ஆதிவாசிகள் விவசாயத் தொழிலில் முதலிடம் செலுத்தி வருகின்றனர். ஆனால், இங்குள்ள முதுவர்களுக்குத் தங்களுக்கென்று விவசாயம் செய்யத் தனி நிலம் கிடையாது. ஆகவே மிகவும் பிற்போக்கிலுள்ள இவர்கள் அருகிலுள்ள பயிர், தேயிலை, பழத்தோட்டங்களில் தொழிலாளிகளாகப் பணிபுரிகின்றனர். ஆடவர் தினப் படியாக ரூபாய் நான்கு அல்லது ஒரு படி அரிசி பெறுகின்றனர். அவ்வாறே பெண்டிர் ரூபாய் மூன்று அல்லது ஒரு படி அரிசி கூலியாகப் பெறுகின்றனர். இவர்களின் முக்கிய உணவு கேழ்வரகு, மற்றும் அரிசி ஆகும். மேலும் காடுகளில் கிடைக்கும் கிழங்குகள், தண்டுகள் வேர்கள், தேன் ஆகியவையும் இவர்களின் இதர உணவாகும். தங்கள் இருப்பிடங்களில் ஆடுகள், கோழிகள், வாத்துக்கள் ஆகியவற்றை வளர்த்து வருகின்றனர். நேரம் கிடைக்கும் சமயங்களில் தாங்களாகவே செய்த எளிய வலையுடன் அல்லது பொறியுடன் வேட்டையாடுவர். அம்பு எய்திப் பறவைகளைப் பிடிப்பதில் இவர்கள் சிறந்தவர்கள். கூழாங் கற்களை அம்புகளாகவும் உபயோகிக்கின்றனர்.

நே. தேவசகாயம்,
காப்பாட்சியர்,
மானிடவியல் பிரிவு,
அருங்காட்சியகம், சென்னை.



தேனைச் சேகரிக்கும் சொரக்காய்க் குடுவை

கேரளம், கோவை ஆகிய இடங்களிலுள்ள மலைப் பகுதிகளில் வாழும் முதுவர்கள், பழனி முதுவரை விட இன்னும் கீழ்நிலையில் உள்ளனர். அவர்களின் வீடுகள் கட்டையினாலும், தட்டியினாலும் ஆனவை. இன்னும் திருமணங்களில் தங்கள் மனைவியருக்குத் தாங்கள் செய்த சிறப்பு வேலை மிகுந்த மூங்கில் சீப்புகளை வெகுமதிகளாகவும், தாலியின் மதிப்பைப்போன்றதாகவும் கருதிப்பரிசாக அளித்து வருகின்றனர். தாயான முதுவர்கள் இன்னும் தங்கள் முன்னோர்கள் போலவே, தோளில் சரியும் சேலையில் முடிபோட்டுத் தங்கள் சிறு குழந்தைகளை முதுகில் தூக்கிச் செல்லுகின்றனர். தங்கள் உடையிலும், வேலையிலும் வெகுவாக இவர்கள் தங்களுடன் வேலை செய்து வரும் கீழ்நாட்டவரின் நட்பினால் புதிய மாறுதல்களை அடைந்து வருகின்றனர். போக்குவரத்து மூலமாகவும் மற்றும் நடந்தும் போடிநாயக்கன் வாரச்சந்தைக்குச்சென்று தேவையான பொருள்களை வாங்கி வருகின்றனர் - முக்கியமாகப் பண்டிகைக் காலங்களில்.





முதுவர் பழங்குடியினரின் மண்வெட்டி

சேர்ந்து அருகிலுள்ள வாழை, கொய்யா, எலுமச்சை, மாதுளம் பலா ஆகிய பெருந்தோட்டங்களில் நாற்று எடுததல, களை எடுத்தல், வாழை இலைபறித்தல், காய், பழங்களைப் பறித்தல் ஆகிய வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

முக்கியமாக வாழைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு பலியனிடமும் இரண்டு வித வெட்டுக்கத்திகள் உண்டு. ஒனறு ‘ட’ வடிவமும், மற்றொன்று ‘U’ வடிவமும் ஆனது. வாழைக்குலையை வெட்டவும, இலைகளைத் தரிக்கவும் இக்கத்தி

முதிர்ந்த பலியரைப் பற்றி ஒரு சில குறிப்புகள் கிடைத்துள்ளன. சுற்றிலும் மலைச்சரிவு; வாழைத் தோட்டத்தின் நடுவில், மற்ற காட்டுச் செடிகளின் நடுவே அமைந்துள்ளது அவரது சிறிய ஓலை வீடு. அழகர் 120 வயதாகியும் நான்கு திருமணம் தனது சொந்தத்திலே செய்திருந்தும், இந்த வயோதிக வயதில் மகவும் சுறுசுறுப்பாகவும், அமைதியுடனும் வீட்டின் எல்லாக் காரியங்களையும் கவனித்து வருகிறார்.

கொடைக்கானல், பகுதி பனைக்காடு கிராமத்தின் அருகே புதியதாக அமைக்கப்பட்டிருக்கும்




புலையரின் மீன் பிடிக்கும் பொறி

பலியர் எனப்படும் ஆதிவாசிகள் பழனிமலையில்ஒன்றான சிறுமலையில் வசிக்கின்றனர். திண்டுக்கல்லை அடுத்து சுமார் பத்து மைல் தொலைவில் சிறுமலை 2000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. மலையைச் சுற்றி வளைநது செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் பல உண்டு. பழையூர் என்னும் கீழ்நாட்டவர் வாழும் மலைப்பகுதியைப் பேருந்துமூலம் அடைந்து. அங்கிருந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில், காட்டில், மேட்டில், மலையில் நடந்து சிறுசிறு ஓடைகளையும் கடந்து செல்ல வேண்டும். பலியர் இக்காட்டு மலைப்பகுதிகளில் பெரிய பழத்தோட்டங்களில் பரவிக் கிடக்கின்றனர். கல்லரைக்காடு, செம்பூத்துக்காடு, ஐந்து மாமரத்துப்பள்ளம், தழைக்காடு ஆகிய சிறுசிறு கூட்டமாகப் பலியர் வசிக்கும் குக்கிராமங்களைச் சிறுமலையில் காணலாம். அவர்கள் இரண்டு மூன்று குடும்பங்களாகச்

கள் உதவுகின்றன. காய்த் தோட்டங்களில் வேலைபுரியும் ஆண்கள் 22 ரூபாய் வாரக் கூலியாகப் பெறுகின்றனர். இவ்வேலையைத் தவிர்த்து, சாலையில், தோட்டத்தில், பள்ளத்தாக்கில் காணப்படும் தேனை, நீண்ட கொம்பின் உதவியால் சேகரிப்பது இவர்களின் முக்கிய தொழிலாகக் கருதப்படுகிறது. மிகவும் எளிய பொறிகளுடன் நேரம் கிடைக்கும் சமயங்களில் வேட்டையாடுவர். மற்றும் காட்டின் கனிகள், வேர்கள், தண்டுகள், இவர்களின் இதர உணவாகும். பலியர்கள் நல்ல உடல் வலிமையைப் பெற்றுள்ளார்கள். ஐந்து மாமரத்துப் பள்ளம் என்னும் மலைப் பகுதியில் தன்னந்தனியாகத் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வரும் 120 வயதான அழகர் என்னும்

வி.எஸ்.ஆர்.புரம், பலியர்களின் புதிய கிராமம ஆகும். 1975ஆம் ஆண்டு படித்த கீழ் நாட்டு 20 வாலிபர்களின் பெரு முயற்சியால் ஒரு ‘‘உதவிக் குழு’’ அமைக்கப்படடது, அவர்களின் பண உதவியாலும், மற்றும் பெரிய தனவந்தர்களின் பொருளுதவியாலும் பத்து பலியர் குடும்பங்களுக்குப் புதிய கல்வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தற்பொழுது பலியர்களின் நல்வாழ்விற்காகக் குழந்தைகள் காப்பகமும், பெண்கள் தையலகமும் இயங்கி வருகின்றன.

முதுவர்கள், பலியர்கள் தவிர, புலையர் என்னும் பழங்குடியினர் தாண்டிக்குடி மலையில் இரண்டாயிரம் அடி உயரத்தில் வாழந்து வருகின்றனர். வத்தலக்குண்டு




வில்



எனப்படும் ஊரை மேற்கு நோக்கியதே தாண்டிக்குடி மலை. செல்வதற்கு வேண்டிய போக்குவரத்தும், சாலையும் உண்டு. மங்களம் கொம்பு காலனி, தாண்டிக்குடி காலனி ஆகிய சிற்றூர்களில் வாழும் புலையர்கள் சற்று நல்ல வசதிகளைப் பெற்றவர்களாகத் தென்படுகின்றனர். மங்களம் கொம்பு காலனியில், கீழ் நாட்டு மக்களின் இருப்பிடங்களுக்கருகே தமிழ்நாடு அரசு கட்டியுள்ள புதிய கல் வீடுகளில் சுமார் பதினைந்து புலையர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் தோட்டங்களில் வேலை செய்தல், மற்றும் இதர கூலி வேலைகளிலும் ஈடுபட்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். தினக்கூலியாக ஆண்கள் ரூபாய் ஆறும், பெண்கள் ரூபாய் மூன்றும் பெறுகின்றனர்.

பழனி மலைவாழ் மக்களாகிய முதுவர், பலியர், புலையர் ஆகியவரிடம் ஒருசில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. பழனிமலைகள் யாவும் அதிக உயரம் உள்ளவைகள் அல்ல. அவையாவும் சுமார் 2000 அடி முதல் 3000 அடி உயரம் உள்ளவை தான். மேலும் பழனி மலைகள் யாவும் கீழ்நாட்டுடன் போக்குவரத்து வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்மலைவாசிகள் யாவரும் தொழிலாளிகளாகவும், கூலியாட்களாகவும், தோட்டங்களில் பணிபுரிகின்றனர். அனைவரும் பயிர்த்தொழிலில் ஈடுபடவில்லை. இன்னும் மிகக் கூச்சத்துடன் கீழ்நாட்டவருடன் பழகுகின்றனர். கீழ்நாட்டு மக்களுடன் காய்த் தோட்டங்களில் இப்பழங்குடிகள் வேலை செய்தாலும் அதிக அளவில் நாகரிக முன்னேற்றம் காணப்படவில்லை. இப்பழங்குடிகள் இன்னும் எளிமையுடனும் ஓரளவு வாழக்கையில் திருப்தியுடனும் வாழ்ந்து வருகின்றனா.




சிறு பிராணிகளை வேட்டையாடும் ஈட்டிமுனை

பலியர் பழங்குடியினரின் கத்தி

இவ்விதமாக முதுவர் பலியர், புலையர் ஆகிய ஆதிவாசிகளின் சமூக, பொருளாதார வாழ்க்கை முறைகளை நேரில் பார்த்து, கண்டறிந்ததுமல்லாமல், அவர்களால் செய்யப்பட்டு தினமும் உபயோகிக்கப்படும், அவர்களின் எளிய வீட்டுப் பொருள்கள், தொழில் கருவிகள், பாத்திரங்கள், ஆகிய ஐம்பது கலைப் பொருள்கள் சென்னை, மதுரை அரசு அருங்காட்சியகங்களுக்கென அண்மையில் சேகரிக்கப்பட்டன. அவற்றில் சிறந்தவை சிலவற்றை மதுரை, சென்னை அரசு அருங்காட்சியங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பழங்குடிகளின் இக்கலைப் பொருள்களைக் காட்சிக்கு வைக்கும்பொழுது மலையில் வாழும் ஆதிகுடிகளின் வேறுபட்ட எளிய வாழ்க்கையை அவை படம் பிடித்துக்காட்டுவது போல அமைந்தாலும், அதன் வழியே நமது நாகரிகம், பண்பாடு, கலை உணர்ச்சி ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவும் முடிகிறது.

முதுவர் குடும்பம்



# தேசிய நூலக வார விழா

தமிழ்நாடு அரசு - பொது நூலகத் துறையின் 19-வது தேசிய நூலக வார விழா 14-11-86 முதல் 20-11-86 வரை சென்னையிலுள்ள ராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் இவ்விழாவைத் துவக்கி வைத்தார்.

பொது நூலக இயக்குநர் (பொறுப்பு) திரு. வ. ஆ. சிவஞானம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாத் தலைமையேற்ற கல்வித்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. தி.து. சுந்தர்ராஜ் இ.ஆ.ப. அவர்கள் கல்வி வளர்ச்சியில் நூலகத்துறை ஆற்றிவரும் பங்கும் பணிகளும் பற்றி விரிவாக உரையாற்றினார்.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. கி. கோபாலன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் சிலம்பொலி செல்லப்பன், ஸ்டார் பிரசுரம் உரிமையாளர் திரு. இராமநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பதிப்பாளர் சங்கச் செயலாளர்களில் ஒருவரான திரு. 'பூங்கொடி' வே. சுப்பையன், விழாவில் பங்கேற்ற பெருமக்களுக்கு மாலைகளும் சால்வைகளும் அணிவித்து வரவேற்றார்.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில்—''அறிவியல் பற்றிய நூற்கள் தமிழில் பெருக வேண்டும். விஞ்ஞானம் வளர்க்கிற-நம் நாட்டுக்கலையை, பெருமையை, பண்பாட்டு உணர்வை வளர்க்கும்படி உருவாக்கப்படுகிற நூற்களுக்கு அரசு என்றுமே நல்லாதரவு தரும்'' என்றார்.

விழா முடிவில், உதவி பொது நூலக இயக்குநர் திரு. அ. ஜகந்நாதன் நன்றி கூறினார்.

ராஜாஜி மண்டபத்தில் ஒரு வார காலம் நடைபெற்ற இவ்விழாவில் 46 பதிப்பகங்களின் நூல் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 5 ஆங்கில நூல் விற்பனை அரங்குகளாகும். ஆக மொத்தத்தில் ஏறத்தாழ 20 ஆயிரம் தலைப்புகளின் கீழான புத்தகங்கள் இவ்வரங்குகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டன.

இந்தத் தேசிய நூலக வார விழாவின் நிறைவு நாள் 20-11-86 அன்று ராஜாஜி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

வரவேற்புரையாற்றிய பொது நூலக இயக்குநர் (பொறுப்பு) திரு. வா. ஆ. சிவஞானம — ''பொது நூலகங்களின் மூலம் சமுதாயத்தில் நல்ல பல மாற்றங்கள், ஏற்படச் செய்கிறோம். குறிப்பிட்ட பிரிவில் படித்து வரும் மாணவ மாணவிகள் பல்வேறு பொருள்கள் பற்றியும் படித்துத் தெரிந்து கொள்ள நூலகங்களைப் பயன்படுத்தலாம்'' என்றார்.

விழாத் தலைமையேற்ற தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் பேசுகையில்- ''ஆண்டுக்கு ஆண்டு தமிழ் நூல்கள் வனப்போடும் பொலிவோடும் வெளியிடப்படுகின்றன. படைப்பவர்கள், பதிப்பாளர்கள், படிப்பாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கல்வி சிறந்த தமிழ்நாடு என்ற பாரதியின் சொல் இந்த வகையில் மெய்யாகி வருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.'' என்று குறிப்பிட்டார்.


கன்னிமரா பொது நூலக நூலகர் திரு அ.மு. சுந்தர்ராஜன் பேசுகையில் - ''இந்த நூலக வார விழா இங்கே மட்டுமல்ல; தமிழ்நாடு முழுமையும் உள்ள மாவட்டத் தலைநகர்களிலெல்லாம் இதேபோல் கொண்டாடப்பட்டு வருகிறது'' என்று பெருமையோடு சொன்னார்.

'கல்கண்டு' ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் பேசும் போது—''புத்தகங்களை இரவல் வாங்குவதைவிட விலைகொடுத்து வாங்கிப் படிக்கிற பழக்கம் மக்களிடம் பெருக வேண்டும். பதிப்பாளர்களிடம் இன்னும் அதிக அளவில் நூல் வாங்கி அரசு ஊக்குவிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.


பதிப்பாளர் சங்கச் செயலாளர்களில் ஒருவரான திரு 'மூவேந்தர்' முத்து தமது உரையில் ''தமிழ்ப் பதிப்பாளர்களின் நிலை உயர வேண்டுமானால் ஆண்டுக்கு இருமுறை நூலகங்கள் மூலம் புத்தகங்கள் வாங்கப்பட வேண்டும்'' என்றார்.

விழா நிறைவுரையாற்றிய போககுவரத்துத்துறைஆணையர் திரு. எஸ். டி. காசிராஜன் ஐ.ஏ.எஸ். அவர்கள்—''புதிய புத்தகங்களைக்கூட யாருக்கும் இரவல் தரலாம்; பழைய நூற்களை, அரிய நூற்களை அப்படித் தரக்கூடாது. தந்தால் திரும்ப வராது. பதிப்பாளர்கள் தமமுடைய வெளியீடுகள் பற்றி நாளேடுகளில் விளம்பரம் செய்கிறார்கள். அதன் மூலம் ஏற்படும் பலனை விட—ஏடுகள் தோறும் புத்தகங்கள் பற்றிய விமாசனம் வெளியிடப்படுமானால் அதன் மூலம் அதிகப் பலன் கிடைக்கும்'' என்றார்.

விழா முடிவில் - 19வதுதேசிய நூலக வார விழாவில் சிறப்புற அரங்கம் அமைத்ததற்கான முதல் பரிசு அருணோதயம் பதிப்பகத்திற்கும், இரண்டாம் பரிசு வானதி பதிப்பகத்திற்கும் — ஆங்கில அரங்கிற்கான ஒரு பரிசு 'ஏஷியன் எஜிகேஷனல் சர்வீஸ்' அரங்கிற்கும் அளிக்கப்பட்டது. மற்றெல்லா அரங்குகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



# மூதறிஞர் ராஜாஜி



ராஜாஜி அவர்களின் சிறந்த ஸ்னாப்ஷாட் இந்தக் கட்டுரை இடம் பெறுகிறது.

ஒரு காலத்தில் சேலம் மாவட்டத்தின் பகுதியாக இருந்த தர்மபுரி மாவட்டத்தில், ஓசூருக்கு அருகில், தொரப்பள்ளி என்னும் சிற்றூரில், சக்கரவர்த்தி ஐயங்கார் -சிங்காரம் அம்மையார் தம்பதிக்கு மூன்றாவது பிள்ளையாக 10.12.1878ல் பிறந்தார் ராஜாஜி.

பெற்றோர் அவருக்குச் சூட்டிய பெயர் இராஜகோபாலன். பின்னர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி என்றும், சி.ஆர். என்றும், ராஜாஜி என்றும் மக்களால் அழைக்கப் பெற்றார். பேரறிஞர் அண்ணா அவர்கள் ராஜாஜி அவர்களை மூதறிஞர் என்று சிறப்பித்துக் கூறினார்.

ராஜாஜி தமது ஐந்தாவது வயதில் தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவரது பெற்றோர்கள் ஓசூரில் குடியேறியதால் அங்கு நடுநிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

பன்னிரண்டாவது வயதில் மெட்ரிகுலேசன் தேர்வு எழுதினார். பின்னர் பெங்களூருக்குச் சென்று சென்ட்ரல் இந்துக் கல்லூரியில் சேர்ந்தார். விஞ்ஞானப் பாடங்களை விருப்பப் பாடங்களாக எடுத்துக் கொண்ட அவர், ஆங்கிலத்திலும் நாட்டம் செலுத்தினார். சர் வால்டர் ஸ்காட்டின் நூல்களை மிகவும் விரும்பிப் படித்தார். பதினெட்டாவது வயதில் பி.ஏ.,பட்டதாரியானார். சிறு வயதிலேயே நினைவாற்றல் அவருக்கு அதிக அளவில் இருந்து வந்தது. படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே பிறருடன் வாதம் செய்வதில் வல்லவராக விளங்கினார்.

மகனின் வாதத் திறமையையும் கூரிய அறிவையும் தெரிந்து வைத்திருந்த சக்கரவர்த்தி தனது மகனை, சென்னை சட்டக் கல்லூரியில் சேர்த்தார்.

சென்னையில், மாணவர்விடுதி ஒன்றில் தங்கிப் படித்து வந்தார் ராஜாஜி. ஒருமுறை சென்னைக்கு வருகைபுரிந்த சுவாமி விவேகானந்தர், அந்த மாணவர் விடுதிக்குச் சென்று தங்கினார். அவரை மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் வரவேற்றார் ராஜாஜி.

ராஜாஜியிடம் விவேகானந்தர் ஒரு வினாவை விடுக்க, அதற்கு அவர் உரிய பதிலை ஒரு கணத்தில் உரைத்துவிட்டார். ராஜாஜியின் அறிவுக் கூர்மை விவேகானந்தரை வியக்க வைத்துவிட்டது.

''இந்த இளைஞர் எதிர்காலத்தில் மிகச் சிறந்து விளங்குவார்'' என்று வாழ்த்தினார் விவேகானந்தர்.

பி.எல்.பட்டம் பெற்று வழக்கறிஞர் ஆனார் ராஜாஜி.

ஓசூர் பெரிய நகரம் அன்று. அங்கு வழக்கறிஞர் தொழில் நடத்திப் பொருளீட்ட முடியாது என்பதனை உணர்ந்தார். சேலம் நகருக்குச் சென்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டால் செல்வமும் சேர்க்கலாம், சிறப்பாகத் தொழிலும் புரியலாம் என்ற எண்ணத்துடன் சேலத்திற்கு வந்தார் ராஜாஜி.

**தமிழ்ப்பித்தன்**

புகழ்பெற்ற வழக்கறிஞர் ஒருவரிடம் சென்று பயிற்சி பெற விரும்பினார். அவர், பயிற்சி தருவதற்கு மறுத்துவிட்டார். அதைக் கண்டு இளம் ராஜாஜி தளர்ச்சியடையவில்லை. நேரடியாகவே தொழில் நடத்தத் தொடங்கினார். அவர், முதன் முதலாக ஒரு வழக்கை எடுத்து நடத்திய போது அவருக்கு வயது இருபத்தொன்றுதான்!

அவரது முதல் வழக்கே அவருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்து விட்டது. முன்பு எந்த வழக்கறிஞர் அவரைத் தமது உதவியாளராக ஏற்றுக் கொள்ள மறுத்தாரோ, அவரே ராஜாஜி நடத்திய வழக்கில் எதிர் வழக்காடினார். அவர், புகழ்பெற்றவர் ஆயிற்றே என்று கவலைப்படாமல் ராஜாஜி, துணிவாக வாதாடி, கேள்விமேல் கேள்வி கேட்டு, பெரிய வழக்கறிஞரின் வாதத்தைத் தவிடுபொடியாக்கினார். ராஜாஜியின் கட்சிக்காரர் வெற்றி பெற்றார்.

இளம் வழக்கறிஞர் ராஜாஜியின் திறமையைக் கண்டு சேலம்



நகரமே போற்றிப்புகழ்ந்தது; அக்கம் பக்கத்திலுள்ள சிற்றூர்களை எல்லாம் ராஜாஜியின் புகழ் எட்டியது.

'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்' என்று சொல்லப்படுவதுண்டு. ராஜாஜியின் கூர்த்த மதியை 'இந்நாட்டு மன்னர்'களான பொதுமக்கள் பெரிதும் பாராட்டினர். பொதுப்பணியில் அவரை ஈடுபட வைத்தனர். ராஜாஜியின் தொண்டினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர். அதன் விளைவு, சேலம் நகராட்சித் தலைவரானார் ராஜாஜி.

பொது வாழ்க்கையில் நாட்டம் கொண்ட ராஜாஜி, தமது வழக்கு மன்றப் பணிகளைக் குறைத்துக் கொண்டார். நகரமன்றப் பணிகளில் அதிக அக்கறை காண்பித்தார். அவரது நிருவாகத்தில் சேலம் நகரம் பல நன்மைகளைப் பெற்றது. பல இடங்களில் இரவுப் பாடசாலைகளை ஏற்படுத்தினார். ஏழைத் தொழிலாளிகள் அந்தப் பள்ளிகளில் பயின்று ஓரளவு எழுத்தறிவு பெற்றனர்.

ராஜாஜி தன்னம்பிக்கை கொண்டவர். மூட நம்பிக்கையை முறியடித்தவர். சேலத்தில் சூரமங்கலம் சாலையில் மாளிகை போன்ற வீடு ஒன்று இருந்தது. அதில், பேய் குடியிருக்கிறது என்ற பிரச்சாரம் நிலவி வந்ததால், அநத மாளிகையில் யாரும் குடி புகவில்லை.

இந்தச் செய்தியை அறிந்த ராஜாஜி, அந்த மாளிகையை வாடகைக்குப் பிடித்து, அதில் துணிச்சலுடன் குடி புகுந்தார். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அஞ்சினர். "பேய், சும்மாவிடாது! உயிருக்கே ஆபத்து தரும்" என்றும் சொல்லி வந்தனர். ராஜாஜி அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அந்த மாளிகையில் பல்லாண்டுகள் குடித்தனம் செய்தார்.

அவர் இறையுணர்வு மிகுந்தவர்; இந்து சமயத்தில் நீங்காத பற்றுடையவர். இதிகாசங்களை மதித்தவர்; ஆனால் மூடப் பழக்க வழக்கங்கள் பிடிக்காதவர்; சாதி பேதங்களை வெறுத்தவர். தீண்டாமையை வேரறுக்க முனைந்தவர்.

சேலம் கல்லூரியில் ஆதிதிராவிட இனத்து மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட காலத்தில், ராஜாஜி தலையிட்டு அவர்களுக்கு அனுமதி வாங்கித் தந்தார்.

சேலம் நகரத்தில் குடிநீர் வழங்கும் பணியில் ஆதிதிராவிட இனத்து ஊழியர்கள் பயன்படுத்தப்பட்டபோது, உயர் சாதிக்காரர்கள் அதனை எதிர்த்தார்கள். அவர்களுக்கெல்லாம் தக்க வகையில் பதிலிறுத்து நிலைமையைச் சமாளித்தார்.

சிதம்பரத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட இனத்துக் காரரான சுவாமி சகஜானந்தா அவர்கள் சேலத்துக்கு வருகை புரிந்தபோது அவருக்கு மாபெரும் வரவேற்பை அளித்து, விருந்தொன்று வழங்கி, சமமாகப் பந்தியில் அமர்ந்து உணவு உண்டார் ராஜாஜி.

இந்த நிகழ்ச்சியைக் கண்ட ராஜாஜியின் உறவினர்களும் இனத்தவர்களும் கண்டனங்களை உதிர்த்தனர். சாதியை விட்டு அவரை விலக்கி வைப்பதாகப் பயமுறுத்தினர். ராஜாஜி அதற்கெல்லாம் அஞ்சவில்லை.

கலப்பு மணங்களிலும் ராஜாஜி ஆர்வம் காட்டினார். டாக்டர் சுப்பராயன் – ராதாபாய் திருமணத்தை அவரே நடத்திவைத்தார். தமது மகள் லட்சுமிக்கும் அண்ணல்காந்தியடிகளின் மகன் தேவதாசுக்கும் ஏற்பட்ட காதலை அங்கீகரித்து, அவர்கள் இருவரின் கலப்பு மணத்திற்கு ஆதரவு தந்தார்.

அண்ணல் காந்தியடிகளின் கொள்கையில் பற்றுக் கொண்டு, காங்கிரஸ் தேசீய இயக்கத்தில் பணியாற்றினார். அந்நிய ஏகாதிபத்தியத்தால் கைது செய்யப்பட்டு, சிறைத்தண்டனையும் பெற்றார். பிரிக்கப்படாத சென்னை மாகாணத்தின் பிரதமராக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிறார் ராஜாஜி.

பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில் அமைந்த இடைக்கால மந்திரி சபையில் கைத்தொழில் அமைச்சர் பொறுப்பை ஏற்றார்.



1947 ஆகஸ்ட் 15ஆம் நாளன்று இந்தியா விடுதலை பெற்றது. அப்போது வங்காளத்தின் ஆளுநராக ராஜாஜி நியமிக்கப்பெற்றார்.

இந்தியாவில் இருந்து வந்த பிர்ட்டிஷ் கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டன் இந்தியாவை விட்டு வெளியேறிய போது, அந்தப் பொறுப்பு மூதறிஞர் ராஜாஜியிடம் ஒப்படைக்கப் பெற்றது. விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் என்ற பெருமையை ராஜாஜி பெற்றார்.

1950 ஜனவரி 26ல் இந்தியா குடியரசு நாடாயிற்று. அப்போது ராஜேந்திர பிரசாத் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதால் கவர்னர் ஜெனரல் பதவி முடிவுற்றது.

பின்னர் 1952ஆம் ஆண்டு சென்னை மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் ராஜாஜி.

அரசியல் துறையில் புகழ் பெற்று விளங்கிய ராஜாஜி அவர்கள், சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்திருக்கிறார். தகுதிவாய்ந்த பேச்சாளராக விளங்கியிருக்கிறார். ஆன்மீகத் துறையிலும் அவர் புகழ்பெற்றிருக்கிறார்.

இசையறிவு மிகுந்தவர் அவர். தந்தை பெரியாரின் இனிய நட்புக்குப் பாத்திரமானவர்.

1972 டிசம்பர் திங்கள் 25-ஆம் நாளன்று மறைந்த ராஜாஜி அவர்களின் பரு உடலைப் பார்த்துத் தந்தை பெரியார் கண்ணீர் விட்டுக் கதறி அழுத காட்சி இன்னும் பொது மக்களின் கண்களைவிட்டு அகலாதிருக்கின்றது.

தமிழக வரலாற்றில் மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்குத் தனி இடம் உண்டு.

# சுற்றுப்புறச் சூழல் கருத்தரங்கு

நவம்பர் 19-ஆம் நாளிலிருந்து டிசம்பர் 18-ஆம் நாள் முடிய சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மாதமாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளதையொட்டி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் சார்பில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குறித்த கருத்தரங்கம் 21-11-86 அன்று சென்னை கிண்டி பூங்காவில் நடைபெற்றது.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்த தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திரு. ஏ. பத்மநாபன், இ.ஆ.ப. தெரித்ததாவது:

''சென்னை நகரில் கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றில் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படுகின்ற ஊறுகளைக் களைவதற்குரிய கருத்துரைகளை வல்லுநர்களிடம் கேட்டறிவதற்குத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

''இதன் தொடக்கக் கட்டமாக இந்த மூன்று நீர்நிலைப் பகுதிகளின் கரைகளைச் சுற்றிலும் மரக்கன்றுகளை நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்தப் பகுதிகளில் பசுமை கொழிக்கும்.''

கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற வனவளம் மற்றும் மீனளஆணையர் மற்றும் செயலர் திரு எம்.ஏ. கே. தயூப் தமது உரையில் தெரிவித்தார் :

''போதுமான பாதுகாப்பின்றி வளர்ச்சியுறும் தொழிற்சாலைகளினால், சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு ஏற்படுகிறது.''

தலைமை வனப் பாதுகாவலர் திரு எஸ். கொண்டாஸ் தமது உரையில் தெரிவித்ததாவது:

''வனத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் சென்னை நகரத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று, மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்து வீட்டிலுள்ளோருக்கு எடுத்துரைப்பார்க்ள்.''


சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. புஜங்கராவ் ''இச். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மாதத்தில்—சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்துப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லப்படும்'' என்று கூறினார்.

பல பெருமக்கள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு கட்டுரைகளை இந்தக் கருத்தரங்கில் படித்தனர்.

இந்தக் கருத்தரங்க நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னர், தலைமைச் செயலர் திரு ஏ.பத்மநாபன் இ.ஆ.ப., இரண்டாவது செயலர் திரு. டி. கே. ஓசா மற்றும் அரசு அலுவலர் பலர், காமராஜர் நினைவக வளாகத்தில் மரக் கன்றுகளை நட்டனர்.

—நமது செய்தியாளர்





# தென்மண்டலப் பண்பாட்டுக் கலை விழா

'தாக்ஷிணி' -பெங்களூரில் 10.11.86 முதல் 8 நாட்கள் நடைபெற்ற, அகிலஇந்திய இசை, நடனம் மற்றும் கலை அம்சங்கள் நிறைந்த கலைவிழா. தென்னகத்தில் இக்கலைவிழா நடைபெறுவது இதுவே முதல் முறை.

தேசிய ஒருமைப்பாடு, தேச ஒற்றுமை ஆகியவற்றை வளர்த்து வலுப்படுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்ட பண்பாட்டு மையங்களில் ஒன்றான தென் மண்டலப் பண்பாட்டு மையத்தின் சார்பில் இவ்விழா நடைபெற்றது.

நாட்டில் உள்ள ஏனைய கலைகளின் விரிந்த காட்சியை தென்னகத்திற்கு அளிக்க வேண்டும் என்பதே இக்கலைவிழாவின் அடிப்படை நோக்கமாகும்.

தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான், மராட்டியம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற கலை விற்பன்னர்களும் துணைக் கலைஞர்களும் உள்ளிட்ட 800க்கும் மேற்பட்டோர் இவ்விழாவில் பங்குகொண்டனர்.

இந்துஸ்தானி, கர்நாடக சங்கீத நிகழ்ச்சிகள், இந்தியாவின் பழம்பெரும் சிறப்பு வாய்ந்த நாட்டிய வகைகளான பரதநாட்டியம், கதகளி, ஒடிஸி, குச்சுப்புடி, மணிபுரி மற்றும் கதக் ஆகியவற்றைக்கலைஞர்கள் படைத்தளித்தனர்.

நாட்டின் தொலை தூரப் பகுதியில் வசிக்கும் மக்களின் அசல் கிராமிய நடனங்கள் மற்றும் இசைகளுடன் பொய்க்கால் குதிரை, அரியானாவின் ஜீமர், லடாக், நாகாலாந்து, மிஜோரம் ஆகிய பகுதிகளின் கிராமிய நடனங்களும் மேலைநாட்டு 'பாலே' நடனமும் இடம் பெற்றன.

> பெங்களூர் விழாவின் முதல் நிகழ்ச்சியாக "ஜெய்பாரத்" என்ற தேசிய எழுச்சிப் பாடலை, பள்ளிக் குழந்தைகள் குழு மேடையில் நின்று பாடத் தொடங்கியது.
>
> "இந்தியத் தாய்க்கு வாழ்த்துப் பாடும்போது, அந்தக் குழந்தைகளுக்கு முதுகைக் காட்டியபடி நாம் உட்கார்வது சரியல்ல; எழுந்து நிற்போம்", என்று கூறி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் எழுந்தார். "நாம் எழுந்து குழந்தைகள் பக்கம் திரும்பி நின்றால், எதிரே உட்கார்ந்திருக்கும் மக்களுக்கு முதுகைக் காட்டுவதுபோல் ஆகுமே" என்று மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் கேட்டார். "இல்லை, இல்லை. நாம் சற்று ஓரமாக நிற்கலாமே" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் கூறியதும் மேதகு தமிழக ஆளுநரும், கர்நாடக ஆளுநரும், மாண்புமிகு கர்நாடக முதல்வர், புதுவை முதல்வர் ஆகியோரும், முக்கியப் பிரமுகர்களும் எழுந்து ஓரமாக நின்றவாறு பாடலை ரசித்து மகிழ்ந்தனர்.

இக்கலை விழாவை, மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் 10.11.86 அன்று தொடங்கி வைத்தார். மேடையின்மீது அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசை அடித்து அவர் துவக்கி வைத்தார்.

தென் மண்டலத்தில் உள்ளடங்கிய மாநிலங்களின் கைவினைப் பொருட்கள், புராதன மற்றும் நவீன் ஆபரணங்கள் ஆகியவற்றின் கண்காட்சியும் நடைபெற்றது.

கர்நாடக மாநிலத்தின் மேதகு ஆளுநர் திரு பானர்ஜி அவர்கள் ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

குழந்தைகள் கலைவிழாவை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மேடையில் ஒரு பிள்ளையார் சிலை வைக்கப்பட்டு அதை இருவர் வணங்குவது போன்று சித்திரிக்கப்பட்டு இருந்தது. அதை மூடி இருந்த் திரையை மாண்புமிகு தமிழக முதல்வர் விலக்கி விழாவைத்தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு புதுவை மாநில முதல்வர் திரு எம்.ஓ.எச். பரூக் அவர்கள், பண்பாட்டுக் கலை விழாவைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்து இசைவிழாவைத் துவக்கினார்.

இவற்றைத் தொடர்ந்து டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.



# இலங்கை இனப் பிரச்னை தீர பெங்களூரில் பேச்சுவார்த்தை

தெற்காசிய கண்டத்தில் உள்ள இந்தியா, பாகிஸ்தான், வங்க தேசம், இலங்கை, பூடான், நேபாளம், மாலத்தீவு ஆகிய நாடுகள் இணைந்து தெற்காசிய வட்டார ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ளக் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. இக் கூட்டமைப்பின் முதல் மாநாடு வங்க தேசத்தில் நடந்தது. இரண்டாவது உச்ச மாநாடு 16-11-83; 17-11-86 ஆகிய நாட்களில் இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்றது.

இக்கூட்டமைப்பின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

மேதகு பூடான் மன்னர் ஜிக்மே சிங்கே வாஞ்சுக், மேதகு வங்கதேச அதிபர் எச். எம். எர்ஷாத், மேதகு மாலத்தீவு அதிபர் மம்மூன் அப்துல் கயூம், மேதகு நேபாள மன்னர் பீரேந்திரா, மாண்புமிகு பாகிஸ்தான் பிரதமர் முகமதுகான் ஜீனே ஜேர், மேதகு இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தெற்காசிய நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு, வளர்ச்சித் திட்டங்கள், குழந்தைகள் நலம், போதை மருந்துகளால் ஏற்படும் விளைவுகள், வன்முறை ஒழிப்பு போன்ற பல்வேறு பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள பெங்களூர் வந்திருந்த இலங்கை அதிபருடன் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் 15-11-86 அன்று இலங்கை இனப் பிரச்னை குறித்து விரிவாகப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

தமிழர் பிரச்னையில் இலங்கை மேற்கொண்டுள்ள நிலைக்கும் தமிழர் குழுக்களின் விருப்பத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்ப இந்தியப் பிரதமரும் இலங்கை அதிபரும் 16-11-86 அன்றும் விவாதித்தனர்.

பேச்சு வார்த்தைகள் முக்கியமானதொருகட்டத்தை அடைந்த நிலையில் இலங்கை அரசின் சமீபத்திய பிரேரணைகள் தொடர்பாகத் தமிழர் குழுக்களின் நிலையை விளக்குவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அழைப்பின் பேரில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் 16-11-86 அன்று பெங்களூர் சென்றார்.

மாண்புமிகு இந்திய வெளி விவகாரத்துறைத் துணைஅமைச்சர் திரு நட்வர் சிங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும் இருமுறை சந்தித்து இலங்கைப் பிரச்னை குறித்து விவாதித்தனர்.

இச்சந்திப்புக்களின் போது மாண்புமிகு இந்திய உள்துறைத் துணை அமைச்சர் திரு ப. சிதம்பரம், இந்திய அரசின் வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேசுவரன், இலங்கையில் இந்தியத் தூதர் திரு ஜே. என். தீட்சித், மாண்புமிகு தமிழக உணவுத் துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இப்பிரச்னையில் தொடர்ந்து அரசியல் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை ஆராய, பெங்களூர் விமான நிலையத்தில் இரு நாட்டின் தலைவர்களும் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இலங்கை அதிபர் தமது நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்ற பின்னர், பெங்களூர் விமான நிலையத்தில் மாண்புமிகு தமிழக முதல்வருடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் சுமார் அரை மணி நேரம் ஆலோசனை நடத்தினார். மாண்புமிகு தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் உடன் இருந்தார்.

இந்தியப் பிரதமர் பின் செய்தியாளர்களிடம், 'இலங்கை அரசின் புதிய சமரசப் பிரேரணைகள் அடங்கிய திட்டம் நல்ல திட்டமாகும். இலங்கை அரசுக்கும் தமிழினப் போராளிகளுக்கும் இடையே நேரிடையாகப் பேச்சு வார்த்தை நடைபெற இதுவே அடிப்படையாக அமைய வேண்டும்' என்று கூறினார்.

இந்தப் புதிய சமரசப் பிரேரணைகள் மூலம் தமிழர்கள் இலங்கையில் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நான்காவது நாளாக 18-11-86 அன்று இந்தியாவும் இலங்கையும் இப்பிரச்னை குறித்துத் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தின. டெல்லியில் இப்பேச்சு வார்த்தைகளை மேலும் தொடர்ந்து நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.



# தேசிய ஒருமைப்பாட்டு வாரவிழா

அன்னை இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள் விழா தேசிய ஒருமைப்பாட்டு நாளாகக்கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில், 19.11.86 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கிய இவ்விழா, ஒருவார விழாவாக 25.11.86 வரை கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்மட்டக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.

வண்ணப் பூக்களாலும் சர விளக்குகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்த அன்னை இந்திரா காந்தி படத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பேசியதாவது:

''நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே, என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே! இன்று அன்னை இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள். நாட்டு ஒற்றுமைக்காகத் தனது உயிரையே...

—இப்படித் தமது பேச்சைத் தொடங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு இதற்கு மேல் பேச இயலாமல் விழிநீர் பெருக்கினார். பின்பு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மேலே பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:

''நாட்டு ஒற்றுமைக்காகத் தன் உயிரையே காணிக்கையாக்கியவர் அன்னை இந்திரா அவர்கள். அவரது மறைவை நினைக்கும்போதே என் நெஞ்சம் பதறுகிறது. வன்முறையின் கோரக் கரங்களுக்கு அவரை நாம் பறிகொடுத்துவிட்டோம்.

''அவர் பிறந்த நாளைத் தேசிய ஒருமைப்பாட்டுநாளாகக் கொண்டாடுகிறோம். அன்னை இந்திரா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

''நமது முன்னோர் பெரும் தியாகம் செய்து விடுதலையை நமக்குப் பெற்றுத் தந்தார்கள். இந்த விடுதலை நமக்கு நிலைத்து நிற்க, நாட்டு ஒற்றுமைதான் முதல் தேவை. மதம், மொழி, இனம் இவற்றின் பெயரால் தீய சக்திகள் ஒற்றுமையைச் சிதைத்து வருகின்றன. இந் தீய சக்திகளை எதிர்த்து உறுதியுடன் போராடுவோம்.

''நாட்டு ஒற்றுமைக்குக் கேடு விளைவிப்பவர்கள் மக்களின் விரோதிகள். அவர்களை அடையாளம் கண்டு ஒதுக்கித் தள்ளுவோம்.

''ஒருமைப்பாட்டைக் காக்க, பலம் மிக்க இந்தியாவை உருவாக்க, உலக சமாதானத்தை வளர்க்கப் பாடுபட்டு வருகின்ற பிரதமர் ராஜீவ் அவர்களின் கரங்களுக்கு நாம் வலிவு சேர்க்க வேண்டும்.

''ஒற்றுமை, அமைதி, முன்னேற்றம் என்கிற உயர்ந்த நெறிகளுக்காக நாம் அனைவரும் ஓரணியில் ஒன்று திரளுவோம். அன்னை இந்திராவின் ஒருமைப்பாட்டுக் கொள்கைக்கு உறுதுணையாக இருப்போம். வெல்க இந்தியா. வாழ்க இந்திய ஒருமைப்பாடு. அண்ணா நாமம் வாழ்க. நன்றி. வணக்கம்.''

இந்த விழாவில் தமிழ்நாடு சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் துணைத்தலைவர் திருமதி டி. யசோதா, ஜனதா தலைவர் திரு ஏ.எஸ்.ஏ.ஆறுமுகம், முஸ்லீம்லீக் தலைவர்திரு அ.க.ம.அப்துல்சமது, கா.கா.தே.கா. தலைவர் திரு குமரிஅனந்தன், பார்வர்டு பிளாக் தலைவர் திரு கே.முத்துவேல், குடியரசுக்கட்சித் தலைவர் திரு செ.கு. தமிழரசன் ஆகியோரும் வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு எம்.கல்யாணசுந்தரம், மாண்புமிகு தமிழ்வளர்ச்சி உயர்மட்டக் குழுத்தலைவர், டாக்டர் ம.பொ.சிவஞானம்ஆகியோரும் பங்கேற்றுப் பேசினார்கள்.


சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் விழாவுக்கு வந்து சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் சார்பில், மாண்புமிகு தமிழ்வளர்ச்சி உயர் மட்டக் குழுத்தலைவர் டாக்டர் மா.பொ.சி. அவர்கள் 'தேசிய ஒருமைப்பாடு' உறுதிமொழியைப் படித்தார். உறுதிமொழியை அவர் படிக்கப் படிக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உட்பட மேடையிலிருந்தோரும், அரங்கினுள் நிரம்பியிருந்தோரும் திரும்பச் சொல்லி உறுதி ஏற்றார்கள்.

விழா முடிவில்-செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா.கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

தேசிய ஒருமைப்பாட்டு வார விழா நடைபெறும் எல்லா நாட்களிலும் கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியரின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

—நமது செய்தியாளர்



# பறக்க உதவும் பேச்சுப் போட்டி

"பயணம் படிப்பினைத் தருகிறது".

இந்தத் தலைப்பில் ஒரு ஆங்கிலப் பேச்சுப்போட்டி தமிழ நாட்டு மாணவர்களுக்காக நடந்தது. இந்தப் போட்டியை ஏர் இந்தியா, ஈஸ்டர்ன் ஏர்வேஸ், இந்து நாளிதழ் ஆகிய நிறுவனங்கள் முன்னின்று நடத்தின. 10-வது வகுப்புவரையிலும் உள்ள மாணவ மாணவியா இதில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் மொத்தம் நான்காயிரம் பள்ளிகள் உள்ளன. இவற்றில் ஒரு பள்ளியிலிருந்து ஒரு மாணவர் என்ற கணக்கில் சிறந்த மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்த மண்டலத்தில் உள்ள பள்ளிகளின் சிறந்த மாணவர்களுக்கிடையே போட்டி நடத்தப்பட்டு, அதிலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்படி மற்ற மண்டலங்களின் சிறந்த மாணவர்களுக்கு இடையிலான போட்டி மூலம், மாவட்டத்திற்கு ஒரு சிறந்த மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் மாவட்டத்திலேயே சிறந்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கிடையே போட்டி நடத்தி, அவர்களிலிருந்து அரை இறுதிப் போட்டிக்கும், பின்னர் அதிலிருந்து இறுதிப் போட்டிக்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதிக் கட்டமாக, இந்தப் போட்டியில் ஆறு மாணவர்கள் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இறுதிப் போட்டி, பண்டித ஜவகர்லால் நேரு பிறந்தநாளான 14.11.86 அன்று காலை சென்னை கலைவாணர் அரங்கில் நடந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா, போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு. கே. ரவீந்திரன், சென்னைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திருமதி அகிலா சிவராமன், அமெரிக்கப் பெண் பத்திரிகையாளர் திருமதி நான்ஸி டீன் ஸ்டெம்பிள், சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் டாக்டர் எம். எஸ். ஸ்ரீநாத் ஆகியோர் நடுவர்களாக இருந்து இந்த ஆறு மாணவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசு: பி.ராதாகிருஷ்ணன் (8ஆம் வகுப்பு, விகாசா மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி, மதுரை).

இரண்டாம் பரிசு; எஸ்.ஹேமமாலினி, (9ஆம் வகுப்பு, பதமா சேஷாத்திரி பாலபவன் சீனியர் செகண்டரி பள்ளி, சென்னை)

மூன்றாவது பரிசு: ஆர்.சித்ரா (10ஆம் வகுப்பு, பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீரங்கம்).

நான்காவது பரிசு: வினோத் ஜார்ஜ் ஜோசப் (8ஆம் வகுப்பு, எஸ்.எஸ். சுப்பராய நாடார் அரசு உயர்நிலைப் பள்ளி, விருதுநகர்)

ஐந்தாம் பரிசு: கே.எஸ்.வித்யா (10ஆம் வகுப்பு, தூய இருதய மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம்).

ஆறாவது பரிசு: எஸ்.நிர்மலா (8ஆம் வகுப்பு, பிரீக்ஸ் மேல்நிலைப்பள்ளி, உதகமண்டலம்).





## சென்ற இதழில்....

***கூட்டுறவின் சிறப்பை உணர்த்தும் படங்கள் சென்ற இதழின் (16.11.86) அட்டையை அலங்கரித்தன.***



பி. ராதாகிருஷ்ணன்



எஸ். ஹேமமாலினி



ஆர். சித்ரா



வினோத்



கே.எஸ். வித்யா



எஸ். நிர்மலா

போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர் ஆறு பேருக்கும, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமது சொந்தப் பொறுப்பில் தலா ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் மாணவர்களைப் பாராட்டிப் பேசுகையில், ''புரட்சித் தலைவர் ஆட்சியில் கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழகக் கல்வித் துறை பொற்காலம் கண்டுள்ளது. மாணபுமிகு முதல்வர் அவர்கள் உடல்நிலை சரியில்லாதிருந்த போது, அவர் விமானம் மூலம் அமெரிக்கா போக ஏர் இந்தியா நிறுவன அலுவலர்கள் செய்த உதவிகளுக்கு லட்சோபலட்சம் தமிழ் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

தேர்ந்தெடுக்கப்படும் முதல் மாணவர் சென்னையிலிருந்து நியூயார்க், அங்கிருந்து ஆர் லாண்டோ நகருக்குச் சென்று திரும்பலாம். மாணவரோடு அவரது தந்தையும், பள்ளித் தலைமையாசிரியரும் கூட இலவசமாக அமெரிக்கா சென்று திரும்பலாம். அமெரிக்காவில் 3 நாட்கள் தங்கியிருக்கும் செலவையும், 'வால்ட் டிஸ்னி' உலகத்தையும் பார்த்துத் திரும்பும் செலவையும் இந்த மூன்று நிறுவனங்கள் கூட்டாக ஏற்கும்.

2வது பரிசு பெறும் மாணவருக்கும் இதே மாதிரி பயணம்; ஆனால் இவருடன் அவரது பள்ளி ஆசிரியருக்கு மட்டுமே இலவச டிக்கட் வழங்கப்படும்.

3-வது பரிசு பெறும் மாணவருக்குச் சென்னையிலிருந்து பம்பாய்-டெல்லிக்குச் சென்று திரும்ப இலவச டிக்கெட் தரப்படும். இவருடன் அவரது பெற்றோர், தலைமை ஆசிரியர் உடன் செல்லவும் இலவச டிக்கெட் உண்டு.

4, 5, 6 ஆகிய கடைசி மூன்று பரிசுகளைப் பெறும் மாணவர்க்குச் சென்னையிலிருந்து பம்பாய் சென்று திரும்ப இலவச டிக்கெட் தரப்படும்; இவர்களுடன் உடன் செல்ல அவரது ஆசிரியருக்கு மட்டுமே இலவச டிக்கெட் வழங்கப்படும்.

விழாத் தொடக்கத்தில் ஏர் இந்தியா நிறுவனத்தின் தென்னிந்திய மேலாளர் திரு.பி.ஆர். சத்தியநாராயண ராவ் அனைவரையும் வரவேற்றார். துணை மேலாளர் திரு. பி.ஜே. ரோட்ரிக்ஸ் நன்றி கூறினார்.

**— நமது செய்தியாளர்**

## 'உலகத்தைத் முதுகில் சுமப்பவர்!

சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியத்தை, புதுமையானதொரு வழியில் உலக மக்களுக்கு எடுத்துச்சொல்லி வருகிறார், கனடா நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஜான் வாலன்டைன். இதற்காக அவர் தனது முதுகில் உலகக் கோளத்தைச் சுமந்தபடி நாடு நாடாகச் சென்று மக்களை எழுச்சி பெறச் செய்கிறார். 1986 ஜூன் 5 உலகச் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நாளையொட்டி புதுடில்லியில் பேசினார்.

''குழந்தைகளைக் குறையுங்கள்; காடுகளை வளருங்கள்'' என்பதே இந்த விஞ்ஞானியின் முழக்கமாக இருந்து வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Exotic Designs for the New Year
A new range added in Chiffon, Polyester, Silk and Cotton sarees for you.
Visit Co-optex showroom.
Co-optex
Handlooms
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

